

இந்திரா செளந்தர்ராஜன்

# நான்காம் சக்தி

# நான்காம் சக்தி

## (காற்றாய் மாறிவிடு)

## (இலஹிமா)

இந்திரா சௌந்தர்ராஜன்

மின்நூல் ஆக்கம்: தமிழ்நேசன்

# காற்றாய் மாறிவிடு

# நான்காம் சக்தி

## 1

***ம**ழை! காற்றானது தனது கரங்களால் ஏந்தி வந்து தரும் நமக்கான பிரதான வஸ்து இது. மழை இல்லையேல் மண் இல்லை. இந்த மழையைப் பொழிய வைப்பது காற்றே. மேகத்தில் கட்டிக் கொண்டு கிடக்கும் நீரைக் காற்று தான் கரைத்து இலேசாக்கி உதிர வைக்கிறது. அதாவது ஒரு திடவடிவிலான பனிக்கட்டி போன்ற மேகம் மிதந்து திரியும். வானில் காற்றே கிரியை புரிந்து மழையை உருவாக்கி அதை பூமி நோக்கி அனுப்புகிறது.*

*ஆகாயத்தில் நிகழும் இந்த வினைச்செயலின் பின் புலத்தில் ஒரு ஆச்சரியமான விஷயம் உள்ளது. திடவடி வாய் நெருக்கமாய் உள்ள மேகமோ மிதக்கிறது. ஆனால் அதிலிருந்து உதிர்ந்து விழும் துளிகளோ பூமியை அடைந்து விடுகின்றன. எடை குறைந்த நீர்த் துளிகளால் மிதக்க முடியவில்லை. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா, மிதக்கும் மேகம் அஷ்டமாசித்துக்களில் ஒன்றான 'இலஹிமா'வின் ஆதி சூத்திரத்தை உள்ளடக்கிய ஒன்று. அதனால்தான் திடமாக இருந்தும் மிதக்கிறது.. எப்படி?*

***அ**ந்தக் கல்யாணப் பத்திரிகையே பார்ப்பதற்கு பிரமிப்பை மூட்டிக் கொண்டிருந்தது. ஒரு பத்திரிகை மதிப்பு நிச்சயம் நூறுரூபாய்க்கு குறையாது.

ராஜகுடும்பத்துக் கல்யாணப் பத்திரிகை என்றால் சும்மாவா என்ன?

புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் குமரவேல்.

மணமகன் கருணாகரவர்மன்- மணமகள் நிலா என்னும் நித்யமாலினி.

குமரவேலின் நண்பன்தான் கருணாகரவர்மன். புகைப் படத்தில் பட்டுத் தலைப்பாகை கட்டி அதில் முத்துக் குஞ்சரமெல்லாம் இருக்க, அந்த காலத்து ராஜாக்களைப் போலவே இருந்தான் கருணாகரவர்மன். மணமகளும் சர்வாலங்கார பூஷிதையாக கழுத்தில் கொள்ளாத ஆபரணங்களோடு ஒரு சன்னச் சிரிப்புடன் தெரிந்தாள்.

"அவசியம் கல்யாணத்துக்கு வந்துட்றே. எதாவது வேலை இருக்கு வர முடியாம போயிடிச்சுன்னு சமாதானம் கிமாதானம் சொன்னே நான் ஒத்துக்க மாட்டேன்."

பத்திரிகையைத் தந்து அதில் புதைந்து கொண்டிருந்த குமரவேலிடம் சொல்லிக் கொண்டிருந்தான் கருணாகரவர்மன்.

"கட்டாயம் வருவேன் கருணா. உன் கல்யாணத்துக்கு வராமலா. எவ்வளவு வேலை இருந்தாலும் தள்ளி வெச்சுட்டு ஒருநாள் முந்தியே வந்துடுவேன். அரச குடும்பத்து கல்யாணம் எப்படி நடக்குதுன்னு பார்க்கவேண்டாமா?"

குமரவேலும் கருணாகரவர்மனிடம் பதிலுக்குச் சொன்னான்.

"நம்பலாமா?''

"அட என்னப்பா நீ, வீடு தேடி வந்துருக்கே. என் வாழ்க்கைல பல சிக்கலான நேரங்கள்ல ஆயிரம் ரெண்டா யிரம்னு அள்ளிக் கொடுத்த வள்ளல் நீ. உன் கல்யாண விஷயத்துல நான் பொய் சொல்வேனா?'' கையை இழுத் துப் பிடித்து குமரவேல் சொன்னபோது அதில் நட்பின் ஆழம் தெரிந்தது.

கருணாகரவர்மன் இல்லையில்லை குமரவேலும் அவன் நண்பர்களும் சுருக்கமாகவும் செல்லமாகவும் கூப்பிடும் கருணாவும் சிரித்துக் கொண்டே அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

வாக்ஸ் ஹால் என்கிற பெயரில் ஒரு கார். அந்த நாளைய சினிமாக்களில் பார்த்திருக்கலாம். கப்பல் போல நீளமாய் பார்க்க படுகம்பீரமாக இருக்கும்.

பெரும்பாலும் கோடீஸ்வரர்களே பயன்படுத்துவார்கள். அவர்களால்தான் அதை வைத்து பராமரிக்கவும் முடியும். கருணாவும் அந்த காரில்தான் வந்திருந்தான். அதில் ஏறிக் கொண்டு டாடா காட்டியபடியே சென்றான். வீதியே வேடிக்கை பார்த்தது.

குமரவேலின் பக்கத்து வீட்டுக்காரர் சதாசிவம்கூட ஆச்சரியமாகக் கேட்டார்:

"யார் குமார் இது. பெரிய கையாட்டம் தெரியுதே."

"ஆமாங்க. என் சினேகிதன்தான். யானை மலை ராஜா

குடும்பத்தைச் சேர்ந்தவன். பேர் கருணாகரவர்மன்.''

"அடேங்கப்பா யானைமலை அரசகுடும்பமா? கேள்விப் பட்டிருக்கேன், கேள்விப்பட்டிருக்கேன்" என்றவர் குமர வேலின் கையில் இருக்கும் கல்யாணப் பத்திரிகையை பார்த்தார். ஒரு அடிநீள அகலத்தில் தங்க முலாம் பூசியது போல ஜொலித்த அது, அந்த நாளில் அரசர்கள் அனுப்பும் பட்டு வஸ்திர செய்தித் தொகுப்பு போல பட்டு நூல் குஞ்சரங்களுடன் அவரை சுண்டியிழுத்தது.

"என்ன கல்யாணப் பத்திரிகையா?''

"ஆமாம் கருணாவுக்குதான் கல்யாணம், அதான் வீடு தேடி வந்து பத்திரிகை வெச்சுட்டு போறான்.''

"வெரிகுட். ஆமா எப்படி பழக்கம்?"

"காலெஜ்ல கூட தான் படிச்சான். யாரோடையும் அவ்வளவா பழக மாட்டான். ரொம்ப ரிசர்வ் டைப். ஆனா என்கூட மட்டும் மனம் விட்டு பழகினான்.''

"அப்படியா! அதான் ஆட்களை அனுப்பி பத்திரிகை வைக்காம நேர்லயே வந்துட்டுப் போறாரக்கும்.''

"ஆமாம் சார். கருணா ரொம்ப நல்ல டைப். ரொம்ப நாள் வரை எனக்கு அவன் ஒரு ராஜவம்சத்தைச் சேர்ந்த வன்கறதே தெரியாது. காலேஜ் ஃபங்ஷன் ஒண்ணுல பிரின்ஸ்பால் போட்டு உடைச்சப்பதான் எல்லார்க்கும் தெரியும்.''

''ரொம்ப எளிமையான நபர்னு சொல்லு.''

''ரொம்ப...''

குமரவேல் அழுத்தமாக அதற்கு ஒப்புதல் அளித்தான். அப்போது அவன் அம்மா ராஜாத்தியும் கையில் காய்கறிக் கூடையுடன் அவர்களிடையே வந்தாள். பத்திரிகையைப் பார்த்தாள்.

"நம்ம கருணா வந்து பத்திரிகை கொடுத்துட்டுப் போறான்மா. அவன் வந்த நேரம் பார்த்து நீ மார்க்கெட் டுக்கு போய்ட்டே."

"ஏம்பா கொஞ்சம் இருந்தா வந்துடமாட்டேனா? அப்படி யேவா போயிடப் போறேன்?''

"தலைக்கு மேல வேலைம்மா. அப்படியும் அரைமணி நேரம் உக்காந்திருந்துட்டுத்தான் போறான்'' - சொல்லிய படியே வீட்டுக்குள் அவளுடன் நுழைந்தான். அவளும் காய்கறிக் கூடையை ஒரு ஓரமாக வைத்து விட்டு பத்திரிகையை வாங்கி ஒரு பார்வை பார்த்தாள்.

''ரொம்ப காஸ்ட்லியான பத்திரிகைதான் இல்ல." பரவச மாய் கேட்டாள்.

''அரச பரம்பரையாச்சே."

"நீ இப்படி சொல்லும் போதுதான் ஞாபகம் வருது.

நம்ம பக்கத்து தெரு புவனாவோட மாமா சிவசாமியை தெரியும்தானே.''

"சொல்லுங்க, அவருக்கென்ன.''

"அவர் கொஞ்ச நாள் யானைமலை அரண்மனைல

வேலை பார்த்தவராம். கேள்விப்பட்டேன்.''

"அப்ப அவருக்கு நம்ம கருணாவைத் தெரிஞ்சிருக் கணுமே.''

''தெரியாம இருக்குமோ? அவரும்கூட கல்யாணத்துக்கு வந்தாலும் வருவார்'' என்றாள் ராஜாத்தி.

"யார் வந்தாலும் வராட்டியும் நான் போயே தீரணும்மா."

"அவசியம் போகத்தான் வேணும். நாம கஷ்டப்பட்ட பல சமயங்கள்ல நமக்குக் கை கொடுத்த தம்பியாச்சே." ராஜாத்தி ஒப்புதல் தந்தாள். கச்சிதமாய் இடையிட்டது குடு குடுப்பை ஒன்றின் சப்தம்.

ராஜாத்தியின் காதுகளும் கூர்மையாகின.

அதைக் குமரவேலும் கவனித்தான்.

"என்னம்மா குடுகுடுப்பைக்காரன் வர்றானாக்கும்.''

"ஆமாப்பா இன்னிக்கு என்ன சொல்லப் போறானோ?''

அவள் குரலில் கவலை தொனித்தது. அவன் முகத் திலோ கேலிச் சிரிப்பின் பரவல்.

"ஏம்மா எதுக்குத்தான் கவலைப்படறதுன்னு இல்லியா? நல்ல அம்மாம்மா நீ..'' என்றான்.

"அப்படி எல்லாம் சொல்லாதே. கம்பளத்தார் வாக்கு அந்த காளியோட வாக்கு போல."

"அம்மா, என்னம்மா நீ... அம்மா தாயே! பிச்சை போடுங்கன்னு கேட்டு பிச்சை எடுக்கறது ஒரு ரகம்னா

இப்படி குடுகுடுப்பையை ஆட்டி நல்ல காலம் பொறக் குதுன்னு பாசிடிவா நாலு வார்த்தை சொல்லி பிச்சை எடுக்கறது இன்னொரு விதம். அவ்வளவுதான். இந்த நவீன பிச்சைக்காரங்க பேச்சை எல்லாம் கணக்குல எடுத் துக்கிட்டு சுத்த பைத்தியம்மா நீ"

தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக அவளை விட்டு விலகினான். டி.வி. போட்டான். அதில் கிரிக்கெட் டெஸ்ட் மேட்சின் ஒளிபரப்பு. அவனுக்கும் கிரிக்கெட்டில் மிகுந்த ஈடுபாடு உண்டு. ஒன்றிப்போக ஆரம்பித்தான். வெளியே தேய்ந்த நிலையில் ஒலித்த குடுகுடுப்பை ஒலி மெல்ல அதிகமாகி அவன் வீட்டு வாசலிலேயே கேட்க ஆரம்பித்தது. ராஜாத்தியும் ஜன்னல் அருகே வந்து நின்று கொண்டு அவன் சொல்லப் போவதை கேட்க ஆரம் பித்தாள்.

"நல்ல காலம் பொறக்குது.. நல்ல காலம் பொறக்குது.. இந்த குச்சு வீட்டுக்குள்ள ஒரு மச்சு வீடால அச்சம் பிறக்க போகுது எச்சரிக்கையா இல்லாட்டா ஒரு நச்சர வத்தால் இந்த குடும்பம் சிதறிப் போயிடும். பீடை பிணின் னும் பாடை தீட்டுன்னும் பாடாப் பட வேண்டியிருக்கும். சக்கம்மா திருவாக்கை அக்கறையா கேட்டு சாந்தி பரிகாரம் செஞ்சா முட்டவரும் கஷ்டமெல்லாம் எட்டி நின்னே பிரி யும். சக்கம்மா சொல்றபடி கேட்டா நல்ல காலம் பொறக் குது. நல்ல காலம் பொறக்குது."

குடுகுடுப்பைக்காரன் செய்தி ராஜாத்தியை ஒரு மிரட்டு

மிரட்டியது. டி.வி.யில் கவனமாக இருந்த குமரவேலும் அதைக் கேட்டிருந்தான். வேகமாக எழுந்தவன் விறுவிறு வென்று வாசல் பக்கம் சென்றான்.

"ஏய், என்னய்யா உளறிகிட்டிருக்கே. பசிச்சா சோறு வேணும்னு கேளு... கண்டபடி எதையாவது சொல்லி மிரட்டிப் பாக்காதே... போய்யா முதல்ல.'' விரட்டினான்.

அந்த குடுகுடுப்பைக்காரனும் நின்று ஒரு பார்வை பார்த்து விட்டு கசங்கிப் போன முகத்துடன் நடந்தான்.

ராஜாத்தி ஓடி வந்தாள்.

"டேய் ஏண்டா அவனை துரத்தறே. அவன் சொன்னதைக் கேட்டியாடா? எனக்கு பயமா இருக்குடா... ஏதோ சாந்தி பரிகாரம்னுல்லாம் சொன் னானே. இந்தப்பா நில்லு.'' ராஜாத்தி கத்தினாள். குமரவேலோ பிடித்து இழுத்தான்.

"போம்மா உள்ளார.. குச்சு வீடு மச்சு வீடுன்னு அவன் தான் உளர்றான்னா நீ அதுக்கு மேல புலம்பிக்கிட்டு. இதெல்லாம் பணம் புடுங்கப் பாக்கற குறுக்கு வழிங்க. தெரிஞ்சுக்க."

அவளை இழுத்துக் கொண்டு உள்ளே போனான்.

"அப்படி இல்லடா கண்ணு. கம்பளத்தாருங்க மந்திர சித்து உள்ளவங்க. ராத்திரியில சுடுகாட்டுல பூஜை செய்து அந்த சக்தியாட வந்து, அவங்க வாக்கு சொன்னா அது அப்படியே நடக்கும்டா, நீ இளரத்தம். இந்த காலத்து

மனுஷன். உனக்கு இதெல்லாம் புரியாது'' என்று மூக்கைச் சிந்தினாள் ராஜாத்தி.

கன்னத்தில் கை வைத்தபடி சோகமாக அவளைப் பார்த்தவன் பெருமூச்சோடு நிமிர்ந்தான்.

"ஆமா நான் தெரியாமதான் கேக்கறேன். கேக்காமலே வீடு வீடா வந்து அது நடக்கப்போகுது, இது நடக்கப் போகுதுன்னு சொல்றானே. அந்த வீரப்பன் எங்க இருக் கான், பின்லேடன் எங்க இருக்கான்னு ஜக்கம்மாகிட்டே கேட்டு சொல்ல வேண்டியதுதானே.''

அவளுக்கு அவள் கேள்விக்கு பதில் சொல்லத் தெரிய வில்லை. அவன் எப்பொழுதுமே அப்படித்தான். சாமிக்கு அர்ச்சனை அபிஷேகம் என்று அவள் சாமான்கள் வாங்கி வந்தால், அவைகளை இல்லாதவர்களுக்கு கொடுக்கலாம். அவ்வளவும் வேஸ்ட் ஆகப்போகிறது என்பான்.

ராகுகாலம் எமகண்டம் இதிலெல்லாம் ராஜாத்திக்கு நம்பிக்கை அதிகம். அவனோ அந்த நேரத்தில்தான் வெளியே கிளம்புவான். நேரத்தில் நல்ல நேரம் கெட்ட நேரம் என்றெல்லாம் கிடையாது என்பான். மொத்தத்தில் குமரவேல் நூறு சதம் கண்ணால் பார்த்து, காதால் கேட்டு தீர விசாரித்து பின் நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ளும் ஒரு இந்தக்கால இளைஞன். ராஜாத்தியோ கவலையில் மூழ்க ஆரம்பித்திருந்தாள்.

# 2

*பறக்க முடிவதால் விலங்குகளில் சிலவற்றைப் பறவை என்கிறோம். அது எப்படிப் பறக்கிறது என்று ஆராய்ந்ததில் பிறந்ததுதான் விமானம்.*

*மேலே ஆகாயத்தில் வீசி எறியப்படும் எந்த ஒரு திடப்பொருளும் கீழே விழுந்தாக வேண்டும். அதுதான் புரி ஈர்ப்பு விசை நியதி. நியூட்டனின் தத்துவம் பிறந்ததும் இதில்தான்.*

*இந்த விசைத் தத்துவத்தை பல டன் எடையுள்ள விமானம் மட்டும் எப்படி வெற்றி கொண்டு பறக்கிறது?*

*கீழ் நோக்கி இழுக்கப்படும் புவி ஈர்ப்பு விசைக்கும் மேலாக மேல் நோக்கி எழும்பும் சக்தி மிகுந்த முயற்சியால் விமானம் பறக்கிறது. அவ்வளவும் ஆகாயத் தில்தான் நடக் கிறது. ஆகாயத்தில் காற்று வெளியில் காற்றை மையமாகக் கொண்டே நிகழ்கிறது.*

*பறவையும் தன் எடைக்கும் மேலான அளவு விசையை சிறகை அசைத்து உருவாக்க காற்று அது கீழே விழுந்து விடாதபடி தடுப்பதுடன் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கும் அந்த பறவையை நகர்த்தி விடுகிறது. விழுவதும், விழாமல் மேல் எழும்புவது முதல் மிதப்பது வரை எல்லாமே காற்றின் கைகளில் உள்ள விஷயம். அந்த காற்றுதான் நமக்குள்ளும் சென்று பிராணனை இயக் குகிறது. இந்த வாயு கீழ் நோக்கிய விசையில் அபானன் என்றும், மேல் நோக்கிய விசையில்*

***உதானன் என்றும் அழைக்கப்படுகிறது.***

***பறப்பதற்கும், மிதப்பதற்கும், கீழ் நோக்கிய விசையால் உருவாகும் அழுத்தம் அதன் காரணமான எடையில் இருந்து விடுபட்டு எடையற்றுப் போக இந்த உதானனே வழி காட்டுகிறது. இலஹிமாவின் வசப்பாட்டுக்கு வழி காட்டுவது உதானனே.***

பூஜையறையில் நெய் விளக்கேற்றிக் கொண்டிருந்தாள் ராஜாத்தி.

குமரவேல் கிரிக்கெட் டெஸ்ட் மேட்ச்சில்தான் கவனமாக இருந்தான்.

அவன் மனத்துக்குள் குடுகுடுப்பைக்காரன் நினைப்பே துப்புரவாக இல்லை. பதிலுக்கு கங்குலியும். டெண்டுல் கரும் நிரம்பியிருந்தனர்.

பந்துகளை இருவருமே மாறி மாறி பௌண்டரிகளாக மாற்றிக் கொண்டிருந்தனர்.

குமரவேல் மனதும் குதூகலத்தில் இருந்தது.

எப்படி அவனால் இப்படி எந்த கவலையும் இல்லாமல் இருக்க முடிகிறது என்றே ராஜாத்திக்கு புரியவில்லை. விளக்கேற்றி விட்டு வெளியே வந்தவள் குமரவேலைப் பார்த்து புலம்ப ஆரம்பித்தாள்.

"நான் மனசு கனத்துப் போய் கிடக்கிறேன். எப்ப என்ன நடக்குமோ, எது நடக்குமோன்னு. நீ என்னடான்னா கிரிக் கெட் பாத்துக்கிட்டிருக்கே. அப்படி என்னதாண்டா இருக்கு

அந்த கிரிக்கெட்டுல!''

"புலம்பாதம்மா... எதையும் ரசிக்கத் தெரியணும்... பார்.. பார்.. என்ன ஒரு ஷாட். சூப்பர்.''

"மண்ணாங்கட்டி... ஏண்டா தம்பி உனக்கு கொஞ்சம் கூட மனசுல பயமே இல்லையா?''

''எதுக்குப் பயம், தொண தொணக்காம போய் வேலையைப் பாரும்மா."

அவளைக் கத்தரித்து விட்டுவிட்டு திரும்பவும் டி.வி.யில் ஊன்றினான். ஒரு செகண்ட்தான். பட்டென்று மின்சாரம் கட்டாகி டி.வி. அமைதியானது.

"போச்சுடா, எங்கடா இன்னும் எதுவும் ஆகலையேன்னு பார்த்தேன். இண்டியா நொண்டியடிக்கும் போது நாள் பூரா பவர் இருக்கும். அதுவே நல்லா விளையாடும் போது பொறுக்காது. போய்டும்... அவன் அலுத்துக் கொள்ள, வாசலில் நிழலாடியது.

யார் என்று பார்த்தான். ராஜாத்தி சற்று முன் குறிப்பிட் டிருந்த புவனா என்பவரின் மாமாவான சிவசாமி என்பவர் தான் நின்று கொண்டிருந்தார்.

ராஜாத்தி அவரை பார்த்த நொடி வாயார வரவேற்க தொடங்கினாள்.

"வாங்க... வாங்க.. இப்பதான் கொஞ்சம் முந்தி உங்களைப் பத்தி பேசினேன்.''

"அப்படியா, என்ன விஷயம்?''

அவரும் கேள்வியோடு உள்ளே நுழைந்து ஹாலில் இருந்த நாற்காலி ஒன்றில் சௌகர்யமாக அமர்ந்து கொண் டார்.

குமரவேலும் சிரித்தபடியே எதிர்கொண்டான். "வாங்க சார்."

"எப்படி இருக்கே குமரவேல்?"

"நல்லாருக்கேன் சார்?"

"இன்னிக்கு ட்யூட்டிக்கு போகலையா?"

"இல்ல சார் இன்னிக்கு எனக்கு ஆஃப்."

"சண்டேதானே எப்பவும் வீக்லி ஆஃப்."

"அதெல்லாம் மத்தவங்களுக்கு. எங்க ஃபேக்டரிதான் த்ரூ அவுட் த இயர், எல்லா நாளுமே ஒர்க் பண்ணுமே."

"கரண்ட் இல்லையாக்கும்" நிமிர்ந்து, சுழலாத மின் விசிறியைப் பார்த்தபடியே கேட்டார்.

"ஆமாம் பாதி நேரம் கரண்ட் வரமாட்டேங்குது. வரப் போற சம்மரை நினைச்சா பயமா இருக்கு."

இருவரும் பொதுவாகவே பேசிக் கொண்டிருக்க, மளமள வென்று காபி கலந்து எடுத்து வந்து சிவசாமியிடம் நீட்டினாள் ராஜாத்தி.

"அப்புறம், வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா?"

"இருக்காங்கம்மா,இங்க எல்லாரும் சௌக்யம் தானே?"

"எங்க, காதுல உழுவக் கூடாததெல்லாம் விழுவது.

மனசே சரியில்லை.'' ராஜாத்தி அதுதான் சாக்கு என்று மூக்கைச் சிந்தினாள்.

"ஏம்மா, கொஞ்சம் சும்மா இருக்க மாட்டியா நீ. அங்கிள் அவங்களுக்கு வேற வேலை என்ன? விடுங்க. ஆமா நீங்க எங்க இவ்வளவு தூரம்?''

கத்தரித்து அவரை தன் பக்கம் திருப்பினான் குமரவேல்.

"நம்ம யானைமலை இளவரசர் உனக்கு ஃப்ரெண் டாப்பா?''

சிவசாமியும் அவனிடம் வந்த விஷயத்தை ஆரம் பித்தார்.

"ஆமாம் உங்களுக்கு தெரியாதா?''

''எனக்குத் தெரியாது. என் வீட்டுக்கு பத்திரிகை கொடுக்க வந்தப்ப உன் பேர் எழுதியிருந்த பத்திரிகையை பார்த்து நான் தான் கேட்டேன். அவரோட கிளாஸ் மேட்டாமே நீ''

"ஆமாம் அங்கிள். காலேஜ்ல மூணு வருஷம் ஒரு கிளாஸ்ல படிச்சோம். நீங்ககூட யானைமலை அரண் மனைல வேல பாத்தீங்களாமே. அம்மா சொன்னாங்க.''

''ஆமாம் குமரவேல். என்னோட பெரியப்பா விநாயகம் அங்க கார்வாரா இருக்கார். அவர் சிபாரிசுல எனக்கு அங்க அக்கவுண்டண்டா வேலை கிடைச்சிச்சு. ஆனா என்னால் அங்க தொடர்ந்து வேலை பார்க்க முடியலை. விட்டு விலகிட்டேன்.''

"அப்படியா, ஏன் அங்கிள்?"

''பெரிய காரணம் ஒண்ணுமில்லை யானை மலைல குளிர் அதிகம். எனக்கோ ஆஸ்த்மா. ஆகையால வேற வழி இல்லாம அந்த வேலையை விட்டேன்.''

"அப்படியா நான்கூட சம்பளம் பத்தலையோன்னு நினைச்சேன்.''

"அதெல்லாம் அங்க ஒரு குறை கிடையாது. ராஜா நாராயணவர்மாவுக்கு பெரிய மனசு, அள்ளிக் கொடுத் தார். எனக்குதான் கொடுப்பினை இல்லை.''

"நீங்க என்ன பண்ணுவீங்க... அதான் ஆஸ்த்மான்னு சொல்லிட்டீங்களே."

"அது போகட்டும்.நீ கல்யாணத்துக்கு போகப்போறியா?''

"நிச்சயமா, இது என்ன அங்கிள் கேள்வி?''

அவன் பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை போல் தோன்றியது. முகம் மாறிப்போனது. ராஜாத்தியும் கவனித் தாள்.

"அங்கிள், என் ஒரு மாதிரி ஆயிடிச்சு உங்க முகம்?"

"ஒண்ணுமில்ல, ஆமா இதுக்கு முந்தி நீ யானைமலை அரண்மனைக்கு போயிருக்கியா?''

"இல்ல, ஏன் எதுக்கு கேக்கறிங்க?"

"சொல்றேன். உன்கிட்ட அவங்களோட அரண்மனை யைப் பத்தியோ அங்க உள்ள சில அமானுஷ்யமான

பிரச்சினைகளைப் பத்தியோ கருணாகரவர்மன் எதுவும் சொன்னதில்லையா?''

"அமானுஷ்ய பிரச்சினையா, அப்படின்னா?''

"அப்ப உனக்கு எதுவும் தெரியாதுன்னு சொல்.''

"ஊஹூம்...''

"நல்லது. அதெல்லாம் உனக்கு தெரியாமலே போகட்டும். நானும் மனசு கேட்காமத்தான் வந்தேன். இதோ பார் குமரவேல். கல்யாணத்துக்கு போனா அட்சதையைப் போட்டு ஆசீர்வாதம் பண்ணிட்டு உடனே திரும்பிடு. அங்க தங்காதே. கருணாவே தங்கச் சொன்னாலும் நீ தங்காதே. தங்கினே அது உனக்கு நல்லதில்ல."

''என்ன நீங்க... என்னென்னமோ சொல்றீக... அங்க தங்கினா அப்படி என்ன ஆயிடும்?"

"உனக்கு அந்த அரண்மனை பத்தி எதுவும் தெரியாது. நான் ஆஸ்த்மாவுக்கு பயந்துகிட்டு மட்டும் வேலையை விடலை. யாருக்கு அங்க என்ன நடக்கும்னு தெரியாத ஒரு நிலை. இப்பவும் அங்க போற பலர் காணாம போறாங்க. அவங்க உயிரோட இருக்காங்களா, இல்லை செத்துட்டாங்களாங்கறதே தெரியலை. அங்க இருந்தா எனக்கும் எதுவும் நடக்கலாம்னு ஒரு பயம் ஏற்பட்டது. அதுதான் வேலையை விட்டேன். அது சரி இந்தக் கல்யாணம் பத்தி கருணா உன்கிட்ட எதாவது சொன்னாரா?''

"இல்லையே...''

"நிஜமா?''

''இதுல நான் பொய்சொல்ல என்ன இருக்கு அங்கிள்?"

"கல்யாணப் பத்திரிகை பார்த்துட்டு பொண்ணு யார்னு நீ கேக்கலையா?''

''காந்த மலை ஜமீன்தார் பொண்ணுன்னு சொன்னான்.''

"அவ்வளவுதானா?''

"அதுக்கு மேல சொல்ல என்ன இருக்கு?"

"நிறைய இருக்கு குமரவேல். அந்த பொண்ணு ஒரு விதவை. யானைமலை அரண்மனைல யாரும் கன்னியா ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணிக்க மாட்டாங்க. அது தெரியுமா உனக்கு?''

"அப்ப நிலாங்கற நித்யமாலினி ஒரு விடோவா?''

"ஆமாம், அதுமட்டுமில்ல. இளவரசர் கருணாகரவர் மனைவிட இரண்டு வயசு பெரியவளும்கூட."

"நிஜமாவா?''

"ஆமாம்... இது எதையும் நீ காட்டிக்காதே. அந்த அரண்மனைல இன்னொரு கொடுமையும் உண்டு. அங்க எந்த ஒரு நல்ல காரியம் நடத்தறதுக்கு முந்தியும் பெரிய அளவில் பலிகள் கொடுப்பாங்க. குறிப்பா புலியை பலி கொடுக்கறது அவங்க வழக்கம். புலி கிடைக்கலேன்னா ஒரு கன்னிப் பொண்ணை பலி கொடுத்துருவாங்க."

சிவசாமி சொல்லச் சொல்ல குமரவேலுக்கு தலையைச்

சுற்றியது. ராஜாத்தியோ வாயைப் பிளந்தபடி அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் முத்துமுத்தாய் வியர்க்கவும் தொடங்கி விட்டது. சில மணி நேரங்கள் முன்புதான் குடுகுடுப்பைக் காரன் எச்சரிக்கை செய்தான். இதோ சிவசாமி அது நிஜமாகப் போகிறது என்பது போல பேசிக் கொண்டிருக் கிறார்.

"நல்லாருக்கணும் நீங்க... காலைலதான் குடுகுடுப்பைக் காரன் வந்து கண்டதைச் சொல்லிட்டுப் போனான். பின்னா லேயே நீங்க வந்து ஜாக்ரதைங்கறீங்க. எல்லாம் நான் சாமிக்கு நெய் விளக்கு போட்ட பலன். பெரிய இடம்னாலே அங்க இப்படித்தான் எதாச்சும் ஏடாகூடமா இருக்கும். குமரா, வேணாம்ப்பா. ஒரு வாழ்த்து தந்தியை கொடுத்துட்டு ஒதுங்கிக்கோ. என்னங்க நான் சொல்றது? எனக்கு இருக்கறது ஒரு பிள்ளை, அவனுக்கு ஏதாவது ஆயிட்டா நான் என்ன பண்ணுவேன். சொல்லுங்க, நீங்களே.."

ராஜாத்தி ஒரு மூச்சில் நினைத்ததை எல்லாம் சொல்லி நிறுத்தினாள்.

சிவசாமி பதிலுக்கு குமரவேலைப் பார்த்தார்.

அவனிடம் அவர் சொன்ன செய்திகளால் சற்று குழப்பம்.

"என்ன குமரவேல், நான் சொன்னதை எல்லாம் உன்னால நம்ப முடியலையா?"

"இல்ல அங்கிள். இப்படிகூட நடக்குமான்னு யோசிச்சுப் பார்த்தேன்.''

"இதெல்லாம் ஒண்ணுமில்ல... சில ராஜகுடும்பத்து ஐதீகங்கள் இன்னும் மோசம். சரிபார்த்து முடிவு பண்ணு. நான் கிளம்பறேன்.'' வந்த வேலை முடிந்தது என்கிற மாதிரி சிவசாமி கிளம்பிச் சென்றார்.

"நல்லவேளை,மனுஷன் வந்து விபரத்தைச் சொன்னார். குமரா... வேணாம்பா, கல்யாணத்துக்கெல்லாம் போகாதே என்ன?''

சேலைத் தலைப்பால் முகத்தை ஒத்திக் கொண்டு அடுத்த வேலை பார்க்க நகர்ந்தாள் ராஜாத்தி.

கிரிக்கெட் டெஸ்ட் மேட்ச்சிலும் பயங்கர திருப்பம். இந்திய அணியில் எல்லோரும் அவுட்டாகியிருக்க, கடைசி நபர் தடுமாறிக் கொண்டிருந்தார்.

கிரிக்கெட்டும் வாழ்க்கையும் ஒன்று. எப்பொழுது எது நடக்கும் என்றே சொல்லமுடியாது. வெற்றியும் தோல்வியும் கடைசிப்பந்து வரை கண்ணாமூச்சி காட்டும். சிக்ஸருக்கு குறி வைத்த பந்தை எல்லைக் கோட்டில் ஒருவர் இருந்து பிடித்து கதையை முடித்து வைப்பார். சமயத்தில் கோட்டை விட்டு வெற்றியும் தருவார். நிமிஷத்துக்கு நிமிஷம் டென்ஷன். நொடிக்கு நொடி திருப்பம், அதனால்தான் மக்களால் கிரிக்கெட் மிகவும் நேசிக்கப்படுகிறதோ?

சிந்தனைகளோடு டி.வி.யை அணைத்தான்.

தனது இனிய நண்பனான கருணாகரவர்மன் தன் வயதுக்கு மேலான ஒரு விதவையைத் திருமணம் செய்து கொள்வதை நெருடலோடு சிந்தித்தபடியே சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பினான்.

# 3

*பொதுவில் அஷ்டமாசித்து பற்றி அறிந்து கொள்ள விரும்புகின்றவர்களுக்கு உடம்பும் மனதும் மிகமிகப் புரிந்திருக்க வேண்டும். இரண்டும் ஒன்றிற்கொன்று ஆதாரமாய் விளங்குவதை முதலில் புரிந்து கொண்டு, அதில் மனதை முதலில் மிக பலமுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மனதைக் கொண்டு உடம்பை மெல்ல ஆட்டிப் படைக்க வேண்டும். உடம்பை ஆட்டிப் படைக்க உணவுப் பழக்க வழக்கங்கள் மிக முக்கிய மானவை ஆகும். அதன் தொடர்ச்சியில் உள்ளதுதான் மூச்சுப் பயிற்சி. இதில்தான் பிராணவாயுவை சூட்சும நாடிக்குள் செலுத்துவதும் பின் பிராண அபான, உதான, சமான, வியான என்னும் பஞ்ச வாயுக்களையும் அதன் கிளை வாயுக்களான நாக, கூர்ம, கிரகா, தேவதத்த தனஞ்செயனைப் புரிந்து இயக்குவதும் ஆகும். இதில் இலஹிமா எனும் லேசான நிலையை அடைய உதவிடும் வாயு உதானன் ஆகும். இதை தனித்து இயக்கப் பழகுவது மூலம் நமது உடல் எத்தனை எடையுள்ளதாக இருந்தாலும் எடையற்றுப் போகும். நாமும் ஒரு மரக்கட்டை போலவோ தக்கைபோலவோ ஆவோம்.*

பாரதியார் பூங்கா!

நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னால் கண் கொள்ளாக் காட்சியாக பச்சைப் பசேலென்று இருந்தது. இப்பொழுது தண்ணிக்கு செத்த காடாக ஏதோ பேருக்கு இருக்கிறது. நல்லவேளை, அரசியல் செல்வாக்குடன் கொஞ்சம் கொஞ்சமாய் இடங்களை விழுங்கும் மனிதர்கள் கண்ணில் இன்னும் பட்டிருக்கவில்லை.

அதனால் பசுமை இல்லாவிட்டாலும் மழைத் தண்ணீ ரால் மட்டுமே வளர்ந்து விட்ட மரங்களின் நிழல் பூங்கா முழுக்க பரவியிருந்தது.

கிளி ஜோசியக்காரரில் இருந்து சுண்டல் வடை முறுக்கு விற்பவர்கள் வரை அந்த நிழலில் சுற்றி வந்து கொண் டிருந்தார்கள். ஏதாவது நாவல் புத்தகத்துடன் சுகுமாரும் அடிக்கடி பார்க்குக்கு வருவான். அப்போது குமரவேலையும் பார்ப்பான். குமரவேலுக்கு அங்குள்ள ஒரு மகிழ மரத்தடி நிழல் மிகப் பிடிக்கும். ஒரு கருங்கல் மேடை ஒன்றும் அந்த நிழலில் உண்டு அதில் காலை நீட்டிக் கொண்டு படுத்தால் படுசுகமாக இருக்கும்.

மிக மிகச் சன்னமாக மகிழம் பூக்களின் வாசம் மூக்கில் ஏறும். அதை சுவாசித்தபடியே மரத்துப் பறவைகள் போடும் சப்தங்களைக் கேட்பதும், ஒடி விளையாடும் அணில்களைப் பார்ப்பதும், ஒரு கலப்படமில்லாத சுகமான அனுபவமாகும்.

கிரிக்கெட் ஒரு பக்கம் ஏமாற்றி விட்டது. மறு பக்கத்தில்

சிவசாமி வேறு வந்து ஏதேதோ பற்ற வைத்து விட்டுப் போய் விட்டார். அந்த குடுகுடுப்பைக்காரன் வேறு. மொத்தத்தில் மனக்குளத்தில் இன்று நிறைய சலன அலைகள். எல்லா நாளும் எல்லா பொழுதுகளும் இப்படித் தான் இருக்கிறதா, இல்லை நமது மனதுதான் இவைகளில் விழுந்து குழம்பிப் போகிறதா?

மல்லாக்க கல் மேடை மேல் படுத்தவன் யோசிக்க ஆரம்பித்தான். அருகிலேயே கையில் பருத்த ஒரு புத்தகத் துடன் சுகுமாரும் வந்து நின்றான்.

''என்ன குமரவேல். தீவிர யோசனையா?''

"யார் சுகுமாரா'' கேட்டபடி எழுந்தான். அருகில் சுகுமாரும் அமர்ந்தான். அவன் கையில் உள்ள புத்தகம் பழுப்பு நிறத்தில் அரதப்பழசாய் தெரிந்தது.

"என்ன புத்தகம் இது சுகுமார்?"

''பிரசன்ன ஜாலம்"

சுகுமார் சொன்ன பதில் குமரவேலை சிரிக்க விட்டது.

"பாகவதர் காலத்து புத்தகமா?"

"தப்பு அவர் தாத்தா காலத்தது. இன்னும் சொல்லப் போனா அச்சு எந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அச்சடிக்கப்பட்ட முதல் பத்து புத்தகங்களுள் ஒண்ணுன்னு நினைக்கறேன்.''

சுகுமார் சொல்ல, குமரவேலின் கைகள் அந்த புத்த கத்தை நோக்கி நீண்டது. சுகுமாரும் புத்தகத்தை தந்தான்.

"பார்த்து பூவைத் தொடற மாதிரி தொடு, ஓங்கி ஒரு தட்டு தட்டினா புத்தகம் பொலபொலன்னு கொட்டிப் போயிடும். அவ்வளவு பழசு."

சுகுமார் சொல்ல, குமரவேலும் முதல் பக்கத்தைத் திறந் தான்.

பிரசன்ன ஜாலம். எழுதியவர் நிமித்தகச் சக்கர வர்த்தி, ஜோதிட சாம்ராட், ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்ரீதர ராகவன்.

அபிதகுஜாம்பாள் பதிப்பகம்,

ஐந்தாவது குறுக்குத் தெரு,

சாரங்கபாணி கோவில் அக்ரஹாரம்,

கும்பகோணம்

-என்று இருந்தது.

ஒரு ஓரமாக விலை எட்டு அணாக்கள் என்றும் இருந்தது.

அடுத்த பக்கத்திற்குச் சென்றான்.

ஒரு அறிவிப்பு காத்திருந்தது.

இந்த பொஸ்தகமானது மகா முனிக் காகபுஜண்டர் சொப்பனத்தில் வந்து சொன்னதன் பேரில் அவர் அருளாசி யோடு எழுதப்பட்டதாம். இப்பிரபஞ்சத்தில் வாழும் ஜீவராசி களில் மனிதனே ஆறாம் அறிவு கொண்டவன். அவனே மனம் வாக்கு இவைகளை உடையவனாகவும் இருக்கிறான். இவனை விஞ்சிய பிறப்பு இருப்பதாக தெரியவில்லை.

இவனும்கூட தான் வாழ வேண்டிய வாழ்க்கையை அர்த்தத் துடனும் பிறருக்கு பயன்படும்படியாகவும் வாழாமல், மோகி யாய்,போகியாய் வாழ்கிறான். இதில் சிலரோ வாழ்க்கையை அடக்க முடியாமல் அதைப் பார்த்து அச்சப்பட்டு ஏன் பிறந்தோம் என்று தெரியவில்லையே என்று மனப் பதற்றம் கொள்கிறார்கள்.

கலியுகத்தில் மனுஷ வாழ்வானது தர்மமற்றுப் போய் பாவத்தால் ஆக்ரமிக்கப்படும் என்பது பல மகாமுனிகளின் அனுமானமாகும். ஆயினும் அப்படிப்பட்ட வேளையில், மனுஷ வாழ்க்கையை ரட்சிக்கவும் அவர்கள் ஞானவிலாசம் பெற்று முக்தியை அடைய வழிகாட்டவும் ஏதுவாக இந்த 'பிரசன்ன ஜாலம்' என்னும் நூல் எழுதப் பட்டுள்ளது.

இதை வார்த்தைக்கு வார்த்தை புஜண்ட மகரிஷியே சொல்ல எழுதியது அடியேன் ஸ்ரீதரராகவன் என்போனாம்.

இந்தப் பொஸ்தகமும் ஆயிரத்தெட்டு படிகளே அச்சிடப் பட்டுள்ளது. இந்த ஜன சமுத்திரத்திற்காக புஜண்டரால் ரட்சிக்கப்பட்ட ஆயிரத்தெட்டு பேருக்கே இது கிட்டும். அவர்கள் இதை வேதமாய்க் கருதி வாசித்திட, அவர்கள் வாழ்வில் அற்புதங்கள் நிகழும். பொதுவில் பிரசன்னம் என்பது ஓடிக் கொண்டேயிருக்கும் கால கதியை கணக் கிட்டு அந்த காலத்தின் ஆட்சி அம்சங்களை வைத்து பலன் கூறுவதாம். அம்மட்டில் இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் இம்மியும் பிசகாது. இதை நம்பிக்கையோடு பரீட்சை செய்து பார்க்கலாம். ஆனால் இதை கர்வத்

தோடும் ஆங்காரத்தோடும் அணுகினாலோ இல்லை பரிகசித்தாலோ அந்த ஷனமே அவர்கள் பாவியாகி எதிர் மாறான பலாபலன்களை அடைவார்கள். குரு சாபத்துக்கும் உள்ளாவார்கள். நல்ல ஆசீர்வாதம் உள்ளவர்கள் இதனால் மேன்மையும் வெற்றியும் காண்பார்கள்.

மொத்தத்தில் காலகதியின் சக்தியை உரைக்கும் இது ஒரு பொக்கிஷம் என்பதில் சந்தேகமே இல்லை. இதை துளியும் வியாபார நோக்கமின்றியும், பிரசன்னம் பற்றி எதிர்காலத்தில் மாந்தர்கள் அறியவுமே வெளியிட்டுள்ளோம்.

இந்த பொஸ்தகத்தின் விலையான எட்டு அணா இதற்கான காகிதத்திற்கும் அச்சுக் கூலிக்குமேயன்றி அடி யேன் இதனால் அடைவது ஆத்ம லாபம் ஒன்றே. என்றும் வாழும் மகரிஷி காகபுஜண்டரின் திருவருளால் அனை வருக்கும் க்ஷேமலாபங்கள் ஏற்பட்டு சௌக்கியமாய் திகழப் பிரார்த்திக்கிறேன்.

அங்கங்கே ஏதும் எழுத்துப் பிழை, கருத்துப் பிழை யிருப்பின் பொறுத்தருளவும்.

அன்பன்

ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்ரீதர ராகவன்

முதற்பக்க அறிவிப்புச் செய்தியை வாசித்த குமரவேல் புருவத்தில் வளைசல் விழ சுகுமாரைப் பார்த்தான்.

"என்ன குமரவேல் படிக்கவே கஷ்டமாயிருக்கா? அந்த காலத்து தமிழ்."

"படிக்க ரொம்ப சொகமாயிருக்கு.. என்னென்னவோ எழுதியிருக்காரு. ஆமாம் எங்க கிடைச்சிச்சு இந்த புத்தகம்?"

"அதை ஏன் கேக்கறே. நான் ஒரு பாலகுமாரன் நாவலோடதான் படிக்க வந்தேன். யார்னு தெரியல ஒரு வயசானவர். பார்க்க பிச்சைக்காரன் மாதிரி இருந்தார். வயசும் நிச்சயம் தொண்ணூறு தொண்ணூத்தஞ்சு இருக்கும். படிச்சுகிட்டிருந்த என்கிட்ட வந்து தம்பி பசிக்குதுன்னாரு. நானும் பரிதாபப்பட்டு ஒரு ரூபாயை கொடுத்தேன். காசு வேண்டாம் சாப்பாடு வாங்கிக் கொடுன்னார். இதென்னடா வில்லங்கமா போச்சேன்னுதான் முதல்ல நினைச்சேன்.

தம்பி.. நான் எல்லார்கிட்டையும் போய் எதையும் கேட்க மாட்டேன். உன்கிட்டதான் கேக்கறேன். உனக்கும் எனக்கும் ஒரு கணக்கு பாக்கி இருக்குது, அது இதுன்னு என்னென்னவோ சொன்னாரு.

சரி, வயித்துப் பசிக்குதானே சோறு கேக்கறாரு போகட்டும்னு நம்ம பார்க்குக்கு வெளியே இருக்கற அன்னம்மா கடைல தயிர் சாதமும், புளி சாதமும் வாங்கிக் கொடுத்தேன்.

அதுல ஒரு கைப்பிடிச் சாதத்தை எடுத்து நீட்டி பிடிச்சுட்டு கண்ணை மூடிக்கிட்டு என்னமோ மந்திரம் மாதிரி சொன்னாரு.?

சொன்னா நம்பமாட்டே குமரவேல். ஒரு நூறு காக்கா, எங்கதான் இருந்திச்சோ தெரியாது, மளமளன்னு வந்து

அவர் மேலயே உக்காந்துகிச்சு. கைல பொட்லத்துல இருக்கற புளிசாதமும், தயிர்சாதமும் அப்படியே மாயமா மறையுது. காக்காயுங்க சும்மா கொத்திக் கொத்தி விழுங் கிருச்சுங்க. என்னடா இது, நாம இவர் பசிக்கு சோறு வாங்கிக் கொடுத்தா இவர் காக்காயுங்களுக்கு அந்த சோத்தைப் போட்றாரேன்னு ஒரு பக்கம் கோபமாவும் வந் துச்சு. எல்லாரும் ஆச்சரியமா பார்த்தோம். அப்புறம் சாப்பாடு தீரவும் இவர் என்னவோ சாப்பிட்டு முடிச்ச மாதிரி ஒரு ஏப்பம் விட்டாரு.

நான் உடனே அவரைப் பார்த்து கோவிச்சு சத்தம் போட்டேன். 'என்ன பெரியவரே, கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைச்ச கதையா என் கிட்ட காசு வாங்கி நீங்க சாப்பிடாம காக்காயுங்களுக்கு போட்றீங்களே, நல்லாயில்லை பெரியவரே'ன்னேன்.

அவரோ காக்காய்ங்க சாப்ட்டா நான் சாப்ட்ட மாதி ரின்னார். நான் முறைச்சேன். அப்பதான் என் கைல இருந்த புத்தகத்தைப் பார்த்து புத்தகம் படிப்பீங்களோன்னு கேட்டாரு. நானோ, பேச்சை மாத்தாதீங்கன்னேன். நான் எங்க பேச்சை மாத்தறேன், கைல இருக்கற புத்தகத்தைப் பாத்துதானே கேட்டேன்னாரு. அப்படியே அவர்கிட்ட ஒரு அழுக்கு ஜோல்னா பை இருந்துச்சு. அதுல கையை விட்டு இந்த புத்தகத்தை எடுத்தார். இந்தா இதைப் பிடி, உனக்கு இனிமே யோககாலம் தான்னாரு. நானும் புத்தகத்தை ஆவலா பொரட்டினேன். ரொம்ப இன்ட்ரஸ்ட்டா இருந் துச்சு. நிமிர்ந்து பார்த்தா அந்த வயசானவரைக் காணோம்.

எங்க போனாருன்னே தெரியல.''

சுகுமார் ஒரு நீண்ட சம்பவத்தைச் சொல்லி நிறுத்தினான். குமரவேலுக்கு அதை எப்படி எடுத்துக் கொள்வது என்றே தெரியவில்லை. புத்தகத்தையே ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"ஏதோ ஆயிரத்தெட்டு பேருக்குத்தான் இந்த புத்தகம் கிடைக்கும். இதை வெச்சுகிட்டு ஏக போகமா வாழலாம் கற மாதிரி கதை உட்ருக்காங்க. டெஸ்ட் பண்ணி பாத்துக் கலாம்னும் ஒரு வரி இருக்கு. படிச்சேல்ல."

சுகுமார் கேட்க குமரவேல் 'உம்' கொட்டினான்.

"நானும் சும்மா இல்லாம பத்தாவது பக்கத்தைப் பார்த்து டெஸ்ட் பண்ணேன். எப்படின்னு கேக்கறியா?"

''எப்படி?''

"பத்தாம் பக்கம் போயேன்."

சுகுமார் சொல்ல குமரவேலும் பத்தாம் பக்கம் சென் றான். அதில் ஒரு வட்டச்சக்கரம். அதை பன்னிரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு ராசியின் பெயர் இருந்தது.

கண்ணை மூடிக் கொண்டு இதில் ஒரு கட்டத்தை தொடவும். அந்த கட்ட ராசியே இன்றைய உங்க ராசி யாகும். அதற்கான பலாபலன்களை முப்பத்தாறாம் பக்கம் பார்க்கவும் என்று ஒரு குறிப்பும் இருந்தது.

"இந்த பக்கத்துல கண்ணை மூடிகிட்டு கையை

வெச்சேன். விருச்சிக ராசிக்குண்டான கட்டத்துல என் விரல்நுனி இருந்துச்சு. உடனே முப்பத்தாறாம் பக்கத்துக்கு ஓடினேன். அதுல ''விருச்சிகம் தொட்ட நீ விருத்திகள் அடைவாய், நேரிலேயே விருச்சிகத் தேளை விரைந்தே காண்பாய். காண்பதே சான்றாம். நீ கடலதும் தாண்டியே கவுரவமாய் வாழ்வாய்னு இருந்துச்சு. ஒரு ஆச்சரியம் நான் உக்காந்துகிட்டிருந்த இடத்துக்கு பக்கத்துல ஒரு தேள். அடுத்த அஞ்சாவது நிமிஷம் பார்த்தேன். அந்த குறிப்புல இருக்கற மாதிரியே தேளைப் பார்த்துட்டேன். அடுத்து கடல் தாண்டனும், சிங்கப்பூர் போக விசாவுக்கு அப்ளை பண்ணியிருக்கேன். கிடைச்சிட்டா அதுவும் நிஜமாயிடும்.''

சுகுமார் சொன்னது குமரவேலை ஒரு பிடி பிடித்தது. நெற்றியை சுருக்கிக் கொண்டு ஆழமாக ஒரு பார்வை பார்த்தான்.

"என்ன குமரவேல் எதுக்கு இப்படிப் பார்க்கறே?''

"பாக்காம, இந்த புத்தகத்தை நீ உடனேயே நம்பிட்ட போலருக்கே..''

"நடந்ததைச் சொன்னேன். அவ்வளவுதான்.''

"ஏன் அது தற்செயலான ஒரு விஷயமா இருக்கக் கூடாது?''

"இருக்கலாம்... இருக்கலாம்... நான் அதையும் மறுக் கலை."

''என்னன்னு தெரியல... இன்னிக்கு என் காதுல விழற

விஷயங்கள் எல்லாமே கொஞ்சம்கூட அறிவுபூர்வமா இல்லாம நம்ப முடியாத பேத்தலாவே இருக்கு."

புத்தகத்தை மூடியபடியே குமரவேல் மனம் விட்டான்.

"அப்படி என்னப்பா காதுல விழுந்திச்சு?"

"எதைன்னு சொல்ல? குடுகுடுப்பைக்காரன்கிட்ட ஆரம் பிச்சு, இப்ப இந்த புஸ்தகத்துகிட்ட வந்து நின்னுருக்கு."

குமரவேலின் அலுப்பில் மூச்சுக்குள் உஷ்ணக் காற்று. அப்போது ஒரு அரைடிராயர் சிறுவன் அவர்கள் இருவ ரையும் நோக்கி வேகமாக வந்தபடி இருந்தான்.

சுகுமாருக்கு பக்கத்து வீட்டுப் பையன்.

சுகுமாரையும், குமரவேலையும் சமீபித்தவன் மூக்கில் சளி ஒழுக மார்பை மேலும் கீழும் தழைத்து ஒரு பெரு மூச்சு விட்டான்.

"என்னடா மணி, எங்க இவ்வளவு தூரம்?"

"உங்களுக்கு... உங்களுக்கு..."

"எனக்கென்ன.."

"ஒரு கொரியர் தபால் வந்திருந்தது. சிங்கப்பூர் வேலைக்கு உடனே நீங்க புறப்பட்டு போகணுமாம். உங் கம்மா ஓடிப்போய் உங்களை கூட்டிகிட்டு வான்னு என்னை அனுப்பி விட்டாங்க."

அவன் பதில் குப்பென்று ஒரு பரவசத்தை சுகுமாரிடம் உருவாக்கியது.

"நிஜமாவா... நிஜமாவா செல்றே?''

"ஆமாண்ணே, நீங்க ஆறு மணி ரயில்ல உடனே கிளம்பணுமாம்... நேரமேயில்லையாம்.. உடனே வருவீங்களாம்.''

அடுத்த நொடியே உடம்பெல்லாம் சந்தோஷத்தில் ஒரு விதமாய் உதறலெடுக்க ''குமரவேல், குமரவேல்.. பாத்தியா, நான் எதிர் பார்த்துகிட்டே இருந்தேன். ஆனா இவ்வளவு சீக்கிரமா வரும்னு கனவுலகூட நினைக்கலை. எனக்கு... எனக்கு.. என்ன சொல்றதுன்னே தெரியலப்பா."

''முதல்ல கிளம்பு. வேலை விஷயம். ஒரு நிமிஷம் கூட தாமதிக்க கூடாது. சிங்கப்பூர்காரங்களுக்கு டைம் கீப்பிங் ரொம்ப பெரிய விஷயம். நம்ம ஊர் மாதிரி கிடையாது. இங்க நாம ஊர்ல இல்லாத சமாதானங்களை எல்லாம் சொல்லிக்கலாம். கிளம்புப்பா.''

குமரவேலும் ஊக்கிவிட்டான்.

"வாடா மணி... சரி குமரவேல். அப்ப நான் கிளம்பறேன்.''

பொங்கி வழியும் பரவசத்தோடு சுகுமார் புறப்பட்டான். அவனது பரவசம் குமரவேல் வசம் அவன் கொடுத்த அந்த புத்தகத்தை திருப்பி வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதைக் கூட மறக்கச் செய்து விட்டது.

பார்க்கின் மெயின் கேட்டை அவன் கடக்கும் வரை பார்த்துக் கொண்டிருந்த குமரவேலும் தன் கைகளில் அந்த

புத்தகம் இருப்பதை உணரவில்லை. அவன் தலை மறையவும்தான் குனிந்து புத்தகத்தைப் பார்த்தான்.

"அடப்பாவி...சந்தோஷத்துல இதை மறந்துட்டு போய்ட்டானே.'' கேள்வியோடு அதையே ஊன்றிப் பார்த்தான். சுகுமார் சொன்னதுதான் முதலில் நினைவில் முந்தியது.

தேளைப் பார்த்ததுகூட தற்செயலாக இருக்கலாம். அந்த வரிகளில் உள்ளபடி அடுத்து கடல் தாண்ட வாய்ப்பும் வந்து விட்டதே. எப்படி? முதல் தடவையாக ஆச்சரியம் குமரவேலை அப்பி எடுத்தது. போட்டுப் பிசைந்தது.

ஒருவேளை இந்த புத்தகம் ஒரு அபூர்வமான ஒன்றுதானோ? இதில் உள்ளவையும் அந்த ஸ்ரீதர ராகவன் எழுதியிருப்பது போல சத்தியமோ?" மனதில் எழுப்பிய கேள்வியோடு பக்கத்தைப் புரட்டினான். அவனைப் போலவே நாமும் பரீட்சை செய்து பார்த்தால் என்ன? ஆசை துடுப்பு போட்டது.

காசா பணமா... பார்த்து விடுவோமே! அந்த பிரசன்ன சக்கரப் பக்கத்தைத் திறந்தான். பன்னிரண்டு கட்டங்களும், ராசிகளும் கண் சிமிட்டியது. இது நாள் வரை இந்த மாதிரி விஷயங்களில் துளிகூட கவனமே செலுத்தியதில்லை. அந்தத் தயக்கம் அவனுக்குள் 'குமரவேல் நீயுமா?' என்று ஒரு கேலியான குரல் கொடுத்துப் பார்த்தது. இறுதியில் அடிமனதின் அந்த ஆசைதான் ஜெயித்தது. கண்களை மூடினான். ஆட்காட்டி விரலால் வட்டத்தை தொட்டான். பின் கண்களைத் திறந்தான். முதல் ராசியான மேஷ ராசிக்

கான கட்டத்தில் விரல் நுனி இருந்தது.

அடுத்து முப்பத்தாறாம் பக்கத்துக்கு புரட்டி மேஷ ராசிக்கான பலனைப் பார்த்தான்.

''மேஷமதை மேவித் தொட்ட பாலகா... மோட்சகதி உற்றவரின் சினேகத்தால் அஷ்ட சித்தும் அடைந்திடுவாய். தொட்டநொடி முதலே கிட்டவரும் சித்து. சித்துக்கு முன் பாக பத்துக்குள் ஒரு நாளில் திருமண பந்தம் நீ கொள் வாய். வருபவளும் ஓர் அரசி. படித்தவனுக்கு பகீர் என்றது. முதலில் பொருள் சரியாகப் புரியவில்லை. பின்பு வார்த் தைக்கு வார்த்தை அர்த்தத்தை தேடவும் அழகாக புரிந்தது.

அஷ்ட சித்தும் அடைந்திடுவாய் என்ற வரிகள் மட்டும் குழப்பியது. தொட்ட நொடி முதலே கிட்டவரும் சித்து என்று வரிக்கு அர்த்தம் தெளிவாகவில்லை. ஆனால் அடுத்தடுத்த வரிகளில் உள்ள பொருள் புரிந்தது. பத்துக் குள் ஒரு நாளில் திருமண பந்தம் நீ கொள்வாய் என்றால் தனக்கு பத்து நாட்களுக்குள் திருமணமாகப் போகிறதா? வருபவளும் ஓர் அரசி என்றால் அவள் பெயர் அரசியா? இல்லை அவள் அரச வம்சத்து அரசியா?

புத்தகத்தை மூடியபடி யோசிக்கத் தொடங்கிவிட்டான். கிரிக்கெட் பற்றி அவன் நினைத்தது போல வாழ்க்கையும் நொடிக்கு நொடி கணிக்க இயலாதபடி மாறுகிறதே...

எப்படி?

# 4

இலஹிமா சித்து எப்படிப்பட்டது என்பதை விளக்க புராணங்களில் எவ்வளவோ சான்றுகள் உள்ளன. அதில் ஒன்று நாயன்மார்களில் ஒருவரான அப்பரின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவமாகும். அப்பரைச் சந்தேகித்தும், அவரது பக்திச் சிறப்பு புரியாமலும் அரசன் அவரை கல்லால் கட்டி கடலில் வீசச் சொன்னான். அரசனின் ஏவலர்கள் அப்படியே செய்தனர். ஆனால் அப்பரோ அந்தக் கல்லோடு கடலில் மிதந்தார். அப்படியே அலைகள் அவரை திருப்பாதிரிப் புலியூர் கடற்கரையில் ஒதுக்கித்தள்ள, அங்கே கரை ஏறினார்.

அவரைத் தனியே தள்ளியிருந்தால்கூட அவர் நீந்திக் கரை சேர்ந்து விட்டார் எனலாம். கூடவே அவரை ஆள் உயரக் கல்லில் கட்டிப் பிணைத்துப் போட்டும் அவர் எப்படி மிதந்து கரை சேர்ந்தார்? இதை ஒரு மாயமாகவும், சிவனருளாகவும் பலர் எண்ணினாலும் உண்மையில் அப்பர் இலஹிமா சித்தியால்தான் கடலில் மிதந்து கரை சேர்ந்தார். அந்த சித்தியால் ஒரு பெரும் கல்லைக்கூட அதன் பாரம் நீங்கிய நிலையில் தக்கை போல அது கடலில் மிதக்கும்படி செய்தார்.

உதான வாயுவை நுரையீரலில் நிரப்பி மேல் நோக்கி எழும்பும் விசையை அபரிமிதமாய் அவர் உருவாக்கிட ஒரு விமானம் போல மேல் எழும்பி வானில் பறக்கக் கூடிய அளவு அது அவருக்கு ஆற்றலைத் தந்தது. அதே சமயம் அவரைப் பிணைத்திருக்கும் கல்லையும் அது

*விசையுடன் மேலே உந்தித் தள்ளியது.*

*உரிய அளவோடு அந்த விசையை பயன் படுத்தி அவர் மிதந்திருக்க வேண்டும். அந்த விசை கூடியிருந்தால் அவர் கல்லோடு வானிலும் எழும்பிப் பறந்திருக்கக் கூடும். ஆனால் அவர் பறக்க விரும்பவில்லை. இன்றைய விமானங்கள் என்ஜின் போன்ற கருவியால் காற்றைக் கொண்டு புரியும் செயல்பாட்டிற்கும் அப்பரின் அன்றைய இந்தச் செயல் ஒரு முன்னோட்டமாகும்.*

**வீ**ட்டுக்குள் நுழைந்தவனை ராஜாத்தியின் சமையல் கைவண்ணம் சுண்டி இழுத்தது. அனேகமாய் அது முருங் கைக்காய் சாம்பாராகத்தான் இருக்க வேண்டும். வாசம் கமகமத்தது.

முதலில் வாசனையை அனுபவித்து பின் அதனால் வயிற்றில் அமிலம் சுரந்து பசிக்க ஆரம்பித்தது. அதன்பின் நல்ல பசியோடு வயணமாக உட்கார்ந்து ருசித்து சாப்பிடு வதைப் போல ஒரு அற்புதமான விஷயம் இந்த உலகத்தில் இருக்கிறதா என்ன?

உள்ளே நுழைந்தவனை ராஜாத்தியும் பார்த்தாள். கையில் இருந்த புத்தகமும் அவள் கண்ணில் பட்டது.

"எங்கேடா போனே... லைப்ரரிக்கா?"

"இல்லம்மா. பார்க் வரை போனேன். ஆமா முருங்கைக் காய் சாம்பாரா?"

"ஆமாம், உனக்கும் லீவு. இன்னிக்கு வீட்ல இருக்கே. அதான் சாம்பார் வெச்சேன். அப்படியே பீர்க்கையை

பால்ல சேர்த்து கூட்டும் பண்ணியிருக்கேன். சாப்பிட்றியா?''

"முதல்ல போடும்மா... சாம்பார் வாசம் வயித்துக்குள்ள பூந்து வேலையை காட்ட ஆரம்பிச்சிடுச்சு."

"ஆமாம் அது என்ன புத்தகம்?"

"இதுவா, கேட்டா சிரிப்பே.. ஒரு வித்யாசமான புத்தகம் இது..''

''என்ன எதாச்சும் பழைய நாவலா?''

"இல்லம்மா... நான் அப்புறமா சொல்றேன். முதல்ல சாப்பாடு போடு."

புத்தகத்தை அப்படியே அருகில் உள்ள ஷெல்ப்பில் வைத்து விட்டு கொல்லைப்புறம் கை கழுவச் சென்றான். இந்த நாளிலும் குமரவேல் வீட்டில் கிணற்றுத் தண்ணீர் தான்.

''பொம்பளைன்னா அவ தினமும் கிணத்துல தண்ணீர் இறைக்கணும். குனிஞ்சு வளைஞ்சு வீடும் கூட்டணும். அப்படியே தண்ணி தூக்கி அடுப்படியில கண்ணைக் கசக்கி சோறாக்கி அழகா பரிமாறவும் செய்யணும். எல்லாத்துக்கும் மேலா, வாசல் தெளிச்சு கோலம் போடணும். விளக்கேத் தணும், குழந்தைங்க இருந்தா பீ மூத்திரம் அள்ளிக் கொட்டி தூளியாட்டி பாட்டும் பாடணும். இவ்வளவையும் செய்யற பொண்ணோட உடம்பு எப்பவும் கலகலன்னு இருக்கும். அவ கருப்பைல வளர்ற குழந்தையும் நல்ல புத்தியோடயும் நோய் எதிர்ப்போடயும் இருக்கும். ஏன்னா

அவதான் கைக்கு கை வாய்க்கு வாய், கண்ணுக்கு கண்ணுன்னு உறுப்புக்கு உறுப்பு வேலை தந்து யோகக் காரியா இருக்காளே. யோகக்காரின்னா அதிர்ஷ்டம்கற அர்த்தம் கிடையாது. இந்த வேலைங்கள்ளாம் யோகாசனம் பண்ற மாதிரியான விஷயங்கள். அதைச் சொன்னேன்.''

என்று ராஜாத்தி கிணற்றில் தண்ணீர் இழுப்பது பற்றி கேட்டால் நீண்ட விளக்கமளிப்பாள். யாரால் அவள் கருத்தை மறுக்க முடியும்? இன்றைய ஃப்ளாட் கல்ச்சரில் வாசல் கோலம் முதல் கிணற்றடியில் தண்ணீர் இறைப்பது வரை, அதெல்லாம் அந்தக் காலம்! என்றாகி விட்டதே.

***அ***ம்மாவின் அந்த விஸ்தாரமான பதிலை அசை போட்டபடியே கிணற்றுக்குள் வாளியை விட்டான் குமர வேல்.

ராஜாத்தியும் அவனுக்குச் சோறு போட தோதாக கொல்லை வாழை மரத்தில் ஒன்றில் இலை அறுக்க வந்தாள். அப்படியே உள்ளே சென்றவள் கை நிறைய சோற்றுக் கவளமுடன் வந்து கிணற்றுத் திட்டின் மேல் வைத்து ''கா.. கா.. கா..'' என்று குரல் கொடுத்தாள். குமர வேலும் கவனித்தான். அந்தக் குரல் கேட்டு காக்கைகள் சிலவும் பறந்து வந்தன.

இது ஒரு அன்றாடம் நடக்கும் பழக்கம்தான்.

"தினம் நாம சாப்பிட்றதுக்கு முன்னால் காக்காய்க்கு ஒரு பிடிசோறு வைக்கணும். அது எவ்வளவு நல்லது

தெரியுமா!''

"சோறு வை. அதுவும் சாப்டுட்டு போகட்டும். நல்லது கெட்டதுன்னு உடனே அதுக்கு ஒரு கதை சொல்லாதே."

"அப்படி இல்லடா கண்ணு... நம்ம தாத்தா பாட்டிங்க முன்னோர்கள்லாம் காக்கா ரூபத்துல வந்து நாம போட்ற சாப்பாட்டைச் சாப்ட்டுட்டுப் போவாங்கன்னு சொல்வாங்க."

''அட்றா சக்கை.. இப்படி ஒரு கதையா?''

பதிலோடு வாயில் தண்ணியை நிரப்பி கொப்புளித்துத் துப்பிவிட்டு உள்ளே நுழைந்தவன் ஒரு வினாடி மிரண்டு போனான்.

ஷெல்ப்பில் அவன் வைத்திருந்த அந்த பழைய புத்தகம் அருகே ஒரு காகம் அமர்ந்து கொண்டிருந்தது.

அந்த காகமும் குமரவேலைப் பார்க்கவும் வெறித்தது.

குமரவேலுக்கு ஒரு வினாடி கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. பதிலுக்கு வெறித்தான். காக்கை களுக்கு சோற்றைப் போட்டு விட்டு உள்ளே வந்திருந்த ராஜாத்தியும் அந்த காகத்தைப் பார்த்து ஆச்சரியப் பட்டாள்.

"ஸ்சூ... சூ... குமரவேல் துரத்தப் பார்த்தான்.

அதுவும் அவன் துரத்தவும் பறந்து பக்கத்து ஜன்னல் கம்பி ஒன்றின் மேல் போய் அமர்ந்தது. பிறகு அங்கிருந்தும் பறந்து வானம் ஏறியது.

குமரவேல் முதல் காரியமாக அந்த புத்தகம்

நோக்கித்தான் சென்றான்.

புத்தகம் அவன் முன்பு வைத்த விதத்தில் அப்படியே இருந்தது. அதே சமயம் புத்தகத்தின் மேல் விபூதியும் குங்குமமும் கொஞ்சம் போல சிந்திக் கிடந்தன.

குமரவேலுக்கு திரும்பவும் ஆச்சரியம்.

"என்னடா... எதுக்கு அந்த புத்தகத்தையே அப்படி பார்க்கறே?''

"ஒண்ணுமில்லை. இது மேல விபூதி குங்குமம் இருக்கு. எப்படி வந்துச்சுன்னு தெரியலியே?''

"அப்படியா...'' அருகே வந்து அவளும் பார்த்தாள்.

விபூதியில் ஜவ்வாது வாசமும், குங்குமத்தில் தாழம்பூ வாசமும் கும்மென்று மூக்கில் ஏறியது.

"எப்படி வந்துச்சு?" அவளும் வாய்விட்டாள்.

குமரவேல் ஆச்சரியத்தில் மூழ்கத் தொடங்கி விட்டான்.

''இதுவரை காக்காய்ங்க வீட்டுக்குள்ள வந்ததில்லை. அது வேறு வந்துட்டு போவுது. விபூதி குங்குமம் வேற கிடக்கு. இந்த குடுகுடுப்பைக்காரன்தான் எதாவது சித்து வேலை பண்றானா?''

ராஜாத்தி பயத்தோடு முனகியது குமரவேல் மனதை ஒரு கொத்து கொத்தியது.

அவன் அந்த புத்தகத்தின் முப்பத்து ஆறாம் பக்கத்தில் படித்த பாடல் வரிதான் ஞாபகம் வந்தது.

*"மேஷமதை மேவித் தொட்ட பாலகா...*

*மோட்சகதி உற்றவரின் சினேகத்தால்*

*அஷ்டசித்தும் அடைந்திடுவாய்...*

*தொட்ட நொடி முதலே*

*கிட்ட வரும் சித்து"*

பாடல் வரிகளின் எதிரொலியா?

கேள்வியோடு தலையை உசுப்பிக் கொண்டான்.

"ஹூம்.. நடக்கற எதுவும் நல்லதுக்கா தெரியல... அந்த காளிதான் காப்பத்தணும்."

ராஜாத்தி தொடர்ந்து புலம்பிக் கொண்டே தோட்டத்தில் அறுத்து வந்த இலையை விரித்தாள்.

"வாடா. வந்து சாப்பிடு. அப்புறமா நான் நம்ம கோவில் பூசாரிகிட்ட போய் காக்கா வந்ததுக்கு காரணம் கேக்கறேன். அவர் தெளிவா சொல்லிடுவாரு" என்றபடியே வட்டிலில் கொதிக்க கொதிக்க மல்லிகைப் பூபோல சாதத்தை எடுத்து வந்தாள்.

அவனும் சாப்பிட அமர்ந்தான்.

சாதத்தில் ஆவி பறந்தது. அதன் மேல் முருங்கைக் காய் சாம்பாரை கமகம வாசத்துடன் ஊற்றினாள். சாப்பிடும் போதும் அவனிடம் தீவிர சிந்தனை. ஒரு நாளில்தான் அடுக்கடுக்காய் எத்தனை சம்பவங்கள் எதையும் சாதாரண மாகவோ, இயல்பாகவோ எடுத்துக்கொள்ள முடிய வில்லையே!

சாப்பிட்டுக் கொண்டே நேரே பார்த்தான். சுவரில் அவன் அப்பா ராஜரத்தினத்தின் படம். பக்கத்திலேயே அக்கா பத்மினியின் படம். பத்மினியோடு அவள் கணவன் மாறனும் உடன் இருந்தார்.

மாறனுக்கு மிலிட்டரியில் மேஜராக உத்தியோகம். தற் சமயம் ராஜஸ்தான் மாநிலத்தில் ஏதோ ஒரு ஊரில் உள்ள ராணுவ முகாமில் இருவரும் இருக்கிறார்கள். ஏனோ இன்னும் ஒரு குழந்தைகூட பிறக்கவில்லை. ராஜாத்திக்கு அது ஒரு பிரதான கவலை.

அப்பா ராஜரத்தினம் விஷயமோ ஒரு பெரிய கேள்விக் குறி. குமரவேல் கைக் குழந்தையாக இருக்கும் போது ராஜாத்தியை அழைத்துக் கொண்டு காசிக்கு போனாராம். திரும்பும் போது ஏதோ ஒரு ஸ்டேஷனில் தண்ணீர் பிடிப்பதற்காக இறங்கியவரை அதன் பின் ராஜாத்தி பார்க்க வேயில்லை. பதினெட்டு வருடங்கள் ஓடி விட்டன. தேடாத இடமில்லை. பார்க்காத ஜோசியரில்லை. பலன் பூஜ்யம் தான். ஆனாலும் ராஜாத்தி அவர் உயிருடன் இருப்ப தாகத்தான் நம்பிக் கொண்டிருக்கிறாள். அதனால் பூவும் பொட்டுமாய் அவள் முகத்தைப் பார்க்கும்போது சிலர் ஒரஞ்சாரமாய் அவளைப் பத்தி விமர்சனம் செய்தது உண்டு. ராஜாத்திக்கும் அதை எல்லாம் கேட்டு மனது மறத்தே போய்விட்டது. இருந்தாலும் ஒரு நம்பிக்கை தன் கணவர் என்றாவது ஒரு நாள் திரும்பி வருவார் என்று.

குமரவேல் புகைப்படத்தை பார்த்த நொடி காசி வரை

யோசித்து முடித்தவனாய் ராஜாத்தியை பார்த்தான்.

"என்ன கண்ணு அப்பா படத்தை பார்த்துட்டு என்னை பாக்கறே?''

"உன்னோட நம்பிக்கையை நினைச்சுப் பார்த்தேம்மா. அதுமட்டும் இல்ல. இன்னிக்கு எதனாலோ அப்பா ஞாபகம் அடிக்கடி வருது."

''என்ன திடீர்னு?''

"திடீர் திடீர்னுதானே எல்லாம் நடக்குது."

"என்னாய்யா ஆச்சு உனக்கு. உன் பேச்சே ஒரு தினுசா இருக்கே."

"நம்ப முடியாததெல்லாம் நடக்கும் போது நாமளும் மாற வேண்டியிருக்குதேம்மா."

"அப்படி என்ன நம்ப முடியாதது நடந்துச்சு?''

அவள் குழம்பில் முருங்கைக்காயை எடுத்துப்போட்ட படி கேட்க, அவனும் ருசித்தபடியே அவள் கேள்விக்கு பதிலைச் சொல்லவா வேண்டாமா என்று யோசித்தான்.

"என்ன யோசிக்கறே?என் கேள்விக்கு பதில் சொல்லு.''

"ஏம்மா, நான் தெரியாமத்தான் கேக்கறேன். அது எப்ப டிம்மா அடுத்து நடக்கப் போறதை ஒருத்தரால முன்னா லேயே சொல்ல முடியும்?''

"நீ அந்த குடுகுடுப்பைக்காரன் சொன்னதை வெச்சுக் கேக்கறியா?''

"அது மட்டும் இல்லம்மா. இதோ இந்த புத்தகத்தை வெச்சும் கேக்கறேன். யாரோ காகபுஜண்டர்னு ஒரு சாமி யாராம். அவர் சொல்லச் சொல்ல ஒருத்தர் எழுதினாராம். எல்லார்கைலையும் இந்த புத்தகம் கிடைக்காதாம். கிடைச்சு இதை பயன்படுத்திக்கிட்டாலோ வாழ்க்கைல நம்மளை யரா லையும் எதுவும் செய்ய முடியாதாம்."

குமரவேல் மெல்ல அந்த புத்தகம் பற்றி விளக்கம் தரவும் ராஜாத்தி முகத்தில் விளக்கு போட்டது போல் ஒரு ஒளி.

"எங்க கொடு பார்க்கலாம்." என்றபடியே எழுந்து அந்த புத்தகத்தை எடுக்கப் போனாள்.

"நில்லும்மா. என் கேள்விக்கு பதில் சொல்லு, எப்ப டிம்மா அடுத்து நடக்கப்போறதை ஒருத்தரால முன்னால சொல்ல முடியும்?''

"என்கிட்ட போய் கேக்கறியேப்பா... எனக்கு என்ன தெரியும்? ஆனா ஒண்ணு... நல்ல மனசோட சத்தியமா உள்ளவங்க எது சொன்னாலும் பலிக்கும். அத நான் நம்பறேன்.''

"அது கணிப்பும்மா... நிலத்துல நெல் விதை போட்றோம். அப்புறமா உரம் போட்றோம். மூணு மாசம் கழிச்சு நிச்சயமா அது வளர்ந்து அரிசி கிடைக்கும்னு சொல்ற மாதிரிதான் நீ சொல்றது. ஆனா நான் கேக்கறது அப்படி இல்ல.''

"இரு, முதல்ல அந்த புத்தகத்தைப் பார்க்கறேன். அப்

புறமா நீ கேளு... முதல்ல நீ சாப்பிடு... சாப்பிடும் போது பேசக்கூடாது. உடம்புல ஒட்டாது."

பதிலோடு வேகமாக ஷெல்ப்பை நெருங்கி புத்தகத்தை கையில் எடுத்தாள்.

"அம்மா பார்த்து, அது ரொம்ப பழைய புத்தகம்.''

"பார்த்தாலே தெரியுதே. நீ சாப்பிடு.''

பதிலோடு புத்தகத்தை புரட்டினாள். கண்ணிமைகள் படபடக்க மிகுந்த ஆவலோடு வரிவரியாக படிக்கத் தொடங்கினாள். நேரமும் கழிய ஆரம்பித்தது.

குமரவேல் சாப்பிட்டு கையை கழுவியவனாக அவளிடம் வந்து நின்றான்.

அவள் ராசிச் சக்கரத்தில் மிதுன ராசியில் ஆள் காட்டி விரலை வைத்துக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா அதுக்குள்ள படிக்க வேண்டியதை படிச்சுட்டு பலன் என்னன்னு தெரிஞ்சுக்கவே தொடங்கிட்டியா?''

"ஆமாண்டா.. ரொம்ப அபூர்வமான புத்தகம்தான் இது. இரு, பலன் என்னன்னு பார்க்கறேன்.''

ராஜாத்தி படுவேகமாய் பலன்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் முப்பத்து ஆறாம் பக்கத்திற்கு சென்றாள்; பலனையும் பார்க்க ஆரம்பித்தாள்.

*"மிதுனத்தில் விரல் தொட்ட பெண்ணே.*

*உன் வதனத்தில் இனி புன்னகைதான் கண்ணே.*

*வட புலத்தில் தொலைந்த உயிர் திரும்பும்*

*மனைப் புலமும் மருமகளால் துலங்கும்*

*மகனும் ஒரு மகானாகி வாழ்வில்*

*குகனருளோடு வாழ்வாய்."*

பலனைப் படித்தவள் துள்ளிக் குதித்தாள். குமரவேலும் ஆச்சரியப்பட்டான். இதே முப்பத்து ஆறாம் பக்கத்தில் தான் தனது ராசிக்கான பலனைப் பார்த்தான். அப்போது இந்த குறிப்பு எதுவும் கண்ணிலேயே படவில்லை.

இப்போது மட்டும் எப்படி? மீண்டும் ஆச்சரிய அலை அவனுக்குள்.

"குமரவேல் பார்த்தியா உங்கப்பா திரும்பக் கிடைப்பா ராங்கற கேள்வியை கேட்டுகிட்டுதான் ராசிச்சக்கரத்தை தொட்டேன். கிடைக்கும்னு பலன் வந்திருக்குது. மருமகள் வந்து வீட்டையே விளங்க வைப்பாளாம். நீ கூட மகன் இல்லையாம். இனிமே மகானாம்.''

ராஜாத்தி குதூகலித்தாள்...

அவன் முகமோ சிந்தனையில்...

''என்னய்யா என்ன சிந்தனை?''

"ஒண்ணுமில்லம்மா... இந்தப் பக்கத்துலதான் எனக்கும் குறிப்பு வந்தது. உனக்கும் வந்துருக்குது. இப்பகூட பார் நீ தொட்ட ராசிக்குதான் பலன் இருக்கு.வேற எதுவும் இல்லை அது எப்படி?''

"அப்படியா?''

ஆமாம்... புத்தகத்தை கொண்டா இப்படி.''

வாங்கியவன் அதை திரும்ப மூடி பின்பு மறுபடி திறந்து ராசிச் சக்கரத்தைத் தொட்டான். இந்த முறை அவன் விரல்கள் துலாம் ராசியில் இருந்தது.

அதைத் தொடர்ந்து உடனே முப்பத்து ஆறாம் பக்கத் திற்கு செல்லாமல் அடுத்த பக்கத்தை திறந்தான்.

நல்ல முகூர்த்தம் அறிவதற்கான முகூர்த்த சக்கரம் என்றிருந்தது. அதற்கடுத்த பக்கத்தில் பொன் வாங்க உரிய காலம் பற்றிய தங்கச் சக்கரம் என்றிருந்தது.

அதற்கும் அடுத்த பக்கத்தில் பட்சியின் குரல் ஒலித்த வேளை பலனறிய சப்தச் சக்கரம் என்றிருந்தது.

''என்னடா தம்பி பாக்கறே. இது ரொம்ப வித்யாசமான ஜோசிய புத்தகம் மாதிரி இருக்குதே..''

"ஆமாம்மா, இன்னிக்கு நாட்டுல இந்த மாதிரி புத்தகம் தானே அதிகம் விக்குது. யாருக்கும் அவங்க மேலயோ, இல்ல உழைப்புமேலயோ நம்பிக்கை இல்லை. அதனால உக்காந்த இடத்துல ஆகாயத்தை கிழிச்சுகிட்டு தங்கமா கொட்டாதா, காலாட்டிகிட்டே சாப்டுகிட்டு ஜாலியா இருக்க மாட்டோமான்னு நினைக்கறவங்க தானே அதிகம் இருக் காங்க."

குமரவேல் கிண்டலும் ஆதங்கமுமாய் ஒவ்வொரு பக்கமாய் தாண்டியபடி முப்பத்து ஆறாம் பக்கத்திற்கு போய் நின்றான். ஆச்சரிய அதிர்ச்சி காத்திருந்தது.

*"துலாத்தை தொட்ட பாலகா*
*நூல் ஆழம் காண முயலும் உனக்கு*
*விரைவில் பிடிபடும் நுட்பக்கணக்கு*
*கடுகளவு விதைக்குள்ளே ஒரு காடே உண்டு*
*இதை உணர்ந்தால் தீரும்*
*உன் அறிவின் பிணக்கு."*

பாடல் வரிகள் அவன் பொட்டில் அடித்தது. யாரோ அருகில் இருந்து கொண்டு அப்போதைக்கப்போது சொல் கிற மாதிரிகூட தோன்றியது.

''என்னடா குமரவேல் இது! இதே பக்கத்துலதானே எனக்கு வேற பாட்டு வந்துச்சு? இப்ப அதைக் காணோம்.. வேற பாட்டு இருக்குதே!''

ராஜாத்தி மோவாயைப் பற்றிக் கொண்டாள்.

''அதாம்மா எனக்குப் புரியலை. ஒரு அச்சடிச்ச புத்தகத் துல ஒவ்வொரு தடவை திறக்கும் போதும் ஒரு பாட்டு வருதுன்னா இது புத்தகமா இல்லை மாயக்காகிதமா?''

குமரவேல் கேள்வியோடு கொஞ்சம் திகிலும் கொண் டான்.

''எங்கப்பா கிடைச்சிச்சு இந்த புத்தகம்? வாங்குனியா இல்லை யாராச்சும் கொடுத்தாங்களா?''

''பார்க்குல நம்ம சுகுமார் கொடுத்தான்மா.''

''அவனுக்கு எங்க கிடைச்சிச்சு?''

"அதைக்கேட்டா நீ இன்னும் ஆச்சரியப்படுவே. எனக்கு எல்லாமே கனவா இல்லை நனவான்னு இருக்குது.''

''என்ன தம்பி சொல்றே.. குடுகுடுப்பைக்காரன் சொன்ன மாதிரி ஏதாச்சும் வில்லங்கமா இல்லை நல்லதுக்கா?''

"புரியலம்மா...இதுல வந்த மாதிரியே சுகுமாருக்கு அடுத் தடுத்து நடந்துச்சு. உனக்கும் எனக்கும் இனி நடந்தாத்தான் தெரியும், வில்லங்கமா இல்லை நல்லதுக்கான்னு."

"காக்கா வேற இந்த புத்தகத்துகிட்ட வந்து உக்காந் துட்டு போச்சே! வந்தது ஒரு வேளை, நீ சொன்ன அந்த காகபுஜண்டரோ."

''காகபுஜண்டர், காக... அவர் பேர்லகூட காகம் இருக்கு. தொடர்பு இருக்கற மாதிரிதான் தெரியது. சுகுமார் சொன்ன விஷயத்துக்குப் பின்னால் கூட காகங்கள் இருந்தது.

''என்னய்யா சொல்றே? அப்ப விபூதி குங்குமம் வந்தது அந்த சாமியாலையா?''

"தெரியலையே... குழப்பமா இருக்குதே... ஏன் இப்படி நடக்குது? அதுவும் இந்த மாதிரி விஷயங்கள்ல கொஞ்ச மும் நம்பிக்கை இல்லாத என்கிட்ட..''

குமரவேல் நெற்றியில் வரிகள் விழ பரிதவிக்க ஆரம்பித் தான். எல்லாம் சில நிமிடங்கள் தான்.

வாசலில் ஒரு சைக்கிள் ரிக்சா வந்து நிற்கும் சப்தம். எட்டிப் பார்த்தான்.தாடியும் மீசையுமாய் நெற்றி கொள்ளாத

விபூதியோடு ஒருவர் இறங்கிக் கொண்டிருந்தார். ரிக்சாக் காரனுக்கு கூலியைக் கொடுத்துவிட்டு திரும்பியவர் ராஜாத் தியும், குமரவேலும் பார்க்க மெல்ல உள்ளே வந்தார்.

நெருங்க நெருங்கத்தான் அவர் யார் என்பதே ராஜாத் திக்கு தெரிந்தது. அவர் அவள் கணவர் ராஜரத்தினம்.

"ஐய்யோ நீங்களா... குமரு.. உங்கப்பாடா..'' ராஜாத்தி பரவச சிகரத்தின் மேல் விறுவிறுவென்று ஏறினாள்.

"அப்பாவா...!" அவனிடமும் ஆச்சரியம்.

அதே சமயம் அவ்வளவாக அடையாளம் விளங்க வில்லை. சுவரில் தொங்கிக் கொண்டிருந்த புகைப்படத் தையும் அவரையும் மாறி மாறி பார்த்தான்.

"ஏங்க எங்கங்க போய்ட்டீங்க, எப்படிங்க இருக்கீங்க, என்னங்க இது கோலம்?''

ராஜாத்தி படபடப்போடு கேட்டாள்.

ஓடிப்போய் கைகளைப் பற்றிக் கொண்டாள். அவரோ அவள் அளவு உணர்ச்சி வயப்பட்ட மாதிரி தெரியவில்லை. மிக இயல்பாக.. "எப்படி இருக்கே ராஜாத்தி?'' இதுதான் நம்மபையன் குமரவேலா?'' என்ற கேள்வியோடு அவனைப் பார்த்தார்.

"ஆமாங்க... குமரு, பாருடா உங்கப்பா வந்துட்டாருடா. இந்த புத்தகம் சொன்னது பொய் இல்லடா. சத்தியம். அவ்வளவும் சத்தியம்." அவள் உடல் நடுங்கியது. வார்த்தைகள் சந்தோஷப் பதற்றம் காட்டின.

குமரவேலும் இறுமாந்து போனான்.

"ஏங்க, எங்கங்க போயிட்டீங்க? என்னங்க ஆச்சு உங்களுக்கு? ஒரு நாளா, இரு நாளா, எத்தனை வருஷங்க! ஆனா என் நம்பிக்கை வீண் போகலைங்க. துளிகூட வீண் போகலை. நீங்க வந்துட்டீங்க... நீங்க வந்துட்டீங்க" என்றாள். பொங்கி வழிந்தாள், துள்ளிக் குதித்தாள்.

"சொல்றேன் ராஜாத்தி, சொல்றேன். ரயில்வே ஸ்டேஷன்ல உன்னை விட்டு பிரிஞ்சதுதான் தெரியும். அதுக்கு பிறகு பத்து நாளைக்கு முந்திவரை நான் எங்க இருந்தேன், என்ன செய்துகிட்டிருந்தேன்கிறதுகூட எனக்குத் தெரியாது.

நம்ப ரயில் நின்னுக்கிட்டிருந்த பிளாட்ஃபாரத்துல தண்ணி வரலை. ஆகையால அடுத்த பிளாட்ஃபாரத்துக்கு தண்ணி பிடிக்கப் போனேன். அப்ப யாரோ சாப்ட்டுட்டு போட்ட வாழைப் பழத்தோல் வழுக்கி கீழ விழுந்ததுல தண்டவாளத்துல தலை பட்டு மயக்கமாயிட்டேன். "இமய மலைல ஆசிரமம் வெச்சுருக்கற ஒரு சாமியார் தான் என்னை அப்ப காப்பாத்தினாரு.. நாலு நாள் ஆச்சாம் நான் கண்ணு முழிக்க. அதுவரை பாவம் அவரு கூடவே இருந்துருக்காரு. கண்ணு முழிச்சாலும் எனக்கு பழைய ஞாபகம் எதுவுமே இல்லை. ஒரு பொம்மை மாதிரிதான் இருந்தேனாம். அதுக்காக அவர் என்னை கைவிடலை, தன் கூடவே இமயமலை ஆசிரமத்துக்கு கூட்டிகிட்டு போனாரு அங்க வெச்சு என்னை ஒரு குழந்தை போல பாத்துகிட்டாரு. நானும் அவர் சொன்னதை கேட்டுகிட்டு

ஒரு மூளை வளர்ச்சியில்லாத குழந்தையைப் போலவே இருந்துட்டேன்.

பத்து நாளைக்கு முந்தி திரும்ப தலைல அடிபட்டு பழைய ஞாபகமெல்லாம் வந்தது. அப்பத்தான் இந்த விஷய மெல்லாமும் தெரிஞ்சிச்சு..

'சாமி.. நான் ஊருக்கு போறேன். இனி என்னால ஒரு நாள்கூட இங்க இருக்க முடியாது'ன்னேன். அவரும் 'தாரா ளமா நீ போகலாம்'னாரு.

சரியா பதினெட்டு வருஷம். நான் அப்படி இருக்கணும், நீங்களும் என்னை பிரிஞ்சிருக்கணும்கறது என்னோட கர்மாவாம். இருந்தாலும் அந்த பதினெட்டு வருஷம் நான் அங்க இருந்து செஞ்ச சேவைக்காக அந்த ஆசிரமத்து சாமியாரோட குருவான காகபுஜண்டர் இனி நல்ல வழியை காட்டுவாருன்னு சொன்னார்.

பெத்தவங்க செய்யற நல்லதெல்லாம் பிள்ளைங்க கணக் குலதான் வரவு வைக்கப்படுமாம். என்னோட புண்ணியம் இனி என் மகனுக்குத்தான்னு அவர் சொன்னாரு.வெந்ததை தின்னுட்டு வேளை வந்தா சாகற சராசரி மனுஷனா இல் லாம வாழ்க்கைன்னா என்ன, ஏன் பொறந்தோம், எதுக்கு பொறந்தோம்கற கேள்விக்கெல்லாம் விடையை கண்டு பிடிச்சு, ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை இனி உன் மகன் வாழுவான். குருவோட அருள் அவனை வழி நடத்தும்னு சொல்லி அனுப்பி வெச்சாரு. நானும் சந்தோஷமா கிளம்பி வந்தேன்.'' ராஜரத்னம் சொல்லி முடிக்கவும் ராஜாத்தி

சிலிர்த்துப் போனாள்.

"குமரு.. பாத்தியா! இந்த புத்தகம் காரணமில்லாம உனக்கு கிடைக்கல... எல்லாம் அந்த சாமியாரோட அருள்டா... ஐயோ நினைக்கவே புல்லரிக்குதே!"

உணர்ச்சி மேலீட்டோடு கன்னத்தில் போட்டுக் கொண் டாள்.

குமரவேல் எதுவும் பேசாமல் அப்பாவையே பார்த்தான். திரும்ப ஒரு முறை தனக்குக்குள் கேட்டுக் கொண்டான்.

"இதெல்லாம் என்ன கனவா, இல்லை நிஜமா?"

# 5

***கி**ருஷ்ணாவதாரத்தில் இலஹ்மாவின் சிறப்பு பளிச் சென்று உணரும் விதத்தில் உள்ளது. கண்ணனின் பத்தினியான சத்தியபாமாவின் ஒரு செயல் மூலம் அது தெரிய வருகிறது.*

***சத்தியபாமா மிகுந்த செருக்குடன் தன் செல்வ வளத்தை கண்ணனுக்கு உணர்த்த அவன் எடைக்கு எடை பொன்னும் மணியும் தரும் சம்பவம் ஒன்று அதை உணர்த்தும். தராசின் ஒரு தட்டில் கண்ணனை அமர்த்தி மறுதட்டில் பாளம் பாளமாக தங்கத்தையும், நவமணி களையும் கொட்டுகிறாள். எவ்வளவு கொட்டியும் கண்ணனின் எடைக்கு இணையாக அவளால் நிரப்ப முடியவில்லை.***

மாயாவி கண்ணன் ஏதாவது நாடகமாடுகின்றானா? அவனே கண்ணனிடம் அதை கேட்கிறாள். "என்ன இது, நான் அரண்மனைச் செல்வங்கள் அவ்வளவையும் கொட்டிக் குவித்து விட்டேன். நீங்கள்தான் ஏதோ மாய வேலை காட்டுகிறீர்கள் என்கிறாள்.

கண்ணன் சிரிக்கிறான். சரியான மாயப்புன்னகை. அவளுக்கும் புரிந்து போகிறது.

கண்ணனுக்கு இதெல்லாம் தேவையே இல்லை. இதனால் அவனை சந்தோஷப்படுத்த முடியாது. கண்ணனின் எதிர்பார்ப்பும் இதுவல்ல என்று உணர் பவள். அவனை பொருளைக் காட்டி மயக்கவோ அடக்கவோ முடியாது என்று புரிந்தவளாக பக்தியோடு ஒரே ஒரு துளசி இலையை எடுத்து தராசுத் தட்டில் வைக்கிறாள். தராசு சீராகிறது.

துளசி கண்ணனின் எடையை உடையதா? இல்லை கண்ணன்தான் துளசியின் எடைக்கு தன்னை மாற்றிக் கொண்டானா?

கண்ணனே பதில் தருகிறான். சத்யபாமாவிற்கு உண்மையை புரிய வைக்க தன்னை அளப்பரிய பாரம் கொண்டவனாய் கரிமா மூலம் மாற்றிக் கொண்ட கண்ணன், அவள் பக்தியோடு செயல்படவும் இலஹிமா வால் தன்னை பஞ்சாக்கிக் கொள்கிறான்.

இங்கே கரிமாவையும் சரி, இலஹிமாவையும் சரி, காற்றைக் கொண்டே வினை புரிந்த கண்ணன் அது எப்படி என்று கூறவில்லையாயினும், அஷ்டமா சித்து பற்றி அறிந்தவர்களுக்குத் தெரியும், அது உதான வாயுவைக் கொண்டு நிகழ்த்திய கரிமா என்று.

யானை மலை அரண்மனையை சீரியல் செட் அலங்காரத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்தனர். மைசூர் லலித மகால் கட்டிடத்தைப் பார்த்து காப்பியடித்து கட்டியது போல ஒரு விஸ்தீரணம்.

முகப்பிலும் ஒரு விளையாட்டு மைதானம் போல பரந்த இடம். அதில் அங்கங்கே பூதாகரமான மரங்கள். அரண்மனையின் பிரதான வாசல் முகப்பில் ஒன்றுக்கு இரண்டு படகுக் கார்கள் நின்று கொண்டிருந்தன.

சற்றுத்தள்ளி நல்ல வாளிப்பான இரண்டு வெள்ளைக் குதிரைகளுடன் சாரட் ஒன்றும் நின்று கொண்டிருந்தது. வருவோரும் போவோருமாய் ஜேஜே என்று கூட்டம். உள்ளே பிரதான மைய மண்டபத்தில் நல்ல அகலப் பட்டும் ஒட்டியாணமும் அணிந்த பல பெண்கள் சிரித்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

மிகப் பணிவாக ஏப்ரன் கட்டிய நிலையில் பணியாட் களும் அவர்களுக்கு கூல்ட்ரிங்க்ஸ், காபி என்று கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தனர்.

மூன்று விரல் பருமனுக்கு கோதுமை வடிவில் கண்ணி கள் கொண்ட சங்கிலி. அதில் ஒரு சங்கிலிக்கு நூற்றுஎட்டு என்கிற கணக்கில் சிவப்பு மாணிக்கக் கற்கள். பார்க்கவே கண்ணைப் பறிக்கும் எடுப்பில் உள்ள அந்த சங்கிலியோடு அவர்கள் நடுவில் ராணி வேணுமதி நாச்சி இருந்தாள். மாப்பிள்ளை கருணாகரவர்மனின் அம்மா. தலைமுடியில் சரிபாதிக்கு நரை ஒடியிருந்தது. அழுந்த வாரிக் கொண்டை

போட்டிருந்தாள். நெற்றியிலும் நன்கு பெரிய பொட்டு. கலகலப்பாக உறவுக்காரர்களோடு பேசிய கொண்டிருந்த வளை பஞ்சகச்சமும் அதற்கு மேல் ஒரு கறுப்புக் கோட்டும் தரித்து அதில் கோட்டுப் பட்டனுக்கும், பாக் கெட்டுக்கும் இடையில் ஒரு வரிச்சங்கிலி ஒடிய நிலையில் இருக்க, தலையில் ஒரு வெண் பட்டு தலைப்பாகை தரித்த கார்வார் திருநாவுக்கரசு வந்து சற்று தனியே அழைத்தார்.

அவளும் "என்ன கார்வார்?' என்று கேட்டபடியே ஒதுங்கினாள்.

''கோட்டச்சாமி கோவில் பூஜைக்கு ராஜா தயாராயிட் டார். நீங்கள் ரெடியான்னு கேட்டார்.''

"நான் எப்பவோ ரெடி.''

"அப்ப கிளம்பலாம் ராணி. இப்ப கிளம்பினாத்தான் போய்ட்டு வரச் சரியா இருக்கும்."

"அப்ப கிளம்புங்க. ஆமா கருணா வரான்தானே?"

"நிச்சயமா. அவர் இல்லாமலா?''

பதிலோடு இருவரும் நடந்தனர்.

அரண்மனையில் பலவித அறைகள். அரசர் நாராயண வர்மாவுக்கு நிறைய தமிழ்ப்பற்று. எனவே ஒவ்வொரு அறைக்கும் வைகை, காவிரி, பொதிகை, பொங்குமாக் கடல் என்று பெயர் சூட்டியிருந்தார்.

அதில் அவர் எப்போதும் இருப்பது பொங்குமாக்கடல் அறையில் தான். உள்ளே பாடம் செய்த சிங்கம் புலிகள்.

அச்சு அசலாய் உயிரோடு நிற்கிற மாதிரி இருந்தன. தேக்கில் கடைந்து.. கடைந்து.. செய்த நாற்காலிகள். சுவர்களிலும் வண்ண ஒவியத்திரைகள்,

அதில் ஒன்றில் நடராசரின் நாட்டியக் கோலம். இன்னொன்றில் குற்றால அருவியின் குபீர்ப் பாய்ச்சல், மாடர்னாக சுவிட்சர்லாந்தின் ஒரு கோல்ஃப் மைதான வெளி ஒன்றும். அதில் அவர் கோல்ஃப் ஸ்டிக்குடன் தலையில் கேப் தரித்து நிற்கும் புகைப்படம். அறை நடுவில் வெல்வெட்டால் வேய்ந்த வேலைப் பாடுள்ள குஷன் நாற்காலி ஒன்றில் அமர்ந்து அன்றைய ஆங்கில நாளிதழ் ஒன்றில் கவனமாக இருந்தவரை கார்வாரும் வேணுமதி நாச்சியும் சமீபித்தனர். அவரும் நிமிர்ந்தார். ஆசை மனைவியை ஊன்றிப் பார்த்தார்.

"கோட்டச் சாமி கோவில் பூஜைக்கு நான் ரெடியான்னு கேட்டுட்டு நீங்க உக்காந்துகிட்டிருந்தா எப்படி?" அவளிடம் ஆரம்பம்.

"கருணா தயாராயிட்டானா?"

"உங்க பையன்தானே... அவனும் பேப்பர் படிச்சுகிட்டு இருப்பான். இல்லை டி.வி. பார்த்துக்கிட்டிருப்பான்."

"சரி கிளம்பு... கார்வார் கொளஞ்சியப்பர் வந்துட் டாருல்ல?"

"எப்பவோ வந்துட்டார். கார்ல உக்காந்துகிட்டிருக் காருங்க."

"ஆமா புலிக்கு சொல்லியிருந்தீங்களே... கிடைச் சிருச்சா?"

இந்த கேள்வியை மட்டும் ஒரு ரகசியம் போல கேட்டார்.

"நம்ம மலைப்பளியன் சிங்கன் ஒரு குட்டிப் புலியை நமக்காகச் சிரமப்பட்டு பிடிச்சுட்டாங்க. கோவில்ல அது ரெடியா இருக்கு."

"வெரிகுட். அப்ப புறப்பட வேண்டியதுதான்."

நாராயண வர்மா பேப்பரை வீசி எறிந்துவிட்டு நிமிர்ந்தார். கருணாகரவர்மனும் கச்சிதமாக வந்து சேர்ந் தான். அவன் நெற்றியில் ஒரு காப்புக் கயிற்றைக் கட்டியிருந்தார்கள். அது அவனுக்கு பெரிய இம்சையாக இருந்தது.

"இந்த கயிறோட நான் வரணுமாம்மா?" என்று கேட்டான்.

"இதை நீ கல்யாணம் முடியற வரை கழட்டக் கூடாது. இது நம்ம ஐதீகமப்பா" என்றாள் வேணுமதி நாச்சி.

"என்ன ஐதீகமோ, அந்த கோவிலுக்கு மட்டும் போய்ட்டு வந்தா போதாதா?"

"டேய் வாழ்நாள்ல இந்த மாதிரி சந்தர்ப்பத்துலகூட நம்ம குல தெய்வத்தை நாம கும்பிடப் போகலைன்னா எப்ப டிடா... கிளம்பு."

அவனை இழுத்துக் கொண்டு நடந்தார். நாராயண வர்மாவும், கார்வார் திருநாவுக்கரசும் அவர்களைத் தொடர்ந்தார்கள்.

அரண்மனை முகப்பு வாயிலில் காத்திருந்தது வாக்ஸ் ஹால். உள்ளே டிரைவர் சீட்டுக்குப் பக்கத்தில் ராஜா எங்கே என்று கேட்ட கொளஞ்சியப்பர்.

கறுப்பு வேட்டியும் மார்பின் குறுக்கில் ஓடும் மஞ்சள் வஸ்திரமுமாய் நம்பூரிதிகள் போல தலையில் முன்குடுமி யோடு அமர்ந்திருந்தார்.

கதவைத் திறந்து கொண்டு கார்வார் ஏறி அவர் அருகில் அமர்ந்து கொள்ள பின்னால் ராஜாவும் ராணியும் கருணாகரனும் ஏறிக்கொண்டனர். ராஜா நாராயணவர்மா முந்திக் கொண்டு கொளஞ்சியப்பருக்கு 'நமஸ்காரம்' என்றார். டிரைவரும் காரைக் கிளப்பினார்.

பலர் அதை கவனித்தார்கள். குசுகுசுவென்று தங்களுக் குள் ஏதோ பேசிக் கொண்டார்கள்.

பாளையம் வனச்சரகம் ஆரம்பம் என்கிற பெயர்ப் பலகையை ஒட்டி நீண்டிருந்தது ஒரு கப்பிச் சாலை. அதில் நிறைய மேடு பள்ளங்கள். பள்ளங்களில் மழை நீர் தேங்கிக் கிடந்தது.

வாக்ஸ் ஹாலும் அதில்தான் பிரவேசித்து புழுதியை புரட்டிப் போட்டபடி சீறிக் கொண்டிருந்தது. பாதைக்கு இருபுறமும் அடர்வான மரக்கூட்டம். எல்லா சாதி மரங்களும் இருந்தன. அங்கங்கே நடுச் சாலையில் கீரிகள்

குறுக்கும் நெடுக்குமாய் ஓடுவதையும் பார்க்க முடிந்தது.

காருக்குள் அமர்ந்திருந்த கருணாகரவர்மனும் பார்த்தான். எப்பொழுதாவது அந்த பக்கமாய் வேட்டைக்கு வருவான். நிறைய மான்கள் கண்ணில் படும். ஆனால் அவைகளை ஏனோ கொல்ல மனம் வராது. ஒரு அழகான சாதுவான குழந்தையை பார்க்கிற மாதிரி இருக்கும். எனவே சுட மனமில்லாமல் திரும்பிவிடுவான். ஒரு முறை ஒரு மைனாவை சுட்டதில் அது கழுத்து சிதைந்து போய் அப்படியே கீழே விழுந்து துடிதுடித்து உயிரை விட்டது. அதைப் பார்த்தவனுக்கு நெஞ்சைப் பிசைந்தது. அன்று சித்தார்த்தனுக்கு ஏற்பட்ட அதே வலி. அதே வேதனை. அதற்கு பின் அவன் வேட்டையாடுவதே இல்லை.

ஆனால் நாராயணவர்மா அப்படியில்லை. எந்த மிருகத்தைப் பார்த்தாலும் சுட்டு விடுவார். அதை ஜீப்பில் தூக்கிப் போட்டுக் கொண்டு வந்து அரண்மனை சமையல் காரர்களிடம் கொடுத்து சமைக்கச் சொல்லியும் சாப்பிடுவார்.

அப்படிப்பட்டவருக்கு எப்படி இப்படி ஒரு மகன் என்று ஆச்சரியப்படாதவர்களே இல்லை.

இன்று அவன் கைப்பட அவன் ஒரு புலியின் கழுத்தை அறுத்துக் கொல்ல வேண்டும். அதன் ரத்தத்தால் கோட்டைச்சாமி என்னும் அவர்கள் குலதெய்வமாகிய நடுகல் ஒன்றுக்கும் அபிஷேகம் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்து விழுந்து கும்பிட்டால்தான் எந்த நல்ல

காரியமும் அந்த அரண்மனையில் ஊனமில்லாமல் நடக்கும்.

நாராயணவர்மாவின் திருமணத்திற்கு பிறகு இப்பொ ழுது கருணாகரவர்மனின் திருமணத்திற்குதான் அப்படி ஒரு பூஜை நடைபெற இருக்கிறது.

அவனிடம் சொன்னால் எங்கே அவன் கோவிலுக்கே வரமாட்டேன் என்று கூறிவிடுவானோ என்றுதான், அவனிடம் யாரும் எதையும் சொல்லவில்லை. காரில் கூட ராஜாவும்,ராணியும் பூஜை பங்கமில்லாமல் நடக்க வேண்டும் என்று பயந்தபடியேதான் அமர்ந்திருந்தனர்.

நாராயணவர்மா திருமணத்தின் போது வன மிருகங் களுக்கான பாதுகாப்புச்சட்டமெல்லாம் அவ்வளவு பெரிதாக கண்டு கொள்ளப்படவில்லை.

ஆனால் இப்பொழுது அப்படியில்லை. எனவே செய்ய வேண்டியதை ரகசியமாகச் செய்ய வேண்டும் என்கிற ஒரு நிலை. ஆகையால்தான் ஒரு பரிவாரத்தோடு சொந்த பந்தங்களுடன் சாரட்டிலேயே கோவிலுக்கு வர வேண்டிய ராஜா இப்படி தனியாக ஒரு காரில் அடைந்து கொண்டு கிளம்ப வேண்டிய நிலை.

இன்று பூஜை!

நாளை மாப்பிள்ளை அழைப்பு.

மாறு நாள் திருமணம்.

நாராயணவர்மா திருமணம் நல்லபடியா நடக்கவேண்டிய

கவலையோடு ராணியைப் பார்க்க, அவளும் பதிலுக்கு அவரைப் பார்த்தாள்.

கொளஞ்சியப்பரும் அமைதியாகத்தான் வந்தார். கோட்டைச்சாமி கோவிலும் பாளையம் காட்டின் நடுவில் ஒரு சின்னக் குன்றுக்கு கீழே உள்ள ஆயிரம் காலத்து மரமான ஒரு ஆலமரத்தின் கீழ் இருந்தது. பக்கத்திலேயே ஒரு மலை ஓடை.

அதில் கோடையில்கூட முழங்கால் நீர் ஓடும். சாமியார் ஓடை என்று அதற்கு பெயர். அதில் குளிக்க வேண்டும். ஈரம் சொட்டச் சொட்ட போய் கோட்டைச்சாமி முன்னால் நிற்க வேண்டும்.கொளஞ்சியப்பர்தான் பூஜையை நடத்திக் கொடுப்பார். பதிலுக்கு அவருக்கு ஒரு வெள்ளி முறத்தில் காசுமாலை ஒன்றும், கால்பணமும், பலிகொடுத்த புலியில் கால்நகமும், மேல் வரிசைப் பற்களை வைத்துக் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும்.

எல்லாம் அரண்மனை ஐதீகம்.

காலம் காலமாக இப்படித்தான் நடந்து வருகிறது. திருமணத்தின் போதும் அவர்தான் தாலி எடுத்துக் கொடுப்பார். கொளஞ்சியப்பரின் பரம்பரையும் கிட்டத்தட்ட ஒரு அரச பரம்பரைதான்.வேணுநாச்சிகூட விதவையாக இருந்து பின் நாராயணவர்மாவுக்கு வாழ்க்கைப்பட்டவள் தான். சில தலைமுறைகளுக்கு முன்னாள் யானைமலை அரச வம்சத்தில் ராணி ஒரு கொலு பொம்மையாக இருக்க, வைப்பாட்டிகளின் கைகள் ஒரு காலத்தில் ஓங்கியிருந்தது.

ஒரு தலைமுறையில் வைப்பாட்டி ஒருத்தி ராணி யையே ஆட்டிப் படைக்க, ராஜாவும் அதற்கு ஒத்து ஊத ராணி கோட்டைச்சாமி கோவிலுக்கு வந்து யானைமலை அரச குடும்பத்தையே சாடிவிட்டு அந்த ஆலமரத்தில் தூக்கில் தொங்கி இறந்து போனாள்.

அதன் பின் திருமணமான எந்த ஒரு ராஜ வாரிசுக்கும் அவரது மனைவிகள் தங்கவில்லை.

எல்லாருமே திருமணமான ஆறு மாதத்திலேயே சித்த பிரமை பிடித்தது போலாகி கோட்டைச்சாமி கோவிலுக்கு வந்து தூக்கில் தொங்கி இறந்தும் போனார்கள்.

யானைமலை அரண்மனையே மிரண்டு போனது.

கேரளாவில் இருந்து வந்த ஒரு நம்பூதிரி பிரசன்னம் பார்த்து அந்தச் சாவுகளுக்கெல்லாம் காரணம் முதலில் தற்கொலை செய்து கொண்டு இறந்து போன ராணியின் ஆவிதான் என்று சொன்னார். அதன்பின் அந்த ஆவியை ஒடுக்க ஒரு பூஜை செய்து ஒரு சுரைக் குடுவைக்குள் அடைத்தவர், அதை கோட்டைச்சாமி நடு கல்லின் கீழேயே போட்டும் புதைத்துவிட்டதாகவும், இப்பொழுதும் அந்தக் கல்லுக்கு கீழே ராணியின் ஆவி அடங்கிக் கிடப்பதாகவும், அதை சமாதானம் செய்யவும் கட்டிப் போடவுமே புலியை பலி கொடுத்து பூசைகளும் செய்யப் படுகின்றனவாம்.

ஒரு கன்னியைத் திருமணம் செய்தால்தானே பரம்பரை விளங்காது. விதவையைத் திருமணம் செய்தால் பாதக மில்லை என்று நம்பூதிரியே ஒரு புதிய வழியையும்

சொன்னாராம்.

அதையும் கொளஞ்சியப்பரின் பரம்பரையினரே செய்து வைக்க வேண்டும் என்பது நம்பூதிரியின் கட்டளை. காரணம் கொளஞ்சியப்பரின் பரம்பரையில் வந்தவள்தான் மனமொடிந்து தற்கொலை செய்து கொண்ட அந்த ராணி.

அவர்களுக்கு கட்டுப்பட்டு அவர்கள் ஆசீர்வாதத்துடன் திருமணம் செய்தால்தான் அந்த திருமணமும் சிறக்கும்.

இல்லாதபட்சத்தில் வாழ்க்கைப்பட்டு வரும் பெண் யாராக இருந்தாலும் அவளை ராணியின் ஆவி ஆக்ர மித்துக் கொன்றுவிடும் என்பதெல்லாம் யானைமலை அரண்மனையின் நம்பிக்கை நிலவரங்கள். இத்னைக்கும் நடுவில் அரண்மனைக்கு விருந்தினர்களாக வரும் பலர் காணாமல் போய் விடுவதும், அவர்கள் என ஆனார்கள் என்பதே தெரியாமல் இருப்பதும் பெரிய புதிர் இதில் எதுவும் கருணாகரவர்மனுக்கு தெரியாது என்பதுதான் மிகப் பெரிய ஆச்சரியம். பள்ளி, கல்லூரி என்று அவனை யானைமலைக்கு வெளியே ஹாஸ்டலில் போட்டே வளர்த்து விட்டார் நாராயணவர்மா.

அதுவே அவருக்கு வேறு வகையில் பிரச்சினையாகவும் ஆகியது. கருணாகரவர்மனும் இந்தக்கால இளைஞனாக ஏன் எதற்கு எப்படி என்றே கேள்விகள் கேட்டு ஒரு மனிதாபிமானியாக, விஞ்ஞானப் பார்வை அதிகம் உள்ள ஒருவனாக உருவாகிவிட்டான்.

அவனுடைய முற்போக்கான புத்தி ஒரு விதத்தில்

மட்டும் நாராயணவர்மாவுக்கு ஒத்துழைத்தது. ஒரு விதவையை திருமணம் செய்து கொள்வதில் தனக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்பதுதான் அது.

அதற்கேற்ப நிலா என்கிற நித்யமாலினியும் கிடைத்தாள். தாலி கட்டிக் கொண்ட அன்றே முதல் இரவில் ஹார்ட் அட்டாக்கில் போய்ச் சேர்ந்தவன்தான் அவள் கணவன். அது அவள் தலையில் ஒரு இடியாக மட்டும் விழவில்லை. அவளையே ஒரு அதிர்ஷ்டக்கட்டையாகவும் பார்க்க வைத்துவிட்டது.

நிலாவின் பெற்றோர்களும் அந்த நாளைய பாளையக் கார வம்சத்தினர்தான். சொத்து பத்தும், நிலம் நீச்சும், பாளையக்கார வம்சம் என்கிற வாசனையும் இருந்தும் மகளை வாழவைக்க முடியாத துக்கத்தில் உயிர் இருந்தும் பிணங்களாகத்தான் இருந்தனர்.

நாராயணவர்மாவுக்கும் அது வசதியாகப் போய் விட்டது. கார்வார் திருநாவுக்கரசை அனுப்பி சம்பந்தம் பேசினார். தானும் ஒரு விதவைக்கு வாழ்க்கை கொடுத்து நல்லபடி வாழ்ந்து கொண்டிருப்பதாக சொல்லி அவர்களை மசிய வைத்தார்.

அவர்கள் யானைமலை அரண்மனைக்கு பின்னால் உள்ள பல புதிர்கள் பற்றி கேள்விப்பட்டு கொஞ்சம் அச்சப் பட்டனர். அதை எல்லாம் வதந்தி என்றும் பொறாமை பிடித்தவர்களின் புலம்பல் என்றும் கூறி சமாதானப் படுத்திவிட்டார்.

பாளையக்கார ராஜாவான நிலாவின் அப்பாவுக்கும், ஒரு விதவைக்கும் இதற்கு மேலேயா வாழ்க்கை கிடைத்து விடப்போகிறது என்று தோன்றியது.

அதன்பின் நிச்சயதார்த்தமும் நடந்தது. யானைமலை அரண்மனை சாங்கியப்படி மாப்பிள்ளை பெண்ணை எந்தக் காரணம் கொண்டும் திருணத்திற்கு முன் பார்க்கக் கூடாது. மணப்பந்தலில்தான் பார்க்கலாம்.

ஆகையால் நேராக திருமணத்திற்கு நாள் குறிக்கப் பட்டது. ஆனால் கருணாகரவர்மன் அதை எல்லாம் ஒப்புக் கொள்ள மறுத்து நிலாவின் மாளிகைக்கே ஒரு நாள் அவளைப் பார்க்கச் சென்றான். நிலாவின் பெற்றோர்களும் அவனை வரவேற்று உபசரித்தார்கள். நிலாவிடம் பேச வேண்டும் என்றான். பின் பேசினான். அவள் முதலில் அழுதாள். தான் ராசியில்லாதவள் என்றாள். சமாதானம் செய்தான். தான் முழுமனதாக இந்த திருமணத்தை செய்து கொள்வதாக கூறினான். அவன் பேச்சு, நடந்து கொண்ட விதம் எல்லாமே நிலாவுக்கு மிகப் பிடித்துப் போயிற்று. அவளைவிட அவள் தங்கைக்கு அவனை மிக பிடித்துப் போனது.

சித்ரா என்கிற அவள் துடுக்கான பெண். அவள்தான் தனக்கு இன்னொரு திருமணமா என்று கேட்டு சம்மதிக்க மறுத்த நிலாவை சம்மதிக்க வைத்தவள். கருணாகரவர்மன் போல ஒரு மாப்பிள்ளை கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றவள்.

வித்தியாசமாக பிசியோ தெரபி படித்தவள். அதைப் படிக்கப் போய் உடம்பு, அதன் செயல்பாடு பற்றியெல் லாமும் புரிந்து வைத்திருப்பவள். அக்காவுக்கு திரும்பவும் ஒரு திருமணம் என்பதில் எல்லையில்லாத மகிழ்ச்சியில் இருப்பவள். திருணத்திற்கான ஒரு அட்வான்ஸ் பரிசாக ஒரு ஃபாரின் கடிகாரம் ஒன்றினை கருணாகரவர்மனுக்கு பரிசாகக் கொடுத்திருந்தாள்.

அதை அடிக்கடி பார்த்தபடியே காரில் அமர்ந்திருந்தான் கருணா.

காரும் நெடுந்தூரம் வந்துவிட்ட மாதிரி ஒரு மேட்டுப் பாங்கான இடத்தில் நின்றது.

கார்வார் முந்திக் கொண்டு காரில் இருந்து இறங் கினார். தொடர்ந்து மற்றவர்கள் இறங்கினார்கள். டிரைவர் ஓடிப்போய் டிக்கியைத் திறந்து ஒரு வெண்பட்டால் மூடப் பட்ட மூங்கில் கூடையை எடுத்து வெளியில் வைத்தான்.

கருணாகரவர்மன் அதை ஆச்சரியமாகப் பார்த்தான்.

"இதுல என்ன இருக்கு?''

"நம்ம குலதெய்வத்துக்கான பூஜை சாமான்கள் தம்பி.''

"கோவில் எங்க இருக்கு?"

"இங்க இருந்து கொஞ்ச தூரம் நடக்கணும்."

"அதுவரை கார் போகாதா?''

"பாதை கிடையாது தம்பி.''

கார்வார், கருணாகரவர்மன் கேள்விக்கு பணிவாக பதிலைச் சொன்னார். அதே சமயம் இறுக்கமாகவும் மௌனமாகவுமே வந்த கொளஞ்சியப்பர் அந்தக் கூடையை வாங்கி தலையில் வைத்துக் கொண்டார். அப்படியே பாம்பு உடம்பு போல வளைந்தும் நெளிந்தும் சென்ற மலைப் பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கினார்.

நாராயண வர்மாவும், வேணுமதி நாச்சியும் கருணாகர வர்மனைப் பார்த்து "கருணா வா போகலாம்'' என்றனர். ஞாபகமாக கால் செருப்புக்களை அங்கேயே கழற்றி விட்டனர்.

"ஏன் செருப்பைக் கழட்றீங்க?"

"இந்த இடத்துல இருந்து சன்னதி வரை கோட்டைச் சாமி ராஜ்யம். கால்ல செருப்பு போடக்கூடாது."

"என்ன பேத்தல். வழியப்பாருங்க ஒரே நெருஞ்சி முள்.''

"இருக்கலாம் தம்பி. கோட்டைச் சாமியை நினைச்சு கிட்டு வந்தா அதெல்லாம் ஒண்ணும் செய்யாது."

"நோ... நோ... நான் செருப்பு போட்டுகிட்டுத்தான் வருவேன்.''

பதிலோடு வேகமாக பாதையில் இறங்கி கொளஞ்சி யப்பரையும் தாண்டிக் கொண்டு நடந்தான்.

கொளஞ்சியப்பர் திரும்பி நாராயணவர்மாவைப் பார்த் தார். பார்வையில் முறைப்பு. நாராயணவர்மா பதிலுக்கு "கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கணும். அவன் காலேஜ்ல

படிச்ச பிள்ள'' என்றார்.

அதன் பின் டிரைவர் கார் அருகிலேயே நின்றுகொள்ள அவர்கள் அந்த ஒற்றையடிப் பாதையில் நடந்தனர். வழியில் பாதை ஓரமாக ஒரு மான், சிங்கம்-புலிகளால் குதறப்பட்டது போல தலை, கால், வால் என்கிற பாகங் களோடு கிடந்தது. பக்கத்திலேயே அந்த மிருகங்கள் வந்து சென்றதற்கு அடையாளமாக தடயங்கள்.

நடு நடுவே ஒற்றையடிப் பாதையில் காட்டுச் செடிகள் வளர்ந்திருந்து வழியை மறித்துக் கொண்டிருந்தன. கொளஞ் சியப்பர் துணிச்சலாக அவைகளை மிதித்துக் கொண்டு நடந்தார். அவ்வப்போது திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

கருணாகரவர்மன் ஒரு இடத்தில் நின்று சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தான்.

"பியூட்டிஃபுல், சரியான காடுதான். இத்தனை நாள்ல ஒரு தடவைகூட இங்க வராம போய்ட்டேனே. ஏன் டாடி என்னை இங்க கூட்டிகிட்டு வரலை?'' என்று கேட்டான்.

''வந்துருக்கோம்ப்பா... உனக்கு நாலு வயசு இருக்கும் போது இங்க வந்துதான் மொட்டை போட்டோம். அதுக் கப்புறம் நாங்க வரலை. ஆனா வருஷா வருஷம் நம்ம சார்பா கொளஞ்சியப்பர் மட்டும் ஐப்பசி மாசம் பௌர்ணமிக்கு இங்க வந்து பூஜை செய்வாரு."

"அது சரி. கோவிலே கண்ணுக்கு தெரியலேயே! இங்க வேற யாரும் வரமாட்டாங்களா?''

"இந்த கோயில் நம்ம யானைமலை அரண்மனை வம்சத்துக்கு மட்டும்தான். வேற யாரும் வரமாட்டாங்க. யாருக்கும் தெரியவும் தெரியாது.''

"வெரி பெக்கூலியர்.கோவில்னா எல்லாரும்தானே வந்து கும்புடணும்?"

"குல தெய்வத்துக்கு அது பொருந்தாது கருணா. குல தெய்வம்கறது குறிப்பிட்ட குடும்பத்துக்கு மட்டும்தான்."

"நிஜமாவா! ஏன் அப்படி?''

"உன் கேள்விக்கெல்லாம் பதிலை பிறகு சொல்றேன். இப்ப எதுவும் பேசாம நட.

''இப்ப என்ன வெட்டியா சாய்க்கறோம். கமான் டாட் சொல்லுங்க.''

அவனது தொணப்பல் தாங்காமல் கொளஞ்சியப்பர் மீண்டும் ஒருமுறை திரும்பிப்பார்த்தார். பார்வையில் அனல் பறந்தது.

"கருணா, கல்யாணம் நல்லபடியா நடக்கணும்னு வேண்டிக்க வந்திருக்கோம். எதுவும் பேசாம நடய்யா.''

வேணுமதி நாச்சியும் அவனை மசிக்கப் பார்த்தாள்.

''என்னம்மா நீ, கார்லதான் உம்முன்னு வந்தீங்க. இப்ப நடக்கும்போது கூடவா உம்முன்னு நடக்கணும்? இதுக் குத்தான் நான் வரலை நீங்களே போய்ட்டு வாங்கன் னேன். ஆனா நீங்க கேக்கலை."

"அப்படி இல்ல கருணா. இங்க பயபக்தியோட நடக்க

ணும். மிருகங்கள் நிறைய இருக்கற காட்டுப்பகுதி இது. அந்த கோட்டைச்சாமி நினைப்பா போனாதான் அது காவலுக்கு வரும். அரட்டை அடிச்சுகிட்டு போனா அது நல்லதில்லப்பா. அந்த சாமிக்கு கோபம் வரும். நீ வேற கால்ல செருப்போட வரே."

"காட்டுக்குள்ள செருப்பு போடாம போனா, முள் குத்தி செப்டிக்தான் ஆகும். அது சரி, கோட்டைச்சாமிக்கு நான் செருப்பு போடறதால என்ன குறைவு வந்துரும்?"

கருணாகரவர்மன் தன் படித்த புத்தியை காட்டினான். கொளஞ்சியப்பர் ஒரு கனைப்பு கனைத்து நாராயண வர்மாவுக்கு சிக்னல் கொடுத்தார். நாராயணவர்மாவும் புரிந்து கொண்டார்.

இப்படி எல்லாம் இங்கே பேசுவது பெரிய பிழை. அதிலும் யானை மலை அரச குடும்பத்துக்கு பேச துளியும் அருகதையில்லை. அது குடி, கூத்து என்று தானும் அழிந்து பிறரையும் அழித்த குடும்பம் என்பது கருணாகர வர்மனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

அவனைத்தான் முந்நூறு நானூறு மைல் தொலைவில் வைத்தே வளர்த்துவிட்டார்களே.

"நான் இப்படி எந்த கேள்வி கேட்டாலும் பதில் சொல் லாமலே வாங்க, உங்களுக்காகத்தான் இந்த கோவிலுக்கே வரேன். ஒரு விதவைக்கு வாழ்க்கை கொடுக்கப் போறோம்கறதாலதான் கல்யாணத்துக்கும் ஒத்துக்கிட்டேன். இல்லேன்னா என்னோட திட்டம் ஸ்டேட்ஸ் போறதுதான்.

எனக்கு கொஞ்சம்கூட நம்ம அரண்மனை, அதோட கட்டு திட்டங்கள்லாம் பிடிக்கலை.நாம ராஜாக்களா இருந்தது ஒரு காலத்துல. இப்ப ஜனநாயக ஆட்சி நடந்துகிட்டிருக்குது. நம்ம அதிகாரத்தை எல்லாம் இழந்தாச்சு. இருந்தும் ராஜா வம்சம்கற பந்தா நமக்கு எதுக்கு? வேணும்னா முன்னாள் ராஜ குடும்பம்னும் இந்நாள் பணக்கார குடும்பம்னும் சொல்லிக்கலாம்."

கருனாகரவர்மன் வெள்ளந்தியாக தன் மனதில் பட்டதை பேசிக் கொண்டே வந்தான்.

நாராயணவர்மா நெளிந்தார்.

அதற்கு மேல் வேணுமதி நாச்சியும் புழுங்கினாள்.

நடை நீண்டு கொண்டே போனது. நரி ஒன்று ஊளை யிட்டு கொஞ்சம் கலக்கத்தை ஏற்படுத்தியது.

உடனே நாராயணவர்மா கார்வாரைத்தான் பார்த்தார்.

"துப்பாக்கி கொண்டுகிட்டு வந்துருக்கியாய்யா?"

"இருக்குங்க.. பயப்பட வேண்டாம். ஓங்கி ஒரு குரல் கொடுத்தா பளியனுங்களும் ஓடி வந்துடுவாங்க."

"இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு?" கேட்கும் போதே சாமியார் ஓடை குறுக்கிட்டது. சலசலவென்று இடுப் பளவுக்கு தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. கொளஞ்சியப்பர் கூடைத்தலையோடு ஓடையில் இறங்கியிருந்தார். கருணா கரவர்மனுக்கு உற்சாகமாகி விட்டது. "சபாஷ்... கார்வார் இந்த ரிவருக்கு பேர் என்ன? நல்லா ஃப்ளோ இருக்கே!"

"இது ஆறு இல்ல இளையராஜா.. ஓடை, சாமியார் ஓடைன்னு சொல்லுவாங்க."

"சாமியார் ஓடையா!"

"ஆமாம், ரொம்ப காலமா அப்படித்தான் சொல்வாங்க."

"அப்ப இங்க சாமியாருங்க யாராவது இருக்காங்களா?"

"இருக்கறதா சொல்வாங்க. ஆனா நான் பார்த்தில்லை."

கேள்வியும், பதிலுமாய் ஓடையைக் கடந்து மறுபக்கம் ஏறினார்கள்.வேணுமதி நாச்சியின் பட்டுப்புடவை அப்படியே தெப்பமாக நனைந்துவிட்டது. கொசுவப் பாகத்தை கரை யேறிய நிலையில் பிழிந்துவிட்டுக் கொண்டாள், நாராயண வர்மாவும் தன் பட்டு வேட்டியை அப்படியே பிழிந்துவிட்டுக் கொண்டார்.கருணாகரவர்மன் அப்படி எல்லாம் செய்யாமல் குளிர் உடம்புக்காரன் போல நடுங்கியபடி கரையில் நின்று கொண்டு நாலாபக்கமும் பார்த்தான்.

மிக அடர்வாய் அங்கங்கே காட்டுப் பூக்கள் பூத்திருக்க ஒரு வித பச்சை வாசனை அடித்தது.

எல்லா நிறத்திலும் சிறகுகள் கொண்ட பறவை ஒன்று கிளையில் இருந்தபடி அவர்களைப் பார்த்தது. அதேசமயம் ஒரு புலியின் உறுமல் சப்தமும் கேட்டது. வேணுமதி பயத்தோடு கருணாகரவர்மன் அருகில் போய் ஒட்டிக் கொள்ள, மற்றவர்கள் சப்தம் வந்த திக்கைப் பார்த்தனர்.

ஒரு புலிக்குட்டிதான் உறுமியபடி ஓடி வந்திருந்தது. அதன் கழுத்தில் கயிற்றைக் கட்டி மறுமுனையை ஒருவன்

பிடித்துக் கொண்டிருந்தான். அவனும் கூடவே ஓடி வந்தான்.

"அடடே! சிங்கனா... என்னவோ ஏதோன்னு ஒரு வினாடி நடுங்கிட்டோம்.''

"கும்புட்டுக்கறேன் ராசா. பலிபுலிங்க இது. பாடாபடுத்தி கிட்டு இருக்குது. ஒரு இடத்துல நிக்க மாட்டேங்குது'' என்றான் சிங்கன் என்னும் அந்த மலைப்பளியன். கருணா கரவர்மனும் அந்த புலிக்குட்டியைப் பார்த்தான். அதிக பட்சம் ஒரு வயது இருக்கலாம். துறுதுறுவென இருந்தது. மஞ்சள் பட்டுத்துணி போல உடம்பு. அதில் கறுப்புத் தேமல்கள். கண்ணிரண்டும் மிதமான பிரவுன் நிறத்தில் இருக்க, துள்ளித் துள்ளிக் குதித்தது.

கருணாகரவர்மனுக்கும் அதை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. சிங்கன் அருகில் வந்து கயிற்றை அவன் வாங்கிக் கொண்டான்.

''பார்த்து ராசா. ரொம்ப குறும்புக்கார புலியா இருக்குது. காலைல இருந்து நாலு முயலை அடிச்சு சாப்ட்டுச்சுங்க."

"இட்ஸ் ஓ.கே... புலின்னா அப்படித்தான் இருக்கும். இருக்கணும்'' என்றபடியே அதை வாரி அணைக்கப் பார்த் தான். அது முன்காலால் அவன் கையை அறைவது போல தட்டி விட்டது.

"கருணா வேண்டாம்யா..சொன்னா கேளு.'' அலறினாள் வேணுநாச்சி.

கொளஞ்சியப்பர் தேங்கி நின்றது போதும் என்பது போல அங்கிருந்து கூடையோடு நடந்தார்.

"கார்வார், அவனை கூட்டிகிட்டு வாங்க. கொளஞ்சி யப்பர் சன்னதிக்கு போறார்னு நினைக்கிறேன்'' என்றபடியே நாராயணவர்மாவும் வேணுமதியும் அவரைத் தொடர்ந்தனர்.

சலசலவென்ற ஓடை நீர் ஓட்டம் காதில் கேட்டபடி இருக்க, அங்கே கரடு ஒன்றின் தொடக்கம். அடிவார பரப்பில் அந்த சிறிய கோவில் பருத்த ஆல மரத்தின் கீழ் அமைந்திருந்தது.

இடுப்புயரத்திற்கு அரை குறையாக செதுக்கியது போல ஒரு கல் ஒவ்வொரு பக்கம், ஒவ்வொரு வருஷம் காட்டியது. அந்த கல்லுக்கு முன்னாலே சிறிய பாறைக் கற்களை முக்கோண வடிவில் நிறுத்திய விளக்குப் பிறை. அதனுள் ஒரு மண்சட்டியில் விளக்கெரிந்து கொண் டிருந்தது.

சிங்கன்தான் வந்து ஏற்றியிருக்க வேண்டும். மற்றபடி சுற்றிலும் பிரண்டையும், கோரையாக சடைசடையாக தழைத்திருக்க, அதை எல்லாம்கூட அறுத்துப் போட்டு கொஞ்சம் போல சுத்தப்படுத்தியிருந்தான் சிங்கன்.

கொளஞ்சியப்பர் தான் சுமந்து வந்த கூடையோடு அங்கே போய் நின்றார். கூடையை கீழே இறக்கி வைத்த வராக நிமிர்ந்தார். நாராயணவர்மாவும், வேணுமதிநாச்சியும், கார்வாரும், கருணாகரவர்மனும் தொட்டுத் தொட்டு வந்து அங்கே கூடி நின்றனர்.

கருணாகரவர்மன், கோட்டைச்சாமி என்னும் அந்த நடுகல்லை நினைவு தெரிந்து முதல் முறையாக பார்க்கிறான். ஒரு மலைக்காட்டில் இந்த மாதிரி ஆயிரம் கற்கள் இருக்குமே அப்படித்தானே இதுவும் இருக்கிறது! இது எப்படி சாமியாகும்? என்று ஒரு குயுக்தியான கேள்வி உள்ளே ஓடியது.

"எல்லாரும் வந்துட்டீங்களா?" கொளஞ்சியப்பர் அப்போதுதான் வாயைத் திறந்தார்.

"ஆச்சு கொளஞ்சியப்பரே, அடுத்து என்ன செய்யணுமோ அதைச் செய்யுங்க." இது நாராயணவர்மா.

கொளஞ்சியப்பர் அதைக் கேட்டு ஆமோதித்தவராக சரக்கென்று அப்படியே நின்ற இடத்தில் மண்டியிட்டார். கைகளைக் கூப்பி பிரார்த்திக்கவும் தொடங்கினார். பின் கோட்டைச்சாமி நடுகல்லுக்கு முன் உள்ள உருண்டையான ஒரு கல்லின் மேல் கூடையில் கையை விட்டு பருமனான கற்பூரம் ஒன்றை எடுத்து வைத்து ஏற்றினார்.

அது எரிய ஆரம்பித்தது. "இது ஒரு பத்து நிமிஷம் எரியும். விடாம நான் எரிச்சிக்கிட்டே இருப்பேன். அதுக்குள்ள இளையவரை போய் தலை முழுக்கு போட்டு அழைச்சுக்கிட்டு வாங்க" என்றார்.

"என்னது. நான் தலை முழுக்கு போடணுமா!"

"ஆமாம் கருணா... ஓடைல குளிக்கச் சொல்றார் கொளஞ்சியப்பர்."

"நான் நம்ம அரண்மனைல குளிச்சுட்டு தானேம்மா கிளம்பினேன்!''

"இருக்கலாம். இப்ப இங்கையும் குளிக்கணும். போய் முதல்ல குளிச்சுட்டு வா.''

வேணுமதி நாச்சி அவனைப் பிடித்து தள்ள, சிங்கன் அந்த புலிக் குட்டியை அங்கே இழுத்து வந்து எரியும் கற்பூரக் கல்லுக்கு முன்னால் நிறுத்தினான்.

"ஐய்யா.. சீக்கிரமா ஆகட்டுங்க, தாய்ப்புலி காடு பூரா தேடித் திரிஞ்சுக்கிட்டிருக்கும். தப்பித்தவறி இந்தப் பக்கம் வந்துட்டா நம்ம எல்லாரோட கதியும் அவ்வளவுதான்'' என்று அவசரப்பட்டான்.

"ஆமா இந்த புலிக்குட்டி இங்கு எதுக்கு? என்ன செய்யப் போறோம்?''

"சொல்றேன்...நீ போய் முதல்ல ஓடையில குளிச்சுட்டு வா..."

"நீ இதை என்ன பண்ணப் போறோம்னு சொல். நான் இதை நம்ம அரண்மனைக்கு எடுத்துக்கிட்டுப் போய் வளர்க்க ஆசைப்படறேன்.''

"கருணா... இது வழவழன்னு பேசற இடம் இல்லை. நீ போய் முதல்ல குளிச்சிட்டு வா..''

நாராயணவர்மா முதல் முறையாக சற்றுக் கோபமாக கத்தினார்.''

"டாட்... எதுக்கு இப்ப கோபப்படறீங்க? நான் இப்ப

என்ன சொல்லிட்டேன்?''

''டேய்! போடா... கற்பூரம் அணைஞ்சுடப்போகுது.''

"அது அணைஞ்சா அணைஞ்சுட்டுப் போகுது. என்னை ஏன் ஒவ்வொரு விஷயத்துலையும் கண்ட்ரோல் பண்ணி டைவர்ட் பண்ணிகிட்டே இருக்கீங்க?"

"கொளஞ்சியப்பரே இதுக்கு மேல இவனுக்கு பதில் சொல்ல என்னால முடியாது. நீங்களே சொல்லுங்க.'' ராஜா கொளஞ்சியப்பரிடம் சரண்டர் ஆனார்.

"தம்பி...''

"என்ன..? நீங்க என்ன சொல்லப் போறீங்க?"

"போ... போய் குளிச்சுட்டு வா... வந்து உன் கையால இந்த புலியை அறுத்து அந்த ரத்தத்தால இந்த கோட்டைச் சாமி நடுகல்லுக்கு அபிஷேகம் செய். அப்படி செய்தாதான் உன் திருமண வாழ்க்கை நல்லாருக்கும்."

"என்னது. இந்த புல்லிக்குட்டியை கொல்றதா! கொன்னு ரத்தத்தை எடுத்து அபிஷேகமா?அதுவும் இந்த கல்லுக்கா? உங்களுக்கென்ன கிறுக்கா பிடிச்சிருக்கு?''

கருணாகரவர்மன் ஆவேசமானான்.

''எனக்கு கிறுக்கு பிடிக்கலை. உனக்கு பிடிக்காம இருக்கணும்னுதான் இதை எல்லாம் செய்யறோம். போ... போய் குளிச்சுட்டு வா.. சரியா உச்சிக்கு சூரியன் வரும் போது ரத்தாபிஷேகம் நடக்கணும்."

"இது பெரிய கொடுமை... உங்களுக்கெல்லாம் அறி

வில்லை. டாட்... என்ன இது. இதுக்குப் பேர்தான் குல தெய்வ பூஜையா. பூஜைன்னா ஆடு மாடு கோழின்னு பலி கொடுப்பாங்க, கேள்விப்பட்டிருக்கேன். அதையே பெரிய பாதகமா நினைக்கறவன் நான். நீங்க என்ன ஒரு படி மேல போய் புலியை கொல்ற அளவுக்கு போயாச்சா? இதுதான் ராஜவம்ச ஸ்டைலா?''

"இதோ பார்... இதெல்லாம் ஐதீகம். கேள்வியா கேட் காதே. கார்வார்.. என்னய்யா பாத்துகிட்டு நிக்கறே. நேத்தே இந்த பூஜை பத்தி எல்லாம் இவன்கிட்ட சொல்லச் சொன்னேன்ல. இங்க வந்து முரண்டு பிடிக்கறான் பார்.''

நாராயணவர்மா சீற, கார்வார் தலையைக் குனிந்து கொண்டார்.

"அவரை ஏன் டாட் திட்றீங்க... ஒரு வகைல அவர் நேத்து சொல்லாததுக்கு நான் அவருக்கு தேங்க்ஸ்தான் சொல்லணும். இல்லேன்னா இந்த புலிக்குட்டியை நீங்க யாராவது கொன்னுருப்பீங்க. சுதந்திரமா அம்மாகிட்ட பால் குடிச்சுகிட்டு திரிய வேண்டியதை இப்படியா பிடிச்சுகிட்டு வந்து கட்டிப்போட்டு... ச்சே..."

புலம்பலோடு சட்டென்று அந்த புலிக்குட்டி அருகில் மண்டியிட்டவன், அதை வாரி அணைத்து அதன் கழுத்துக் கயிற்றை அவிழ்க்கத் தொடங்கினான்.

எல்லோரும் விதிர்த்துப் போக கொளஞ்சியப்பர் மட்டும் கடூரமாய் நாராயணவர்மாவைப் பார்த்து முறைத்தார்.அந்தப் புலிக்குட்டியோ கயிற்றின் பிடியில் இருந்து விடுபட்ட

குஷியோடு அங்கிருந்து துள்ளிக் குதித்து ஓடியது. சிங்கன் கையைப் பிசைந்து கொண்டான்.

கருணாகரவர்மன் கைகளை தட்டிவிட்டுக் கொண்டான். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தான்.

"நான் கிளம்பறேன். இந்த குளியல், பூஜை இதுல எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்களே எனக்கு சேர்த்து கும்பிடு போட்டுட்டு வாங்க. வரேன்'' என்றபடியே வந்த வழியே திரும்பத் தொடங்கினான்.

"கருணா நில்லு.... நில்லுடா..'' அலறினாள் வேணுமதி. அவனோ காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. விறுவிறு வென்று நடந்தான்.ஓடையருகில் வந்தான். அதில் இறங்கக் காலெடுத்தவன் எதிரில் ஓடையின் மறுகரையில் ஒரு சாமியார்.

இடுப்பில் ஒரு கோவணத்துடன் அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

அவனுக்கு ஆரம்பத்தில் சற்று பகீர் என்றது.

பிறகு சுதாரித்தான், அவரையே வெறித்தான்.

அவர் அவனைப் பார்த்து ஒரு சின்னப் புன்னகை புரிந்தார். அது அவனை என்னென்னவோ செய்தது. அவரைப்பற்றி விசாரிக்கக்கூட வாய் வரவில்லை.

சிரித்தபடியே அவர் நடந்தார். அவனும் ஏதோ அவரால் கட்டி இழுக்கப்பட்டது போல் பின் தொடர்ந்தான். புதர்கள் அவர்கள் இருவரையும் ஒரு கட்டத்தில்

மறைத்தன. அவர் நடந்து கொண்டேயிருந்தார். அவனும் தொடர்ந்து கொண்டேயிருந்தான். அந்த நடையின் முடிவில் ஒரு பெரிய நீர் நிலை வந்தது. இரு மலைக்கு இடையே ஒரு பெரிய ஏரி போல நீண்டு கிடந்தது. மேலே சிலு சிலுவென்ற காற்று வேறு.

அவன் சில நிமிடங்களுக்கு முன் பார்த்த பலவண்ணச் சிறகு கொண்ட பட்சி ஒன்று பறந்து வந்து நடக்கும் அந்த சாமியாரின் தலைமேல் அமர்ந்தது.பெண்பிள்ளைகள் போல அவர் தலைமுடி நீண்டு தோள்வரை புரண்டிருந்தது. அவர் அந்தப் பட்சியை கையை உயர்த்திப் பிடித்து தோள் மேல் விட்டுக் கொண்டார்.

கருணாகரவர்மனுக்கு தன் கண்ணையே நம்ப முடியவில்லை.

"ஐய்யா.." என்றான் சிலிர்த்தபடி.

அவரும் நின்று ஏறிட்டார்.

"நீங்க?"

"பார்த்தா தெரியலை? கோவணாண்டி."

"இந்த மலைக்காட்டுல..."

"என்ன பண்ணிகிட்டிருக்கேன்னு கேக்கறியா?"

"ஆமாம்..."

"என்னை மாதிரி ஆட்களுக்கு நகரத்துல என்ன வேலை சொல்லு பார்ப்போம்."

"அப்ப நீங்க இங்க..."

"நிம்மதியா, அமைதியா காலம் கடத்திக்கிட்டு இருக்கேன்."

"சாமியாருங்க இங்க இருக்கறதா கார்வார் சொன்னார். நீங்களும் அவங்கள்ல ஒருத்தரா?"

"இருக்கலாம்."

"இது என்ன பதில்?"

"சரி... நான் சாமியார்தான். உன் கார்வார் சொன்ன மாதிரி அவங்கள்ல ஒருத்தன்தான்."

"இந்தப் பறவை எப்படி உங்க கிட்ட சாதாரணமா வந்து பழகுது? நம்ப முடியல என்னால."

"பறவை மட்டுமா? நாம யார்னு தெரிஞ்சுகிட்டு அதற்கேற்ப வாழ்ந்தா எல்லா ஜீவராசிகளும் நம்மகிட்ட சகஜமா பழகும்."

"பகுத்தறிவில்லாத மிருகங்களா பயமில்லாம பழகும் கறீங்க?"

"எது பகுத்தறிவு?"

அவர் கேள்வி அவனைக் கட்டிப் போட்டது. அவன் அறிந்த பகுத்தறிவு விஞ்ஞானப் பார்வை உடையது. எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முயல்வது. கேள்வியாய் கேட்பது. சந்தேகப்பட்டுக் கொண்டே இருப்பது. ஆதார மில்லாமல் எதையும் ஒப்புக் கொள்ளாதது. அதை எப்படி சுருக்கமாக இவருக்கு சொல்லிப் புரிய வைப்பது?

அவன் குழப்பத்துடன் யோசிக்க ஆரம்பித்தான். அவருக்கும் அவன் குழப்பம் விளங்கியிருக்க வேண்டும். சிரித்தபடியே அவன் எதிரில் சலனமில்லாமல் அமைதியாய் பரவிக்கிடக்கும் ஏரி நீர் மேல் கால் வைத்தார். அந்தப்பட்சி அவர் தோளின் மேல் அமர்ந்து கொண்டு அவனையே பார்த்தபடி இருக்க, அவர் மூழ்காமல் நனையாமல் ஏதோ தரைமேல் நடப்பதுபோல நடந்து செல்லத் தொடங்கினார். அவன் அப்படியே ஸ்தம்பித்தான். கண்ணிமைகள் சினிமா ஸ்கோப் திரைபோல அகன்று விரிந்துவிட, செப்பாலடித்த ஒரு சிலை போல நின்றான்.

# 6

***ஆ**காயத்தில் ஏதுமில்லை. அது தடைகள் அற்ற ஒரு திறந்த வெளி. அந்த வெளியில் காற்றின் பொருட்டு புவி ஈர்ப்பு விசையானது செயல்பட்டபடி இருக்கிறது. அதன்படி அந்த விசையின் எடையைவிடக் குறைவானவையே ஆகாயத்தில் மிதக்க முடியும். அல்லது அந்த எடையை எதிர்த்து செயல்பட முடிந்தவை மிதக்க முடியும் அல்லது பறக்க முடியும்.*

*ஒரு மனிதர் புவி ஈர்ப்பு விசையைவிடக் குறைவான எடையை கொள்ளுதல் சாத்யமா? பஞ்ச பூத அணுக்களின் சேர்க்கையால் உருவான ரத்தமும் எலும்பும் சதையும் நிறை உள்ளவைதானே, அது எப்படி எடையற்றுப் போக முடியும்? போன்ற கேள்விகளுக்கு*

*விடை ஆகாயத்தையும் பூமியையும் இணைத்தபடி இருக்கும் காற்றிடம்தான் உள்ளது. மெல்ல வீசினால் தென்றல். வேகமாக வீசினால் புயல். காற்றாலையில் தேவைக்கு பயன்பட்டால் ஆக்க சக்தி என்று அது பயன்படுத்தப்படும் விதத்தில்தான் எல்லாமே உள்ளது.*

*எனவே காற்றால் நிரம்பிய ஆகாயத்தையும் ஒரு திட சக்தியாக பாவித்து அதில் ஊடுருவும் பயிற்சியை பல புத்த பிட்சுக்கள் பெற்றிருந்தனர். கண்ணாடியை ஒரு தடையாக கருதாமல் ஒளியானது ஊடுருவுகிறாற்போல ஆகாயத்தை தங்கள் சரீரத்தால் ஊடுருவினார்கள்.*

*இதைப்பற்றி பல பௌத்த துறவிகளின் நூல்கள் தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றன.*

**அ**வ்வளவு தூரம் வந்துவிட்டு எப்படி பூஜிக்காமல் திரும்புவது?

நாராயணவர்மா ஒரு முடிவுக்கு வந்தவராக புலியைக் கொல்லுவதற்காக கொண்டு வந்திருந்த கத்தியால் யாரும் எதிர்பாராதபடி தனது கரத்தைக் கீறிக் கொண்டு ரத்தம் பெருக விட்டார்.

அதை அப்படியே கோட்டைச்சாமி எனப்படும் அந்த நடுகல் மேல் சொரியவும் செய்தார். கொளஞ்சியப்பர் அதைப் பார்த்து மகிழ்ந்துதான் போனார்.

"பலே.. பலே நாராயணவர்மா... பலே... இதுக்கு பேர் தான் பொன்னை வைக்கற இடத்துல பூவை வைக்கற துங்கறது. இருந்தாலும் சொல்றேன். கருணாகரனோட அலட்சியம் இனி உம் பரம்பரையை என்ன செய்யும்னு

சொல்ல முடியாது. எது வந்தாலும் அதை நீ சந்திக்கத் தான் வேணும்'' என்றபடியே கூடையில் இருந்த மாலையை எடுத்து ரத்தத்தில் நனைந்த நடுகல்லுக்கு சாத்திவிட்டு அப்படியே சாஷ்டாங்கமாக தரையில் விழுந்து வணங்கினார்.

சிங்கன் ஓடிப்போய் ஏதோ ஒரு பச்சிலையை பிடுங்கிக் கொண்டு வந்து அறுபட்டு ரத்தம் பீறிடும் நாராயண வர்மாவின் கையில் வைத்து கட்டுப் போட்டான்.

வேணுமதி நாச்சி கண்களில் கண்ணீர் தளும்ப அதை வேடிக்கை பார்த்தாள். அதன் பின் கொளஞ்சியப்பர் சொன்னபடி அந்த ஆலமரத்தை பதினொரு முறை சுற்றி வந்தனர்.

அப்போது அவரும் தூமாட்டியில் சாம்பிராணி போட்ட வராக நடக்க, அந்த இடம் முழுவதுமே ஒரே வாசனைப் புகை மயமாகிப் போனது.

இறுதியாக விழுந்து வணங்கிவிட்டு வந்த வழி திரும்பி நடந்து கார் நின்றிருக்கும் கப்பிச் சாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

டிரைவர் மட்டும் நின்று கொண்டிருந்தான். "எங்கப்பா கருணா?" வேணுமதி ஆவலோடு கேட்க,

"இளையராஜாங்களா.. இங்க அவர் இல்லீங்களே ராணியம்மா... உங்களோட வந்தவர்தானே!"

''என்னது..கருணா வரலையா..என்னங்க கேட்டீங்களா!''

''என்னடா சொல்றே. எங்களை விட்டு எங்களுக்கு முந்தி கிளம்பினானே! இங்கதானே வந்திருக்கணும்?''

"இல்லீங்க ராஜா.. அவர் வரலை."

"வரலையா...அப்ப எங்க போயிருப்பான்?'' கேள்வியைத் தொடர்ந்து பதற்றம் தொற்றிக் கொண்டது. கார்வாரும் டிரைவரும் சுற்றிச் சுற்றிப் பார்த்தனர். இளைய ராஜா... இளையராஜா...'' என்கிற குரலோடு அங்கிருந்து தேடிக் கொண்டு புறப்பட்டனர்.

கொளஞ்சியப்பர் எதுவும் பேசவில்லை.

காரின் முன் கதவை திறந்து கொண்டு இருக்கையில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

''கொளஞ்சியப்பரே. என்ன உட்கார்ந்திட்டீங்க. எனக்கு பயமா இருக்கு'' என்று அவர் முன் சென்று கமறினார் நாராயணவர்மா.

"இனி எதுவும், நம்ம யார் கைலயும் இல்லை. நடக் கறதை வேடிக்கை பார்க்க வேண்டியதுதான்."

"ஐயோ, இரண்டுநாள்ல அவனுக்கு கல்யாணம் நடக்கப் போகுது.''

"அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? இந்த மலைக் காட்டுல பயபக்தியோட வரணும். வரலைன்னா யாரா இருந்தாலும் அதுக்கு தண்டனையை அனுபவிச்சுதான் தீரணும்.''

"அவன் என்ன வேணும்னா செய்தான்?அவன் சின்னப்

பையன். அதான் பதிலுக்கு நான் என் ரத்தத்தையே காணிக்கையா கொடுத்தேனே!''

''மன்னிக்கணும். எனக்கு பதில் சொல்லத் தெரியலை. ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்குங்க. பிரச்சினைக்கு பயந்து பக்தி செலுத்தறது ஒரு விதம். உள்ளன்போட, எப்பவும் நம்பிக்கையோட பக்தி செலுத்தறது இன்னொரு விதம். இது சித்திவனம்.இங்க மனுஷனைவிட காட்டுக்கு சக்தி அதிகம். அவ்வளவுதான் சொல்வேன்."

கொளஞ்சியப்பரின் பேச்சில் அங்கும் இங்குமாய் ஏக பொருள்.

வேணுமதி கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்திருந்தாள்.

"கவலைப்படாத வேணு... இங்கதான் எங்கயாவது இருப்பான். ஒருவேளை பாதை மாறி எங்காவது போயிருக் கலாம். அதான் தேடிகிட்டு போயிருக்காங்கல்ல, அவன் கிடைச்சிடுவான், கவலைப்படாதே."

நாராயணவர்மா மனைவியைத் தேற்றினார்.

"இல்ல...இந்த காட்டுல காணாமபோன யாருமே கிடைச் சதில்லையே. நம்ம பையன் மட்டும் எப்படிங்க?" அவள் கேவி அழுதாள். நேரம் உருளத் தொடங்கியது.

சூட்கேஸில் துணிமணிகளை எடுத்து அடுக்கிக் கொண் டிருந்தான் குமரவேல்.அதைப் பார்த்த ராஜாத்தி, ''எங்கப்பா கிளம்பிட்டே" என்ற கேள்வியோடு அருகில் வந்தாள்.

"கருணாவோட கல்யாணத்துக்கும்மா.''

"ஐயோ வேண்டாம்ப்பா... ஒரு வாழ்த்து தந்தி கொடுத்துருன்னு சொன்னேன்ல."

"இல்லம்மா... அது நல்லா இருக்காது. ஒரே நாள், நான் கல்யாணத்துக்கு போய்ட்டு திரும்பி வந்துடறேன். நீ அநாவசியமா பயப்படாதே."

"கருணா, வந்து..'' அவள் மிடறு விழுங்கினாள். ஏதோ சொல்ல வந்தாள். கச்சிதமாய் வாயில்புறம் குடு குடுப்பைக் காரனின் வருகைக்கான சப்தம். குடுகுடுப்பை சப்தம் முந்திக்கொண்டு காதில் வந்து விழுந்தது. அவள் கவனமும் உடனே வாயில் பக்கம் திரும்பியது. குளித்து முடித்த நிலையில் தலையை துவட்டியபடியே ராஜரத்னமும் கச்சித மாக வந்தார். அவர் காதிலும் அவன் குடுகுடுப்பை சப்தம் கேட்டது.

"நல்ல காலம் பொறக்குது. நல்ல காலம் பொறக்குது'' அவனும் குரல் கொடுக்கத் தொடங்கினான்.

"மலைபோல வர இருந்த துன்பம் பனிபோல கரையுது..

மகராசன் வீட்டுக்கு மகராணி வரப்போறா...

நல்ல காலம் பொறக்குது... நல்ல காலம் பொறக்குது..

கருப்பிப் பட்சியால ஒரு திருப்பம் நேரப்போகுது.

ட்ரொய்ங்ஸ்... ட்ரொய்ங்ஸ்... ட்ரொய்ங்ஸ்..." அவன் பேச்சு ராஜாத்தியின் மனதில் பாலை வார்த்ததுபோல் இருந்தது. வேகமாய் உள்ளே சென்றாள். ஒரு பழைய புடவை, முறத்தில்அரிசி என்று எடுத்துக்கொண்டு அவனை

நோக்கி ஓடினாள்.

ராஜரத்னம் ஒரு சிரிப்பு சிரித்துக்கொண்டார். குமரவேல் முகத்தில் அதே தீவிர சிந்தனை.

"என்ன தம்பி கல்யாணத்துக்கு கிளம்பிட்டியா?"

"ஆமாம்ப்பா."

"போய்ட்டு வா...உன் அம்மா இனிமே உன்னை தடுக்க மாட்டாங்க. "

"அங்கதான்ப்பா எனக்கு வருத்தம்."

"ஒரு குடுகுடுப்பைக்காரன் பேச்சுக்கு இருக்கற மதிப்பு உன் முடிவுக்கு இல்லேங்கறதாலா?"

"ஆமாம்...இது என்ன பொழைப்பு?மனுஷ மனங்களோட நம்பிக்கைகளோட விளையாடிக்கிட்டு."

"அது அவங்க கடமைப்பா. அவங்க விளையாடறவங்க இல்ல. சமுதாயத்தை எச்சரிக்கறவங்க. நல்ல காலம் பொறக்குதுன்னு பாசிடிவ்வா ஆரம்பிச்சு ஒவ்வொரு குடும் பத்துக்கும் நல்லது கெட்டதை சொல்றவங்க."

"நமக்கு நல்லது கெட்டது சொல்றவங்க போயும் போயும் ஒரு பிச்சைக்காரனாவா இருக்கணும்?"

"நீ பிச்சைக்காரனா பாக்கறே. ஆனா உண்மைல அவன் வாழ்க்கையை அன்னிக்கு அன்னிக்கு வாழ்ந்துக் கறவன். குடுகுடுப்பைக்காரங்களை யாருன்னு நினைச்சே. ஒரு ஊர்ல நிறைய குடுகுடுப்பைக்காரர்கள் இருந்தா அந்த ஊருக்கு பெருசா எந்தப் பழுதும் வந்துடாது. அவங்க

வரவும் விடமாட்டாங்க. சுருக்கமா சொல்லப்போனா உடம்புக்கு வைத்தியம் பாக்கற டாக்டர் மாதிரி ஊருக்கே வைத்தியம் பார்க்கறவங்க அவங்க.''

ராஜரத்னம் ஒரு புதிய கோணத்தில் பார்த்து பேசினார்.

"அவங்களை ஏய்ச்சுப் பிழைக்கறவங்களா மட்டும்தான் என்னால பார்க்க முடிஞ்சுது. ஆனா எப்படிப்பா உங்களால இப்படி எல்லாம்கூட யோசிக்க முடியுது?"

''பாக்கற விதம்தான்."

''பாக்கற விதம்னா..?''

குமரவேல் கேட்க ராஜரத்னமும் தலையைச் சீவியபடியே பதில் சொல்ல, அதை ராஜாத்தியும் சிரித்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள்.

''பாக்கற விதம்னு சொன்னீங்களே... விளக்கமா சொல்லுங்களேன்.''

''எதுவுமே பாக்கற விதத்துலதான் இருக்கும். தரைல பொன் கிடக்குதுன்னு வை. அதை காக்கா பொன்னா நினைச்சா மிதிச்சுகிட்டு நடப்போம். அதையே பொன்னா நினைச்சா எடுத்து பத்ரமால்ல வெச்சுக்கப் பார்ப்போம்?"

"அப்ப பாக்கற விதம் பாசிடிவ்வா இருக்கணுமா?"

"நிச்சயமா... இப்ப இந்த குடுகுடுப்பைக்காரன் விஷயத்தையே எடுத்துப்போமே. இவன் ஒரு போலியான வேஷக்காரனாகவே இருக்கட்டுமே. இவனை நீ நல்லவன்னு நம்பி, இவன் சொல்றதை எடுத்துக்கறதுல உனக்கு என்ன

நஷ்டம்?"

"அப்ப அவன் ஏதாவது புளுகி நம்மை பயமுறுத்து வான். அதை எல்லாமும் பாசிடிவ்வா எடுத்துக்கணுமா?"

"நல்லதோ... கெட்டதோ, யார் என்ன சொன்னாலும் நம்ப கர்மா படிதான் குமரு எல்லாம் நடக்கும். அது தெரிஞ்சா யார் என்ன சொன்னாலும் கவலைப்பட மாட் டோம். காதுல கேட்டுகிட்டு அசைபோடுவோம்."

''கர்மான்னா..?''

"பதினெட்டு வருஷம் புத்தியிருந்தும் இல்லாதவனா நான் இருந்தேன் பாரு, அது கர்மா. அந்த நிலையிலும் தெருத் தெருவா பிச்சை எடுக்கவிடாம ஒரு சாமியார் என்னை பராமரிச்சார் பாரு,அது கர்மா. அந்த நிலையிலும் அந்த ஆஸ்ரமத்துல என்ன செய்யறோம்கறதே தெரியாம நான் சில திருப்பணி செய்தேன் பாரு. அது கர்மா. எங்கையோ நான் செஞ்ச அதுக்கு சந்தோஷப்பட்டு விலை மதிக்க முடியாத எதிர்காலத்தை சொல்ற ஒரு புத்தகத்தை அந்த மகான் உனக்குக் கொடுத்தார் பார், அது கர்மா.''

தொட்டுத் தொட்டு ராஜரத்னம் புத்தகத்திடம் வந்து நின்றார்.

புத்தகம்தான் குமரவேலையும் இன்னமும் குழப்பிக் கொண்டிருக்கிறது. அதை நம்பவும் முடியவில்லை; நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. இதெல்லாம் கண்கட்டு, மாயம் என்றெல் லாம்தான் நினைக்க முடிகிறதே தவிர நம்பிக்கையோடு ஒரு புரிதலோடு அதை மதிக்க

முடியவில்லை. புத்தகமும் பெட்டியில்தான் இருந்தது. எதற்கும் இருக்கட்டும் என்று வைத்துக் கொண்டிருந்தான். கர்மா என்பதற்கு ராஜரத்னம் கொடுத்த விளக்கத்தோடு அந்த புத்தகத்தைப் பார்த்தான்.

நடந்தவைகளை பட்டியல் போட்டு அதை கர்மா என்கிறார். அதைக் கடந்து ஒரு சூட்சுமமான பொருள் இருக்கிறது. அதைச் சொல்ல அப்பாவுக்கு தெரியவில் லையா இல்லை, அப்படி ஒன்றே கிடையாதா?

சிந்தனையோடு பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பத் தயாரானான்.

"பாத்து போய்ட்டு வா.." என்று மட்டும் சொன்னாள் ராஜாத்தி.

அவனுக்கு அந்தக் குழப்பத்திலும் சிரிப்பு வந்துவிட்டது.

# 7

***அ**ந்த நாளில் தமிழ் வளர்த்த மதுரையிலேயே சமணமும் பௌத்தமும் தழைத்திருந்தன. சைவம் வைணவ மெல்லாம் அறவே இல்லாத ஒரு நிலையில் சமணமும் பௌத்தமும் மட்டுமே மனிதர்களின் சமயம் என்கிற ஒரு நிலை இருந்தது. இதில் பல பௌத்த பிட்சுக்கள் தவமியற்றிய நிலையில் அப்படியே அந்தரத்தில் மிதந்தார்கள் இன்னும் சிலர் ஆகாயமார்க்கத்தில் ஏதோ தெருக்களில் நடந்து செல்வது போல நடந்து சென்றனர்.*

***இதைப்பார்த்த மக்களும், அதை மிக தெய்வீகமாகவும் அற்புதமாகவும் கருதி அவர்கள் வழி நடந்தனர்.***

***ஆனால், அதில் உதான வாயுவைப் பயன்படுத்திச் செயல்படும் பயிற்சியும் சூட்சுமமும் தான் இருந்தது. அந்தப் பயிற்சியில் அவர்கள் தலை சிறந்து விளங்கி னார்கள். காரணம், அவர்களது புலனடக்கம். ஐம் புலனையும் சுருக்கி உள்ளொளியைப் பெருக்கிக் கொள்வதில் நிகரில்லாதவர்களாக விளங்கிய அவர்களின் சாகலத்தை ஒரு மாயமாக உலகம் பார்த்தது. ஆனால் உண்மையில் அது அஷ்டமா சித்தியில் ஒன்றான இலஹிமாவாகும்.***

யானைமலை பஸ் ஸ்டாண்டில் இறங்கி ஆட்டோக் காரர் ஒருவரைப் பிடித்து 'அரண்மனைக்குப் போக வேண்டும்' என்று சொன்ன மறு நொடி ஆட்டோ டிரைவர் பார்த்த விதமே ஒரு மாதிரியாக இருந்தது.

"நீங்க கல்யாணத்துக்கு வந்தவரா?"

"ஆமாம்."

"உங்களுக்கு விஷயம் தெரியாதா?"

"என்ன விஷயம்?"

"மாப்பிள்ளை கருணாகரவர்மா காட்டுல காணாம போய்ட்டார்."

"என்னது காணாம போய்ட்டாரா!"

ஆமாம் தேடிப்போன அவ்வளவு பேரும் வெறும் கையை வீசிகிட்டு திரும்பிட்டாங்க. மிருகங்க அடிச்சு

சாப்ட்டுருக்கணும்னுல்லாம் பேசிக்கறாங்க."

குமரவேலுக்கு குலையே நடுங்கியது. சிவசாமி வீடு தேடி வந்து சொல்லி விட்டுச் சென்றதெல்லாம் ஞாபகம் வந்தது.

அது ஒரு வித்தியாசமான அரண்மனை. அங்கே தொட்ட இடமெல்லாம் மர்மம். சாங்கியம், சம்பிரதாயம் என்று எல்லாமே அங்கே படு வித்தியாசமானவை என்று சிவசாமி சொன்னதை ஒரு நொடி நினைத்துப் பார்த்தவன் "சரிப்பா நீ ஆட்டோவை எடு'' என்று ஏறி அமர்ந்தான்.

***அ***ரண்மனை வளாகம்!

ஒரு சீரியல் விளக்குகூட எரியவில்லை இழவு விழுந்த இடம் போல எங்கும் ஒரே இறுக்கம். போலீஸ் ஜீப்களும் கூட கண்ணில் பட்டன. பாளையம் வனச்சரகம் என்கிற முகப்பெழுத்துக்களுடன் ஃபாரெஸ்ட் ரேஞ்ச் ஆபீஸ் ஜீப்களும் கண்ணில் பட்டன.

கும்பல் கும்பலாக பலரும் கூடி நின்று தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கையில் சூட்கேசுடன் மலங்க மலங்க பார்த்தபடி நடந்த குமரவேலுக்கு யாரிடம் போய், எதைக் கேட்பது என்றே தெரியவில்லை.

எல்லோரும் படு தீவிரமான டிஸ்கஷனில் இருந்தனர். சரேல் சரேலென்று ஜீப்புகள் வருவதும் கிளம்புவதுமாக இருந்தன.

வயதான பெரியவர் ஒருவர் தடுமாறியபடி வந்து குமரவேலிடம், ''தம்பி ராஜா எங்க இருக்கார்ப்பா. நான் அவரைப் பார்க்கணும்'' என்றார்.

"எனக்குத் தெரியாதுங்க... நானே புதுசு'' என்றவன் சற்றே தடுமாறி விழப்போன அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

"நான் போன முறை ராஜாவை சந்திச்சப்பவே காடு, குலதெய்வம்னுல்லாம் போகாதீங்கன்னேன். அதை கேட் டிருந்தா இப்ப இப்படி ஆயிருக்காது" என்று அவன் கேட்காமலே அவர் புலம்ப ஆரம்பித்தார்.

"என்ன சொல்றீங்க? நீங்க நீங்க யாரு?"

"நான் யாரா இருந்தா என்ன, ராஜாவுக்கு அவர் மகன் பத்தி தெரியணும்னா, அவர் ஆளை விட்டு தேடிகிட்டிருந் தால்லாம் பிரயோஜனமில்ல, காக்காச்சாமின்னு ஒருத்தன் பிச்சைக்காரன் மாதிரி இருப்பான். இங்கதான் எங்கயாவது சுத்தி வந்துகிட்டிருப்பான். அவனைப் பிடிக்கணும். அவன் கிட்ட ஒரு பிரசன்னபுத்தகம் இருக்கு. அது எட்டு ஊருக்கு வழி காட்டும். ரொம்ப அபூர்வமான புத்தகம் அது. அதுல இருக்கு வழி.''

அவர் சொன்ன மறு நொடி 'சுரீர்' என்றது. தன்னிடம் தற்போது இருக்கும் புத்தகத்தைத்தான் சொல்கிறாரோ?

''உங்களுக்கு எப்படி அந்தப் புத்தகத்தைப் பற்றி தெரியும்?''

"வெச்சிருந்தவனே நான்தானே!" அவர் அடுத்தகட்ட அதிர்ச்சியளித்தார்.

"அப்ப எப்படி அது உங்களை விட்டுப் போச்சு?"

"அது வடிவத்துலதான் புத்தகம். மத்தபடி அது ஒரு மகரிஷியைப் போலதான். சொல்லப்போனா காகபுஜண்டரே அந்த புத்தகமா மாறிட்டதா சொல்வாங்க. அவர் யார்கிட்ட விரும்புகிறாரோ அவங்ககிட்டதான் அது இருக்கும். என் கிட்ட இருக்க அவருக்கு விருப்பமில்ல... அதான் போயிடிச்சு."

"ஒரு சாதாரண புத்தகமும் உயிருள்ள ஒரு மனுஷனும் ஒண்ணா... எப்படி? புரியலியே..."

"வேண்டாம் இப்ப இப்படி கேள்வி கேட்கறதால ஆகப் போறது ஒண்ணுமில்லை. அந்த புத்தகத்தோட காக்காச் சாமி இந்த காட்டுக்குள்ளதான் இருந்தான். இது துஷ்ட தேவதைகள் வசிக்கிற காடு. அதனாலயோ, இல்லை வேற காரணத்தாலயோ அவன் இங்க இருந்து போயிட்டான். அது தெரியாம அந்த புத்தகத்தை தேடி ரொம்ப பேர் இந்த காட்டுக்கு வந்துருக்காங்க. பேராசை... அவ்வளவு பேரும் அப்புறம் என்ன ஆனாங்கன்னே தெரியாது. என்கிட்ட மட்டும் இப்ப அந்தப் புத்தகம் இருந்தா இளையராஜா உயிரோட இருக்காரா இல்லையான்னு எல்லாத்தையும் மக ரிஷிகிட்ட கேட்டே சொல்லிடுவேன். அதுல ஒரு வெள்ளைப்பக்கம் இருக்கு. நம்ம கேள்விக்கும் ராசிக்கும் உகந்த பதிலை அதுல மகரிஷியே எழுதுவார். இதை

நம்பாம பேசறவங்களும் உண்டு. ஆனா அதைக் கொண்டு பலன்கள் தெரிஞ்சுகிட்ட எனக்குத்தான் உண்மை தெரியும்."

பெரியவர், குமரவேலுக்கு சில உண்மைகள் தெரிய வேண்டும் என்பதற்காகவே வந்தவர் போல் இருந்தது. அவர் சொன்னதை அசை போட்டவன் மெல்ல விலகி, ஒரு மரத்தடியில் போய் அமர்ந்தான்.

சுற்றி ஒரு பார்வை பார்த்து விட்டு பெட்டியை திறந்தான். உள்ளேயிருந்து அந்த புத்தகத்தை எடுத்தான். பக்கங்களைப் புரட்டினான். ராசிச் சக்கரத்தை கண்ணை மூடிக்கொண்டு ஆட்காட்டி விரலால் தொட்டான். விரல் நுனி கடகத்தில் பட்டது.

பலனுக்காக வேகமாக முப்பத்து ஆறாம் பக்கம் சென்றான்.

*வரிகள் காத்திருந்தன*

*கடகத்தில் விரல் தொட்ட பாலகா*

*கானகத்தில் இருக்கிறான் சினேகிதன்*

*காடதனில் கரட்டடியில் காவினுள்*

*ஆவலில் கிடக்கிறான். காவதன் நடுவிலோர்*

*ஆமைப்பாறை மேலே நின்றே ஓம் என்றுரைக்க*

*காணலாம் அவனை கவனம் நீ தனியே செல்.*

வரிக்கு வரி துல்லியமாகப் புரிந்தது. தனியே செல் என்கிற குறிப்பு மட்டும் கொஞ்சம் நிரடியது. இருந்தும் துணிவை வரவழைத்துக் கொண்டான். வன இலாகா

அலுவலர் ஒருவர், சற்றுத் தள்ளி கண்ணில் பட்டார். நெருங்கினான்.

"ஏங்க இந்த அரண்மனைக்குப் பின்னால உள்ள பாளையம் வனச்சரகத்துல கரடு ஏதாவது இருக்குதா?''

"இல்லாமதான் அங்க இளையவர் போய் காணாமலும் போனாராக்கும்.''

"அங்க கா'வினுள்.. அதாவது ஏரி மாதிரி ஏதாவது இருக்கா?''

"சாமியார் ஓடை தண்ணியெல்லாம் காட்டைச் சுத்தி ஏரியாதானே சேர்ந்து நிக்குது.''

"அதுல ஆமைப் பாறைன்னு ஏதாவது."

''எதுக்கு இப்படி வளைச்சு வளைச்சு கேக்கறிங்க?"

"இல்ல... இளையவர் என் கூட படிச்சவர். நான் போய் தேடத்தான் கேக்கறேன்.''

''காட்டுலேயே பழியா கிடக்கறவங்க நாங்க. நாங்க போயே ஒண்ணும் பண்ண முடியலை. இதுல உங்களால என்னங்க பண்ண முடியும்?"

"ஒரு நம்பிக்கைதான்."

"சரி வாங்க நானும் வரேன். தேடிகிட்டே இருக்கச் சொல்லி உத்தரவு எங்களுக்கு. வாங்க போவோம்.''

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வருவது என்பது இதுதானா?

ஆனால் தனிமையில் அல்லவா போகச் சொல்லியிருக் கிறார் மகரிஷி.

யோசனையுடன் நின்றான். பிறகு காட்டுக்குள் போய் இந்த நபரை எங்காவது கழட்டி விட்டுக் கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்தவன் சரி என்ற சம்மதத்துடன் ஜீப்பில் ஏறினான்.

ஜீப்பும் கிளம்பியது. அவர் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

"உங்க பேர்..?"

"குமரவேல்"

"இளையவரோடு காலேஜ்ல படிச்சீங்களோ?"

"ஆமாம்"

"பாவம் இளையவர். இந்த அரண்மனைலயே ரொம்ப தங்கமான குணமுள்ளவர் அவர் மட்டும்தான்."

"ஆமாம்... காலேஜ்ல படிக்கும் போது எனக்கு கருணா ஒரு அரண்மனை வாரிசுங்கறது தெரியாது."

"அவர் முதல்ல தன்னை அப்படி நினைச்சாதானே. ஆனா, நல்லவங்களுக்குதான் எல்லா சோதனையும் ஏற்படுது."

"ஆமா இந்தக் காடு அப்படி என்ன காணாம போற அளவுக்கு பெரிசா?"

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்ல... ஏகாந்தமா தவம்

பண்றவங்களுக்கு ரொம்ப ஏத்த காடு இது. வத்தாத ஏரி, ஓடைங்க... அப்புறமா நிறைய பழமரங்க. சாமியாருங் களுக்கு இப்படி இருந்தாதானே பிடிக்கும்.''

"சாமியாருங்கள நீங்க பாத்துருக்கீங்களா?''

''எனக்கு தெரிஞ்சு ஒரே ஒரு சாமியார்தான் இருக்கார். அவரும் எப்பவாவது கண்ணுல படுவார். பேசமாட்டார். சிரிச்சுகிட்டே போயிடுவார்.''

"அவர் எங்க தங்கியிருக்காருங்க?''

"அதான் பெரிய புதிர்! நிறைய குகைங்க இருக்கறதா சொல்றாங்க."

"அந்த குகைகளை நீங்க பார்த்ததில்லையா?''

"இல்லை... இதுவரை பார்க்க வாய்ப்பு கிடைக்கல. ஆனா இந்த காட்டுல நிறைய துஷ்ட சக்திகள் நடமாடுது. அது தெரியும்.''

"துஷ்ட சக்தின்னா?''

''காட்டேரி, முனின்னுல்லாம் சொல்வாங்களே..''

"அதுங்களை பார்த்திருக்கீங்களா?''

''பார்த்ததில்லை...ஆனா நிறைய வான்கோழிங்க தலை யில்லாத முண்டமா அங்கங்க கிடக்கறதைப் பார்த்திருக் கிறேன். அதெல்லாம் அதுங்க வேலைதான்னு சொல் வாங்க.''

ஜீப் வனச்சரக பலகையைத் தாண்டி புழுதியை புரட்டிக்

கொண்டு பறந்தது.

"இந்த காட்டுல நிறைய பேர் காணாம போயிருக்காங்க. அதுக்கும் அரண்மனைக்கும்கூட சம்பந்தம் இருக்கும்னு சொல்றாங்களே."

"நாங்களும் உங்களை மாதிரிதான் கேள்விதான் பட்டோம். ஆனா உண்மை என்னன்னு தெரியாது. இந்த அரண்மனையோட ராஜாவா இருக்காரே நாராயணவர்மா.."

அந்த அதிகாரி பெரிதான பீடிகையுடன் ஏதோ சொல்ல வந்து அப்படியே மௌனமானார்.

"என்னமோ சொல்ல வந்தீங்க."

''வேண்டாம் விடுங்க... நீங்க வேற இளையவரோட ஃப்ரெண்டுங்கறீங்க. நான் எதையாவது சொல்லி உளறி வைக்கப் போறேன்.''

"பரவால்ல சொல்லுங்க."

"என்னத்த சொல்றது? இந்த மலைல அஷ்டமா சித்துப் பத்தி தெரிஞ்ச பல சாமியாருங்க இருக்காங்களாம். அவங் கள்லாம் அந்த சித்துவை அடைய நிறைய நரபலி கொடுப் பாங்களாம்."

"சரி அதுக்கும் அரண்மனைக்கும் என்ன சம்பந்தம்?"

''விடமாட்டீங்களே... நம்ம ராஜாவும் அந்த மாதிரி அஷ்டமா சித்துக்கு ஆசைப்பட்டு பலியெல்லாம் கொடுக் கறவர்னு ஒரு வதந்தி இருக்குது.. தெரியுமா?"

அந்த ஆபீசரின் கேள்வி குமரவேலை ஒரு உலுக்கு

உலுக்கி விட்டது.

"அப்படியா...எனக்கு சத்தியமா தெரியாதுங்க'' என்றான்.

"யார் கண்டா நாங்களும் கண்ணும் கருத்துமாதான் இருக்கோம். எங்களுக்கு ஒரு தடயம்கூட கிடைக்கமாட் டேங்குது. ஒருவேளை ராஜா தன் மகனையே பலி கொடுத் துட்டாரோ என்னவோ, யார் கண்டது?''

அந்த நபர் ஆழம் பார்ப்பது போல் சொன்னது குமர வேலுக்குள் அடுத்த ஊசியை ஏற்றியது.

ஜீப்பும் ஒரு இடத்தில் நின்றது.

எதிரில் மலைச்சரடு... ஒற்றையடிப்பாதை... ஓடை நீரின் சலசலப்புச் சப்தம்.

கீழ் இறங்கினான் குமரவேல். சூட்கேஸையும் கையில் பிடித்துக் கொண்டான்.

அந்த நபர் அடுத்து அவன் என்ன செய்யப் போகிறான் என்கிற மாதிரியே பார்த்தார்.

"அஷ்டமாசித்து, நரபலி அதுவும் ராஜாவேகூட அப்படி செய்யலாம்கற மாதிரி என்னென்னமோ சொல்லி என்னை நடுங்க வெச்சுட்டீங்க. என் நண்பனுக்கு எதுவும் ஆகி யிருக்கக் கூடாது... ஆகியிருக்காது... நம்பிக்கை இருக்கு. நீங்க அந்த பக்கமா போய் தேடுங்க. நான் இந்தப் பக்கமா போறேன். சரியா ஒரு மணி நேரம் கழிச்சு திரும்ப நான் இங்க வந்துடுவேன். நீங்களும் வந்திடலாம். சரியா?"

"சரி இல்லை. நாமே சேர்ந்து தேடுவோமே...''

அவர் பிடி போடும்போதே ஏதோ சலசலப்பு. ஒரு மலைப் பளியன் தலையில் ஒரு பெரிய விறகுக் கட்டுடன் ஓடிக் கொண்டிருந்தான். அது அனேகமாக சந்தன மரமாகத்தான் இருக்க வேண்டும்.

அதைப் பார்த்த அந்த வன இலாகாவைச் சேர்ந்த மனிதர் 'ஹேய்...' என்று அலறியபடியே அவனைத் துரத்தத் தொடங்கினார்.

குமரவேலுக்கு கடவுளே பார்த்து வழி விட்டது போல் தோன்றியது.

வேகமாக அங்கிருந்து நடந்தான்.

முன்பு கருணாகரவர்மன் காலை வைத்த அதே ஓடைக்கரை. அங்கே சென்று நிமிர்ந்தவனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

எதிரில்.. ?

# 8

***ம**னிதன் இடம் விட்டு இடம் செல்ல முதலில் கண்டறிந்த விஷயம் ஒரு சக்கரமாகும். அதிலிருந்துதான் வண்டிகள் தோன்றின. அதன் பரிணாம வளர்ச்சியில் இன்று பெட்ரோல் டீசலில் இயங்கும் கார், பஸ்கள் வந்து விட்டன.*

*இதில் ஆகாயமார்க்கத்தில் பயணிக்க அவன் கண்டறிந்*

***தத்தே விமானங்கள்.அதைக்கூட இந்த நூற்றாண்டில் தான் கண்டறிந்ததாக நாம் நம்புகிறோம். ஆனால் வரலாற்றை உற்றுப் பார்த்தால் முந்தைய காலத்தில் பௌத்த சன்யாசிகள் இன்றைய விஞ்ஞானிகளை தூக்கிச் சாப்பிடுமளவுக்கு மேதைமையுடன் இருந்திருப்பது தெரிய வருகிறது.***

***அகஸ்த சம்ஹிதை, கலித சூத்ரா, கரண மூலா போன்ற நூல்களில் விமானம் பற்றி நிறைய குறிப்புகள் இருக்கின்றன.***

***உடலைக் கோவிலாகக் கருதி அதைப் பேணுவதில் பௌத்தர்கள் சமர்த்தர்கள்.***

***சைவமும், வைணவமும் நம் மண்ணில் அவர்களை அழித்து ஒழித்துவிட்டது என்பதே உண்மை. அதில் அவர்களின் ஆற்றலுக்கு சான்றான பல குறிப்பேடுகள் அழிந்துவிட்டன.***

***அதன்படி உதான வாயுவை எவ்வளவு உள்ளிழுக்க வேண்டும், எவ்வளவு அதை வெளியில் விட வேண்டும் என்பதில்தான் ஒருவர் எடை குறைந்து லேசாவதும் ஆகாயத்தில் பறப்பதும் நிகழ்கிறது.***

குமரவேல் ஓடைக்கரையில் நின்று கொண்டு எதிரே பார்த்தபோது தூக்கி வாரிப்போட்டது. புரண்டபடி ஓடி வரும் ஓடை நீரில் ஒரு மனிதனின் உடம்பு ஏதோ ஒரு தக்கை மிதப்பது போல மிதந்தபடி அவனை நோக்கி வந்தது.

மிதக்கும் அந்த மனிதரின் வயிற்றின் மேல் தீபம் ஒன்று ஏற்றபட்டு அது எரிந்து கொண்டிருந்தது. மிதக்கும் மனி தரைப் பார்த்தால் சவம்போல் தெரியவில்லை. இரு கை

களையும் தலைக்கு பின்னால் கோர்த்துக் கட்டிக் கொண்ட நிலையில் விறைப்பாக படுத்திருந்தார். ஓடி வரும் ஓடை நீரும் அவரைச் சுமந்தபடி அவனுக்கு மிக அருகில் வந்து விட்டது.

குமரவேலும் கூர்ந்து கவனித்தான்.

கண்கள் மூடியநிலையில் அந்த உடல் ஒரு மரக் கட்டை போல மிதந்தபடி அவனைக் கடந்தும் சென்றது.

எப்படி இப்படி நீரில் ஒரு மனிதன் மிதக்க முடியும் என்று தெரியவில்லை. ஆனால் பல சமயங்களில் மாலை முரசிலும், தினத்தந்தியிலும் சிலர் கிணறுகளில் துளியும் அசைவின்றி பல மணிநேரம் மிதந்து சாதனை புரிந்ததை படித்த ஞாபகம் மட்டும் வந்தது.

இந்த மனிதரும் அந்த ரகமோ?

எதனால் வயிற்றின் மேல் விளக்கு?

சில நொடிவரை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அப்படியே ஓடை ஓரமாய் நடந்தான். தோளில் தொங்கிக் கொண்டிருந்தது அவனது ஹோல்டான் பேக். உள்ளே பேண்ட், ஷர்ட், லுங்கி, மற்றும் ஒரு சிறு கிட் பாக்ஸ். அதில் பிரஷ், பேஸ்ட், சோப், ரேசர் என்கிற இத்யாதிகள். பத்திரமாக கையில் நிரடியது அந்த பிரசன்ன ஜாலப் புத்தகம்.

அது கையை நிரடிய நொடி அதில் தோன்றிய பாடல் வரிகள் ஞாபகத்தில் வந்தன.

*கடகத்தில் விரல் தொட்ட பாலகா*

*கானகத்தில் இருக்கிறான் சினேகிதன்*

*காடதனில் கரட்டினில் காவினுள்*

*ஆவலில் கிடக்கிறான். காவதன் நடுவிலோர்*

*ஆமைப்பாறை மேலே நின்று 'ஓம்' என்றுரைக்க*

*காணலாம் அவனை கவனம் தனியே செல்.*

பாடல் வரிகளில் சொல்லப்பட்டிருக்கும் 'கா' எது, அந்த காவில் நடுவில் ஆமைப்பாறை எங்கு இருக்கிறது?

கேள்வியோடு தேடியபடி நடந்தான்.

காட்டுக்கே உரித்தான பச்சை வாசம் மூக்கை நிரடியது. காற்றில் ஜில்லிப்பு கூடுதலாக இருந்து காதுமடலை விடைக்கச் செய்திருந்தது.

அடர்வான மரங்களில் விதம்விதமான பறவைகள். கீச்சு கீச்சு என்று அவை பேசும் பாஷை புதிதாக இருந்தது.

இப்படி ஒரு மலைக்காட்டை இதுநாள் வரையில் பார்த்ததில்லை என்று சொல்லிக் கொண்டே நடந்தான்.

வழியில் ஒரு இன்ப அதிர்ச்சி. கிட்டத்தட்ட இடுப்பு உயரத்திற்கு எம்பிய நிலையில் ஒரு சாரையும் நாகமும் பின்னிக்கொண்டு கலவியில் இருந்தன. எழும்பிய வேகத் தில் தரையில் விழுந்து மீண்டும் புரண்டபடி மேலெழும்பி குமரவேலை ஒரு பொருட்டாகவே கருதாதது போல காதலில் திளைத்தன. ஒரு க்ஷணம் நெஞ்சம் கிள்ளப் பட்டது போல் ஆனாலும் எத்தனை அபூர்வமான காட்சி

அது! எச்சரிக்கையுடன் நின்று சில நிமிடங்கள் அதை ரசித்தான்.

இப்படித்தான் பின்னிப் பிணைந்திட வேண்டும், இப்படிச் செயல்பட்டால்தான் இன்பம் என்று எந்தப் பள்ளியில் அதற்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள்? மனிதன்கூட பார்த்தும் கேட்டும்தான் அனேக விஷயங்களை உணர்ந்து கொள்கிறான். ஆனால் இந்த மிருகங்களுக்கு இந்த அறிவு எப்படிச் சாத்தியமாகிறது?

ஒருவேளை மனிதனைவிட இவைகளுக்கு நுட்ப அறிவும் திறனும் கூடுதலோ?

அந்த பாம்புகளின் பிணைப்பைப் பார்த்த நொடி குமர வேலுக்குள் இப்படி எல்லாம்தான் கேள்விகள் தோன்றின.

அந்த சர்ப்பங்களும் அப்படியும் இப்படியுமாக புரண்டு நெளிந்து ஒரு புதருக்குள் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு ஓடி கண்ணைவிட்டு மறைந்தும் போயின.

குமரவேலும் நாலாபுறமும் பார்த்தபடி நடந்தான். முழங் கால் அளவுக்கு கோரைப்புற்கள் வளர்ந்திருந்தன. மேடும் பள்ளமுமாக இருந்தது மலைப்பரப்பு.

ஓடை நீர் மட்டும் உற்சாகமாக ஓடிக் கொண்டிருந்தது. அதன் உற்சாகம் சப்தத்தில் தெரிந்தது. அதைப் பார்த்த வனுக்கு அது வரும் வழியில்தான் அந்த கரடு இருக்க வேண்டும் என்று தோன்றியது. சட்டென்று புத்தியிலும் ஒரு புதிய ஐடியா தோளில் தொங்கியபடி இருந்த ஹோல்டான் பேக்கை கீழே வைத்துவிட்டு பக்கத்தில் இருந்த ஒரு நுணா

மரத்தில் சரசரவென்று ஏற முடிந்த வரையில் ஏறினான். இருபது முப்பது அடி உயரம்வரை கிளைகளைப் பிடித்துக் கொண்டு ஏறியவன் கழுத்தை வளைத்து சுற்றிலும் பார்த் தான்.

அடர்வான மலைச்சரிவு. அங்கங்கே பசுவின் மடியில் முட்டி முட்டிப் பால் குடிக்கும் கன்றுக்குட்டி கணக்காக மேக மூட்டைகள்.

பார்க்கப் பார்க்க படுரம்மியமாக இருந்தது. பார்வை ஓட்டத்தில் மலைச்சரிவில் வளைத்துக் கட்டி நீளக் கம்பளம் ஒன்றை விரித்துப் போட்ட மாதிரி நீர்ப்படுகை தெரிந்தது.

அதன் நடுவில் அங்கங்கே நெட்டுக் குத்தலாக முக்கோன, செவ்வகங்களில், ஒழுங்கில்லாத முனைகள் கொண்ட விட்டங்களில் நிறைய பாறைகள் தெரிந்தன.

அதில் எது ஆமை முதுகுப் பாறை?

மரத்தின் மேல் நின்று கொண்டு தீர்க்கமாகப் பார்த் தான் குமரவேல், ஏமாற்றமின்றி அந்தப் பாறையும் தெரிந் தது. ஒரு பரிசலை கவிழ்த்துப் போட்டாற்போல கறுப்பாக தெரிந்த பாறைமேல் நிறைய கொக்குகள் அமர்ந்திருந்தன. கறுப்பும் வெளுப்புமாக பளிச்சென்று தெரிந்தது அந்தப் பாறை. மரத்திற்கும் அதற்கும் இடையே அதிகபட்சம் இரு நூறு மீட்டர் தூரம் இருந்தால் அதிகம் என்கிற மாதிரி தோன்றியது. ஆனால், பாறையைச் சுற்றிலும் ஏரி நீரின் சூழல். நீந்தியோ இல்லை நடந்தோதான் அந்தப் பாறையை அடைய முடியும் போல் தெரிந்தது.

எப்படியோ கண்ணில் பட்டதே என்கிற நினைப்போடு மரத்தில் இருந்து இறங்கியபின் பேக்கை திரும்ப எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு வேகமாக நடந்தான். போகிற போக்கில் அப்படியே கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி மதியம் மூன்று. நல்ல பகல்பொழுதுக்கே உண்டான வெளிச்சம். அவனுக்குள்ளும் ஒரு புது அனுபவத்துக்கு ஆட்படப்போகும் துடிப்பு.

ஏரிக்கரையை அடையவும் நீரலைகள் ஓடி வந்து அவன் காலைத் தழுவின. சில அடிகள் போட்ட போது ஆழம் அதிகரித்துக் கொண்டே போனது.

ஹோல்டான் பேக்கோடு நீந்திச் செல்வதுகூட முடியாது என்று தோன்றியது. பேக் முழுவதும் தண்ணீரில் நனைந்து அந்த பிரசன்ன ஜாலம் புத்தகம் ஒன்றுமில்லாமல் போய் விடும் போலத் தோன்றியது.

''என்ன செய்யலாம்?''

தீவிரமாக சிந்தித்தபின் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தான். பேக்கை கரையில் அடர்வாக வளர்ந்திருக்கும் ஒரு காட்டுச் செடியின் புதருக்குள் கொண்டு வைத்தான். அவன் பேக்கை வைத்த வேகத்தில் உள்ளே உறங்கிக் கொண்டிருந்த இரண்டு கீரிப்பிள்ளைகள் 'ஸ்டுக்'கென்று தாவிக் குதித்து ஓடி ஒரு க்ஷணம் அவன் நெஞ்சை அடைக்கப் பார்த்தன.

காடு என்றால் சும்மாவா?

அங்குலத்துக்கு அங்குலம் இங்கே எதுவும் இருக்கும்

என்கிற பயம் உடம்பு முழுக்க வியாபிக்க அப்படியே திரும்பினான்.

தண்ணீரில் இறங்கினான்.

படித்த புத்தகத்தின் பாட்டு, வழியைக் காட்டியது. நடக்கத் தொடங்கினான். கொஞ்சம் கொஞ்சமாய் மூழ்கி யவன் முழுவதுமாய் மூழ்கப்போன இடத்தில் இருந்து நீந்தத் தொடங்கினான்.

அந்த ஆமை முதுகுப் பாறை கண்ணில் பார்க்க அருகில் இருப்பது போல தோன்றி நீந்த நீந்த தூரச் செல்வது போல இருந்தது.

இருந்தும் வேகமாக நீந்தி பாறையை எட்டிப் பிடித்து அதன் மேல் ஏறி நின்றான்.

வீசிக் கொண்டிருந்த காற்று அவன் உடம்பில் மோதி குளிரச் செய்து உதட்டை ஊதவிட்டது.

கைகால்களை உதறிக் கொண்டவன் பாடல் வரிப்படி 'ஓம்...' என்று உரக்கச் சொல்லத் தொடங்கினான்.

அவன் எழுப்பிய அந்த சப்தம் அந்த மலைப் பிராந் தியம் முழுக்க எதிரொலித்து.

ஓம்...

ஓம்...

ஓம்...

ஓம்...

பிரணவப் பெருங்குரல் அந்தக் காடு மலை முழுக்க அலை அலையாய்ப் பரவியது.

அவனுக்கு மூச்சிரைத்தது.

குளிரும் நடுக்கித் தள்ளியது.

அடுத்து என்ன அற்புதம் நடக்கப்போகிறதோ தெரியவில்லையே... ஆவல் ததும்பி வழிந்தது.

ஒருவேளை எல்லாம் முட்டாள்தனமான எண்ணங்களோ? ஒரு வினாடி இப்படி குறுக்கிலும் கோணலாக ஒரு கேள்வி விழுந்தது.

# 9

***புராணங்களில் வரும் எல்லோரிடமும் அஷ்டமா சித்து விஷயங்களே இறைந்து கிடக்கின்றன.***

***பூமியில் நமது மனித சமூகத்தில் ஒருவர் காரில் வந்து இறங்குகிறார். கம்ப்யூட்டரை இயக்குகிறார். அழகாய் ஆங்கிலம் பேசி எழுதவும் செய்கிறார். இதை அவர் கற்று வைத்திருக்கும் விஷயமாக பார்க்கிறோம்.***

***அதேபோல் களத்துமேட்டில் வயற்காட்டில் மண்வெட்டியுடன் பாடுபடும் ஒருவனுக்கு விவசாயம் மட்டும் தான் தெரியும் என்று கருதுகிறோம்.***

***இதே மனிதக் கூட்டத்தில் அழகாக ஒருவரால் தான் பாட முடிகிறது. மற்றவர்களால் கேட்டு மகிழத்தான் முடிகிறது. இது அப்படியே சண்டை, பேச்சு, விளை***

*யாட்டு என்று எல்லா விஷயங்களுக்கும் பொருந்தும். எல்லாம் தெரிந்த ஒருவர் இருந்தால் அவரை சகலகலா வல்லவர் என்கிறோம்.*

*மனித வாழ்வின் இதே பரிமாணம்தான் தேவர் உலகில் வேறு விதத்தில் இருந்தது.*

*காலம், இடம் இரண்டையும் வென்றவர்களாக அவர்கள் இருந்தனர். அதனால் நினைத்த இடத்தில் தோன்ற முடிந்தது. அதேபோல உயரமாய், கட்டையாய் மாறும் ஆற்றல், நினைத்ததை அடையும் ஆற்றல், படைக்கும் ஆற்றல் எல்லாமே அவர்களிடம் இருந்தது.*

*ஆனால் அந்தச் செயல்களுக்கு அடித்தளம் அஷ்டமாசித்துதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

*ஒருவருக்கு எட்டு சித்தியில் எத்தனை சித்தி கைவரப் பெற்றிருக்கிறதோ அதற்கேற்ப அவரிடம் வல்லமை காணப்பட்டது.*

*விசுவாமித்திரர் இதனாலேயே திரிசங்கு சொர்க்கத்தை படைக்க முடிந்தது. நாரத மகரிஷியும் பதினான்கு உலகிற்கும் நினைத்த மாத்திரம் சென்று வர முடிந்தது.*

குமரவேலின் எதிரில், நீர்ப்பரப்பில் திடீரென்று அடியில் இருந்து ஒருவர் நீரை கீறிக்கொண்டு தலையை வெளியே காட்டினார்.

அவர் வந்த விதம், அவனைப் பார்த்த விதம், குமர வேலை உலுக்கிவிட்டது.

அந்த முகத்துக்குரியவர் சிரித்தார்.

"நீங்க... நீங்க..."

"நான் யார்னு கேக்கறியா?''

"ஆமாம்..''

"நான் யார்ங்கறதை மட்டுமா... நீ யார்ங்கறதையும் தெரிஞ்சுக்கத்தானே இந்த ஆமைப்பாறைக்கே வந்துருக்கே. என் கூட வா சொல்றேன்!'' என்றபடி அந்த மனிதர் ஆமைப்பாறை மேல் ஒரு தவ்வு தவ்வி ஏறி நின்றார்.

'வா..' என்று சொல்லி விட்டு ஏறி நிற்கிறாரே? ஏதோ மைதானத்தில் நின்று கொண்டு அழைப்பது போல ஒரு தொனி வேறு. சுற்றிலும் தண்ணீர், இதில் எப்படிச் செல்வது? நீந்திவரச் சொல்கிறாரா? குமரவேல் வழக்கம் போல் எண்ணக் குவியலுக்குள் சிக்கி மூச்சுத்திணறத் தொடங்கினான்.

அவர் சிரித்தபடி முகத்து நீரை வழித்து விட்டார்.

அவன் வலது கையை இழுத்துப் பிடித்தார். பின் வருடிக் கொடுத்துவிட்டு, "என் முதுகில் உப்பு மூட்டை மாதிரி தொத்திக்கோ'' என்றார்.

குமரவேலுக்கு அது வேடிக்கையாகவும் விபரீதமாகவும் கூட தோன்றியது. வெறித்தான்.

"உன்னைத்தான்... உம்... என் முதுகுல ஏறு.''

''என்னங்க இது... சின்னப் புள்ளையாட்டம்.''

"அட ஏறுப்பா... அப்பத்தானே நம்ம மலை வீட்டுக்கு போக முடியும்."

"மலை வீட்டுக்கா... அது எங்க இருக்கு?"

"அதைக் காட்டத்தான் கூப்பிடறேன். நீயோ மெட்டிக் கிட்டு நிக்கறியே."

"இல்ல... உங்க முதுகுமேல நான் ஏறினா நீங்க எப்படி என்னை தூக்கிட்டு நீந்துவீங்க?"

"நான் நீந்தப் போறதா உன்கிட்ட சொல்லலியே."

"அப்படின்னா..?"

"ஏறு...என்ன பண்றேன்னு பாரு." அவர் தூண்டிவிட்டு, அவன் கையைப் பிடித்தும் இழுத்தார்.

குமரவேலும் அரைமனதாக முதுகில் ஏறினான். ஈர உடம்பு வழுக்கியது. இருந்தும் அவர் அவனை இறுக்கிப் பிடிபோட்டு பிடித்துக் கொண்டார். அப்படியே இழுத்து ஒரு பெருமூச்சு... பிறகு, 'ஜெய சற்குருதேவா' என்று ஒரு உச்சபட்சகுரலில் சொல்லிவிட்டு விறுவிறுவென்று தரையில் ஒடுவது போல தண்ணீர்மேல் ஓட ஆரம்பித்தார்.

குமரவேல் விக்கித்துப் போய்விட்டான்.

அதிகபட்சம் ஒரு நிமிட நேரம். ஓடியவர் மலைச் சரிவினை தொட்டு முடித்தார். சரிவில் பலவித இடுக்குகள். ஒரு யானை நுழையலாம் என்கிறாற்போல் இடைவெளிகள். அதில் ஒன்றில் நுழையவும் அந்த இடைவெளி வளைந்து வளைந்து எங்கெங்கோ போயிற்று. இறுதியில் ஒரு குகை போன்ற உட்குழிவான இடத்தில் முடிந்தது. அந்த உட் குழிவினுள் மிகப் பெரிய சமதளப் பாறை. அந்தப்பாறை

மேல் பலர் அமர்ந்து கொண்டிருந்தனர். சிலர் சில யோகா சனப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். அந்த கூட்டத்தில் குமரவேலின் நண்பன் கருணாகர வர்மனும் இருந்தான். குமரவேலைப் பார்த்து விட்டு ஓடிவந்தான். ஆள் முற்றிலும் மாறிப் போயிருந்தான். இடுப்பில் ஒரு கோவணம். மற்றபடி உடம்பில் பொட்டுத் துணியில்லை. பார்க்க ஒரு இளம் சன்யாசி போல இருந்தான்.

''கருணா... நீயா..?''

''நானேதான்.. நீ வரப்போறதா குருநாதர் சொன்னார்.''

''என்னடா இது கோலம்? அங்க கல்யாண வீட்ல உன்னைக் காணாம எல்லாரும் தத்தளிச்சுக்கிட்டு இருக் காங்க. நீ என்னடான்னா இங்க கோவணத்தோடு சாமியா ராட்டம் என்ன பண்ணிகிட்டிருக்கே?"

''என்ன பண்ணிட்டிருக்கேனா? இனிமேதான் நான் வாழவே போறேன். வா, குருநாதரை அறிமுகம் செய்து வைக்கறேன்.''

"குருநாதரா, யார் அவர்?"

''வா காட்றேன்..." கருணாகரவர்மன் குமரவேலை கையைப் பிடித்து இழுத்துச் சென்றான். அவனை அங்கே முதுகில் தூக்கிக்கொண்டு தண்ணீரின் மேல் ஒரே ஓட்டமாய் ஓடி வந்தவர் அவனை சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து விட்டவர்போல ஒதுங்கிக் கொண்டார். சுற்றி இருப்பவர்கள் எல்லோருமே கோவணத்துடன் தான் இருந்தனர். ஆளுக்கு ஆள் விதவிதமான பயிற்சியில்

இருந்தனர். ஒருவன் மலைப்பாறை சரிவில் ஒரு பல்லிபோல் கைகளைப் பற்றிக் கொண்டு ஏறிக் கொண் டிருந்தான். எதுவும் மனித சக்திக்கு உட்பட்ட காரியமாகவே தெரியவில்லை.

"கருணா, எல்லாரும் என்ன பண்றாங்க?"

"குருநாதர் சொல்லிக் கொடுத்ததை செய்துகிட்டிருக் காங்க."

''இவங்கல்லாம் யார்?''

"என்னை மாதிரிதான். உன்னை மாதிரிதான்."

"இது என்ன பயிற்சி?''

''இதுதான் மனுஷனாப் பொறந்தவன் செய்ய வேண்டிய பயிற்சி. சில பயிற்சிகள் செய்தா ஒரு மாசத்துக்கு கூட பசியே எடுக்காது.''

''உளறாதே... எப்படி அங்க கல்யாணப் பொண்ணை தவிக்க விட்டுட்டு இங்க உன்னால் எனக்கென்னன்னு இருக்க முடியது?"

''கோவிச்சுக்காதே... எனக்கு கல்யாண வாழ்க்கை, குடும்பம்,குழந்தை இதுல எல்லாம் நம்பிக்கையோ பிடிப்போ இல்லை.''

"இல்லாமதான் கல்யாணத்துக்கு சம்மதிச்சியா?''

"இங்க வர்றதுக்கு முந்திவரை அந்த உலக வாழ்க்கை தான் எனக்கு பெருசா தெரிஞ்சுது. எப்ப என் குருவை பார்த்தேனோ அப்பவே அது பெரிசில்ல. இங்க யோக

வாழ்க்கை வாழ்றதுதான் பெருசுன்னு தெரிஞ்சுபோச்சு.

''கருணா... நீயா இப்படி எல்லாம் பேசறே! உனக்கு ஒண்ணும் ஆயிடலையே?''

"நீதான் இப்ப சராசரி மனுஷனாட்டம் பேசறே.உன்னை சுமந்துகிட்டு ஒருத்தர் தண்ணி மேல நடந்து வந்துருப் பாரே."

"நடந்தா... ஓடின்னு சொல்லு... ஆமா அது என்ன மாயம்?''

"அது ஒரு மாயமும் இல்ல. அவர் 'இலஹிமா' சித்தில கில்லாடி. நூறு கிலோ வெயிட்டோட பஞ்சாட்டம் மாற அவரால முடியும்."

"இலஹிமா சித்தியா?''

"ஆமாம்... இது ஒரு அஷ்டமாசித்துக்கூடம். நீ வந்துருக்கறது சாதாரண இடமில்லை. இந்த மலையும் மலையை சுற்றியுள்ள ஏரியும் இருக்கே, இதுக்கு புராணச் சிறப்பு உண்டு. ஒருகாலத்துல இது பொய்கையா இருந்தது. இந்த பொய்கைலதான் ஆறு சுடர் விழுந்து அதுல இருந்து முருகன் பிறந்தானாம். அவனை சீராட்டி வளர்த்த கார்த்திகைப் பெண்கள் தங்கியிருந்த இடம்தான் இந்த குகை. அஷ்டமாசித்தியை அன்னை பார்வதிகிட்ட இருந்து பெற்ற அவங்க, அதை இங்க தவம் செய்ய வந்த ஒரு முனிவருக்கு உபதேசிச்சாங்களாம். அவர் வழிவழியா பல ருக்கு சொல்லிக் கொடுக்க அதோட தொடர்ச்சியில இப்ப இங்க இருக்கறவர்தான் என் குரு சரவணானந்த சாமி.''

கருணாகரவர்மன் புராணத் தொடர்போடு சொன்னதைக் கேட்டு நம்புவதா இல்லை, அதை கேட்டு சிரிப்பதா என்றே தெரியவில்லை குமரவேலுக்கு.

அவன் கருணாகரவர்மனின் விளக்கத்தில் ஒன்றும் புரியாதபடி குழம்பிப் போய் நிற்கவும்,

"வாப்பா... வந்துட்டியா." என்று ஒரு குரல் கேட்டது. கருணாகரவர்மன் சொன்ன அந்த சரவணானந்த சாமிதான் அவனை வரவேற்றபடி வந்தவர்.

"சாமி... நீங்க சொன்ன மாதிரியே என் சினேகிதன் என்னைப் பார்க்க வந்துட்டான்."

"சந்தோஷம்... இந்த இடமும் மனுஷங்களும் உனக்கு அன்னியமாவும் அதிசயமாவும் இருக்கா?''

"ஆமாம்... இதெல்லாம் கனவா இல்லை நிஜமான்னே தெரியல... கனவு இல்லையே?''

"நீ கனவுன்னு நினைச்சா கனவு. நனவுன்னா நனவு."

"என்ன சாமி நீங்க இப்படி ஒரு பதிலை சொல்றீங்க.''

"இது சித்துக்கூடம்... இங்க எதை எப்படி நினைக்கிறோமோ அப்படி ஆயிடுவோம். கேட்டது எதுவா இருந்தாலும் கிடைச்சிடும்.''

"அது எப்படி?''

"சொன்னா உனக்கு புரியாது.''

"இல்ல. நீங்க சும்மா சொல்றீங்க..''

''சரி.. அப்படித்தான்னு வெச்சுக்கயேன்.''

அவர், அவனுடன் வாதிக்க விரும்பாத மாதிரி நறுக் நறுக்கென்று பதில் சொன்னது அவனை என்னவோ செய்தது.

"கருணாகரா, பேசிகிட்டு இரு. நான் கொஞ்சம் வெளிய போய்ட்டு வரேன்." அவர் அவனிடம் சொல்லிவிட்டு சற்று விலகிச் சென்றார். சென்ற நொடியில் மாயமாய் மறைந்து கண்ணில் தெரியாதபடி, காற்றில் கரைந்துவிட்ட மாதிரி ஆனார்.

"கருணா, என்னப்பா இது? பெரிய மாயாஜாலமா இருக்கே! எங்க இப்ப பேசின அவர்?"

"காற்றாய் மாறி அவர் விரும்பற இடத்துக்கு போயிருப்பார்.''

"காற்றா மார்றதா?''

"ஆமாம் குமரவேல். அவர்தான் சொன்னாரே... இங்க நாம எது நினைச்சாலும் அது நடக்கும்.. இது சித்துக் கூடம்.''

"அத விடு... அது எப்படி ஒரு மனுஷன் காத்தா மாற முடியும்?"

''மாறினதைப் பார்த்துமா இந்த கேள்வி?''

"இல்ல. இது ஏதோ மாயாஜாலம்.''

''சரி, மாயாஜாலம்னே சொல். ஆனா, அந்த மாயா ஜாலம்னா என்னன்னு தெரியுமா உனக்கு?''

"அது எப்படி தெரியும், ஆமா உனக்கு தெரியுமா?"

''தெரிஞ்சுக்கத்தான் இங்க இருக்கேன்.''

"உனக்கென்ன பைத்தியமா? அழகான பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா வாழறத விட்டுட்டு...''

"முட்டாள் அந்த வாழ்க்கை அதிகபட்சம் இன்னும் ஐம்பது வருஷமோ, இல்லை அறுபது வருஷமோதான். ஆனால் இங்க கிடைக்கற யோக வாழ்க்கை அழிவே இல்லாதது. தெரியுமா உனக்கு?''

"இப்படி கோவணத்தோட ஆண்டியா ஆயிரம் வருஷம் வாழ்ந்தாலும் அதுல என்னடா பிரயோஜனம்? அப்பா, அம்மா,அக்கா,தங்கை,ஆசை,பாசம்னு புகழ் செல்வம்னு வாழறது வாழ்க்கையா? இல்லை இப்படி கோவணத்தோட உக்கார ஒரு நாற்காலிகூட இல்லாத ஒரு குகைல ஆதிவாசி மாதிரி வாழறது பெருசா? எப்படி கருணா மாறினே? உனக்கு என்ன குறைன்னு நீ இப்படி ஆனே. யார் உன் புத்தியை இப்படி மாத்தினது?"

"தலைகீழா சொல்றே.. என்னோட பாவம் நான் சராசரி மனுஷனா பொறந்து ஆசாபாசங்களுக்குட்பட்ட மனுஷனா வாழ்ந்தது. அந்த பாவ கர்மம் ஒரு முடிவுக்கு வரவும், நான் செய்த புண்ணிய பலன்கள் என்னை இந்த காட்டுக்கு தள்ளி வந்தன. என் குருநாதரையும் என் கண்ணுல காட்டின. அவர் மூலமா நான் அழியாத பல வித்தைகளை கத்துக்கப் போறேன். ஜமீன் செல்வத்துக்குகூட ஒரு நாள்

அழிவு உண்டு. ஆனா இங்க எங்களுக்கு கிடைக்கப் போற அஷ்டமா சித்துக்கு மட்டும் அழிவே கிடையாது.''

கருணாகரவர்மன் ஒரு மேடைப் பேச்சாளன், பிரசங்கம் ஒன்றில் பேசுகிற மாதிரி பேசினான்.

குமரவேலுக்குள் ஆச்சரியக் குமிழ்கள்.

செல்ஃபோனும் கையுமாய் காரில் ஸ்டைலாக வந்திறங்கும் கருணாகரவர்மனா இப்படி பேசுவது? கவளம் கவளமாக புகைவிட்டபடி ஸ்டைலாக சிகரெட் பிடிக்கும் அவனா இன்று இப்படி! இது எப்படி நடந்தது? சில சாமியார்கள் மூளைச்சலவை செய்து விடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறான். படித்துமிருக்கிறான். அந்த சாமி யாரும் இவனை அப்படி ஏதாவது செய்து இப்படி பேச வைத்து விட்டாரா? ஏகப்பட்ட பேர் இந்த காட்டுப் பகுதிக்கு வந்து காணாமல் போனதுகூட இந்த சாமியாரின் மூளைச் சலவையால்தானா? அப்படி காணாமல் போன வர்கள்தான் இங்கே யோகப் பயிற்சி, தியானம் என்று ஆளுக்கு ஆள் சுற்றி என்ன நடக்கிறது என்பது கூட தெரியாதபடி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களா? இவர்களோடு சேர்ந்து கருணாகரனும் மாட்டிக் கொண்டு விட்டானே. இவனை எப்படி இங்கிருந்து மீட்பது?

குமரவேலுக்கு வேறு விதமாய் எண்ணங்கள் ஓடியபடியே இருந்தன.அதுவும் சமீப காலமாய் சாமியார்கள் தொடர்பாய் எவ்வளவோ தகவல்கள். கோவைக்கு அருகில் ஒரு சாமியார் இளைஞர்களாய் பார்த்து மனம் மாற்றுகிறார்.

அவர்களும் கறுப்பு வேட்டி சட்டை என்று அணிந்து கொண்டு வீட்டை விட்டு அவரிடமே போய்ச் சேர்ந்து விட்டனர். பெற்றோர்கள் எவ்வளவு அழைத்தும் அவர்கள் திரும்பி வரத் தயாராய் இல்லை.

கம்ப்யூட்டர் காலத்தில் நடுத்தட்டு வகுப்பினர்கூட மாருதி காரும், இண்டிகாவும் வாங்கி வலம்வரும் நவீன யுகத்தில் இப்படியும்கூட மனிதர்கள் இருப்பதை எண்ணி அப்பொழு தெல்லாம் குமரவேல் மிக ஆச்சரியப் பட்டதுண்டு.

ஆனால் அந்த மாதிரி ஒரு அனுபவம் தனக்கே ஏற்படப்போகிறது என்று அப்பொழுது அவன் நினைத்துக் கூட பார்த்திருக்க மாட்டான்.

இப்பொழுது...

ஆச்சரியம் பொங்கி வழிந்தது. அதேசமயம், பயமாகவும் இருந்தது. அடேயப்பா எவ்வளவு பேர்! எவ்வளவு பேர்!

இவர்களைக் காணாமல் ஒரு பக்கம் போலீஸ் டிபார்ட் மென்ட்டே மண்டையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் என்னடாவென்றால் இங்கே உடம்பை வளைத்துக் கொண்டு யோகம், தியானம் என்று முடங்கிக் கிடக்கி றார்களே! எப்படி இதுநாள் வரை வாழ்ந்த வாழ்க்கையை இவர் களால் புறக்கணிக்க முடிந்தது? அடுப்பின் மேல் பாத்திரத்தில் இருக்கும் பால் எப்படிப் பொங்கும், அப்படிப் பொங்கியது குமரவேலின் மனது.

கருணாகரவர்மன் புன்னகையோடு பார்த்தபடியே இருந்தான்.

"என்னென்னவோல்லாம் தோணுது இல்ல உனக்குள்ள?'

"ஆமாம்... காலேஜ் லைஃப்லையேகூட கிளாஸ் போரடிக்கக் கூடாதுன்னு ரொம்ப எதிர்பார்ப்பே. எப்பவும் கலகலன்னு இருக்கத்தான் விரும்புவே. யாராவது கோவில் பிரசாதம்னு கொடுத்தா ஆயிரம் கேள்வி கேட்பே. நெத் தியில் விபூதி வச்சுக்க எவ்வளவு தூரம் யோசிப்பே. நீயா இங்க இப்படி கோவணத்தோட?"

"இவ்வளவுதான் கேள்விகளா...? இல்லை இன்னும் இருக்கா?"

"என்னத்தச் சொல்ல, எப்படி கருணா மனசு மாறினே? அப்படி என்ன இருக்கு இங்க?"

"என்ன இல்லை இங்கே?"

"என்ன இல்லையா.. உட்கார ஒரு நாற்காலி இருக்கா? குடிக்க ஒரு காபி கிடைக்குமா. கால் நீட்டி படுக்க ஒரு படுக்கை. அவ்வளவு ஏன்? மேடு பள்ளம் இல்லாதபடி ஒரு சமதளம் முதல்ல இங்க இருக்கா?"

"உடம்போட சௌகர்யங்களை மனசுல வெச்சுக்கிட்டே கேள்வியா கேக்கறியே."

"வேற எதை மனசுல வெச்சுக்கிட்டு கேக்க சொல்றே. உடம்பு திடம்தானே முக்கியம்?"

உடம்பு திடம் இல்லைன்னு உனக்கு யார் சொன்னது? அங்க பார்."

கருணாகரவர்மன் அங்கே சற்று தூரத்தில் அமர்ந்திருந்த

ஒருவரைக் காட்டினான். அவன் காட்டுவது தெரிந்தோ என்னவோ அவர் வாயைத் திறந்தார். ஐந்து விரல்களை உள்ளே விட்டார். ஒரு அதிசயம் போல அவரது கை அப்படியே வாயினுள் நுழைந்து மார்புவரை போனது. கிட்டத்தட்ட கை முட்டி வரை வாயினுள் போய் விட்டது. குமரவேலுக்கு சுருக்கென்றது. அவர் வாயினுள் விட்ட கையை வெளியே எடுத்தார். கூடவே வயிற்றின் குடல் பாகத்தை அவர் விரல்களால் பிடித்து இழுத்து வந்திருந்தார்.

''ஐய்யோ..!''

குமரவேலின் கண்கள் காதுவரை விரிந்தன.

அவர் வயிற்றுப் பாகத்து மொத்தக் குடலையும் ஆட்டையும் மாட்டையும் உரிக்கையில் குடலை தொட்டுத் தூக்கி அப்புறப்படுத்துகிற மாதிரி கைகளில் பிடித்தபடி அவனைப் பார்த்தார். பிறகு அப்படியே திரும்ப உள்ளே தள்ளி விழுங்கினார். குடலும் வயிற்றுப் பாகத்துக்குள் சென்று பழையபடி ஆனது.

''பாத்தியா?"

"இது. இது என்ன மாயாஜாலம்?"

"புரியாதவரை எல்லாம் மாயாஜாலம்தான். புரிஞ்சுட்டா ஒரு சாதாரண பயிற்சி."

"ஆனாலும் கொடுமையா இருக்கே.''

"இதுவா கொடுமை? உடம்பைப் புரிஞ்சுக்கிட்டு அதைக்

கட்டி ஆள்ற சாதுர்யம் இது."

"இல்ல. இது சாதுர்யம் இல்ல. வேற ஏதோ கண்கட்டு."

"கண்கட்டு செய்யறவங்க எதுக்கு குமரவேல் இப்படி சிரமப்பட்டு யோக நிஷ்டை எல்லாம் செய்யணும்?"

"நீ என்ன சொல்றே?"

"உன்னை கேள்வி கேட்கவே விட வேண்டாமே. நீ சொல்ற அந்தக் கண்கட்டால உன் வாயைக் கட்றதோ இல்லை மனசை மாத்தறதோ பெரிய விஷயமா?"

கருணாகரவர்மன் அடுக்கடுக்காய் சரியான பதில் கேள்விகளையே கேட்டான். குமரவேலும் கொஞ்சம் சமா தானமானமாதிரி விழித்தான்.

"சரி, நீ எப்படி இதை எல்லாம் பெரிசா நினைக்கறே? அத மட்டும் சொல்."

"அத எப்படி சொல்வேன்? எப்ப ஒரு மனுஷர் தண்ணி யில் நடக்கறத பார்த்தேனோ அப்பவே எனக்கு உலகத்து லயே அதுதான் பெரிய விஷயமா பட்டுச்சி. ஒரு தெரு நாய்கூட எப்படியோ அலைஞ்சு திரிஞ்சி சாப்ட்டு உயிர் வாழ்ந்து பிறகு செத்துப் போயிடுது. எப்படியாவது உயிர் வாழறதா பெருசு? இந்த மாதிரி நினைச்சுப் பார்க்க முடியாததை சாதிக்கறது தானே பெரிசு."

"வாஸ்தவம்தான்... உனக்கு அதிசயமா பெரிய விஷ யமா தெரிஞ்ச அதே விஷயம் எனக்கு பயமூட்டக் கூடிய ஒரு மாயாஜாலமாதான் தெரிஞ்சிச்சு. அதான் நான்

கேள்வியா கேட்டுகிட்டு இருக்கேன். நீ பதிலா சொல்லி கிட்டிருக்கே."

"சரியா சொன்னே... ஒருவன் ஆசிரியனா இல்ல மாண வனாங்கறது அவன் ஒரு விஷயத்தை எப்படி பாக்கறாங்கற துலதான் இருக்கு. ஒரு பாம்பு தூங்கிக்கிட்டு இருக்கு. அதை பழுதுன்னு நினைச்சா தாண்டிப் போயிகிட்டே இருப்போம். ஆனா ஒரு பழுதையே பாம்பா நினைச்சுட்டா ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது இல்லியா?"

"அப்ப எல்லாமே பாக்கறதுலதான் இருக்கா?"

"நிச்சயமா."

"எப்படி உன்னால் மட்டும் இந்த விஷயத்தை பயமில்லாம அபூர்வமான ஒண்ணா பார்க்க முடிஞ்சிச்சு?"

"இதுக்கு ஒரே பதில்தான். அதுதான் காலநேரம்."

"காலநேரமா?"

"ஆமாம். காலநேரம்தான்."

"இப்படி மொட்டையா சொன்னா எப்படி?"

"என் அறிவுக்கு இப்ப அவ்வளவுதான் சொல்ல முடியும். இதுக்கு மேல புரியணும்னா என் குருநாதரைக் கேள்."

அவன் சொல்ல, அவரும் வர சரியாக இருந்தது.

"என்னப்பா... நிறைய சந்தேகங்களா?"

"ஆமாம்..."

"நாங்கள்லாம் மனிதர்களா, இல்ல பேய் பிசாசு களான்னா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்."

"உன் சௌகர்யத்துக்கு நினைச்சுக்கோயேன்."

"என்ன சாமி பதில் இது? உங்களை நான் தப்பா நினைச்சா நீங்க வருத்தப்பட மாட்டீங்களா?"

"நீ நினைக்கறதுக்கு நான் எதுக்கு வருத்தப்படணும்?"

"எப்படி வருத்தப்படாம இருக்க முடியும்? ஒரு மனுஷன் வாழறதே நாலு பேர் நல்லவிதமா பேசலைன்னாலும் தப்பா பேசிடக்கூடாதுன்னுதானே?"

"அது ஒரு கூட்டமா வாழற மனுஷ சமூகத்துல. இங்க எங்க இருக்கு சமூகம்?"

"இவ்வளவு பேர் இருக்கீங்களே, நீங்கள்லாம் யார்?"

"உலகத்துல இருக்கற கோடிக்கணக்கான உயிர்கள்ல நாங்களும் ஒரு உயிர். பிறப்பு இறப்பு. பின், பிறப்பு இறப்புங்கற வட்டத்துக்குள்ள சிக்கிச்சிக்கி திரும்பத் திரும்ப பிறக்காம பிறப்புக்கும் இறப்புக்கும் ஒரு முடிவை தேடிகிட்டு இருக்கற ஜீவன் முக்தர்கள்."

"பிறப்பும் இறப்பும் நம்ம கைலயா இருக்கு? அது சாமி கைலன்னுல்ல சொல்வாங்க."

"எந்த சாமி கைல..."

"அது... அது.. தெரியல."

"அப்ப உன் கைல எதுதான் இருக்கு?"

"என் கைல... என் கைல..."

"அதுவே தெரியலியா?"

"நீங்க சொல்ல வர்றதை நேராவே சொல்லுங்க."

"நான் எப்ப கோணலா கேட்டேன். உன் கைல என்ன இருக்குன்னுதானே கேட்டேன்."

"உடம்புல தெம்பு இருக்கு. மனசுல எண்ணங்கள் இருக்கு. எதையும் ஏன் எதுக்கு எப்படின்னு கேக்கற அறிவிருக்கு"

"இதெல்லாம் இருந்துட்டா போதுமா?"

"போதாதா?"

"உன்னைவிட பல அறிவு குறைந்த, நீ அற்பம்னு நினைக்கிற பூச்சியும் புழுவும் மேலானது. சந்தோஷமா வாழுதுன்னு சொல்றேன் ஒத்துக்கறியா?"

"எப்படி?"

"பசிக்கு சாப்பிட்றதும், சாப்ட்டது செரிக்கறதுக்காக பறந்து திரியறதும், திரும்ப சாப்பிட்றதும் தவிர அதுக்கு வேற வேலை இருக்கா?"

"இல்லை... ஆனா, அப்படி வேற வேலை இல்லாம இருக்கறது ஒரு மேலான விஷயமா?"

"அப்ப எது மேலான விஷயம்? ஓடி ஓடி சொத்து சேர்த்துட்டு கடைசியில எடுத்துட்டு போக முடியாமலும்

எப்ப சாவோம்னுகூட தெரியாமலும் இருக்கறதா?''

''உங்க கேள்வியில் பெருசா அர்த்தம் இருக்கற மாதிரியும் இருக்கு. அதேசமயம் குழப்பற மாதிரியும் இருக்கு.''

"உன் கைல என்ன இருக்குன்னு கேட்டேன். வேதாந்தி மாதிரி என் கைல என்ன இருக்கு, எல்லாம் சாமி கைல தான்னு சொன்னே. சரி அது எந்த சாமின்னு கேட்டேன் முழிக்கறே.தொட்டுத்தொட்டு உனக்கு பதில் சொல்லிகிட்டே வந்தா குழப்பற மாதிரியும் இருக்குன்னு சொல்றியே.''

"அப்ப நான் சாமி கைலன்னு சொன்னது தப்பா?''

"சாமி கைலன்னா எந்த சாமி கைல? அதை சொல்.''

''ஏதோ ஒரு சாமி கைலன்னு வெச்சுக்குங்களேன்.''

"அதைகூட தெளிவா சொல்லமுடியலையா உன்னால?''

"இதெல்லாம் என்ன அஞ்சும் மூணும் எட்டுன்னு பளிச்சுன்னு கூட்டிச் சொல்ற விஷயமா, இல்ல வெளிச்சத்துல பார்த்து சொல்ற விஷயமா? எனக்கு பெரியவங்க எனக்கு சொன்னதை நான் சொல்றேன்.''

"அப்ப பெரியவங்க சொல்ற எல்லாத்தையும் எடுத்துக்கற நபரா நீ?"

"அப்படி இல்லை... அவங்க சொன்ன எவ்வளவோ விஷயங்கள்ல சந்தேகமும் இருக்கு."

"அப்ப அதுலகூட ஒரு முழுசான நிலைப்பாடு இல்லன்னு சொல்லு.''

"ஆமாம்... எதுதான் உண்மை? இது என் நிலை மட்டுமில்ல. இங்க எல்லாரோட நிலையும் இதுதான்.''

"அதிகப்பிரசங்கமா பேசாதே. உன்னைக் கேட்கும் போது உனக்கு மட்டும் பதில் சொல்.''

"சரி எனக்கு மட்டும் சொல்றேன். நமக்கு மேல ஒரு சக்தி இருக்குன்னு நான் நினைக்கறேன். அதை அல்லான் னாலும் சரி, ஏசுன்னாலும் சரி, இல்லை ஈஸ்வரன்னாலும் சரி.''

"அப்ப உனக்கு, உனக்கு மேல ஒரு சக்தி இருக்குங் கறதுல சந்தேகம் இல்லையா?''

"இல்ல... அதுலகூட பாதிதான் நம்பறேன். மறுபாதில குழப்பம்தான் இருக்கு. மனுஷன் குரங்குல இருந்து பிறந்த வனாமே?''

"டார்வின் தியரியால வந்த குழப்பமா?''

"ஆமாம்... லட்சம் வருஷத்துக்கு முந்தி நாம குரங்கா இருந்தோமாம். இன்னும் லட்சம் வருஷம் கழிச்சு நிச்சயம் இப்ப இருக்கற தோற்றத்துல இருக்க மாட்டோமாம். ஜீன்ஸ், மரபணு, குரோமோசோம், அப்படி இப்படின்னு விஞ்ஞானி கள் பேசிக்கறதை பார்க்கும்போது கடவுள் நம்பிக்கையேகூட கொஞ்சம் ஆட்டம் காணத்தான் செய்யது.''

"அப்ப உன் வரையில் விஞ்ஞானிகள்தான் இந்த உலகத்துலயே மேலான அறிவுடையவங்க, அப்படித் தானே?''

"ஒரு விதத்துல அப்படித்தான். அறிவியலை நான் குறைச்சு மதிப்பிட தயாரில்லை. ரேடியோவும், தொலை பேசியும், டி.வி.யும், மின்சாரமும்,மோட்டார் வாகனங்களும் சாதாரண விஷயங்களா என்ன?"

"முடிவான ஒரு பதில் சொல்... உனக்குள்ள தூக்கலா இருப்பது விஞ்ஞானப் பார்வையா, இல்லை ஆன்மீகப் பார்வையா?"

"சத்தியமா சொல்றேன். விஞ்ஞானப் பார்வைதான். மூடு மந்திரமான ஒண்ணை எப்படி நம்பி ஏற்கமுடியும்? ஆனா விஞ்ஞானம் அப்படி இல்லை. ரேடியோ பாடுதுன்னா எப்படி பாடுதுன்னு நிரூபிக்க முடியும். அந்த மாதிரி நீங்க தண்ணிமேல் நடந்ததை நிரூபிக்க உங்களால முடியுமா?"

"நான் இப்ப உன்னை திருப்பி கேட்கறேன். நான் ஏன் உன்கிட்ட நிரூபிக்கணும்?"

"அப்பதானே நம்ப முடியும்?"

"நீ நம்பாதே... நம்பறதுக்கு சௌகர்யமான விஞ்ஞானத் தையே பெரிசா நினை. எனக்கு ஒரு குறையும் அதனால வரப்போறதில்லை."

"நீங்க நழுவப் பாக்கறீங்க."

"ஆமாம் நழுவத்தான் பாக்கறேன். இப்படி நழுவும் போதே பார்த்தியா இங்க எவ்வளவு பேர்!"

"அதுதான் எனக்கு கவலையைத் தருது. இவங்கள இழந்து இவங்க குடும்பத்துல எவ்வளவு கஷ்டப் படறாங்க

தெரியுமா?"

"இருக்கலாம். ஆனா இவங்களோ அஷ்டமாசித்துங்கற புதையலைப் பார்த்துட்டும் நாங்க சும்மா போனா அது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் தெரியுமான்னு திருப்பி யில்ல கேக்கறாங்க.''

"அப்படி என்ன இருக்கு அஷ்டமா சித்தியில?''

"அது தெரிஞ்சா நீ இப்படியா பேசிக்கிட்டிருப்பே?''

"தெரிவியுங்களேன்... அப்புறமா பேசறேனா பேசலை யான்னு பாப்போம்."

"உன்னை ஒருத்தர் சுமந்துகிட்டு தண்ணிமேலயே நடந் தாரே, அதைப் பார்த்துமா இப்படி ஒரு கேள்வி?''

"அதுல எதாவது ட்ரிக் இருக்கலாம் இல்லயா?''

"சரி... அந்த ட்ரிக் என்னன்னு நீயே கண்டுபிடி. கண்டு பிடிச்சுட்டு அப்புறமா வா.. பேசுவோம். இப்ப உபயோக மான காரியங்கள் நிறைய இருக்கு. நான் வரேன்.''

சரவணானந்தசாமி பட்டென்று வெட்டிக்கொண்டு கிளம் பினார்.

"குமரவேல் நானும் வரேன். உனக்கு நேரம் வரலைடா. அதான் கண்ணால பார்த்தும் உனக்கு பார்த்தது தப்பா தெரியுது. இனியும் உன்கூட பேசிக்கிட்டிருந்தா நேரம் விரயமாகறது தான் மிச்சம். நான் கிளம்பறேன். ஆங்.. நீ திரும்பிப் போகணும் இல்ல."

"என்ன கருணா, நான் உன்னை கூட்டிகிட்டு போக

வந்துருக்கேன். அதை தெரிஞ்சுக்க."

"இல்ல... நான் வரலை. நான் வேற. நாங்க வேற. நீங்கள்ளாமும் வேற. நீ போ."

"டேய். அந்த பொண்ணோட எதிர்காலத்தை யோசிச்சு பார்த்தியா? அவ ஏற்கெனவே கல்யாணமாகி கல்யாணத் தன்னிக்கே கணவனை இழந்துட்டவ. இப்ப இந்த கல்யா ணத்துல கல்யாணத்துக்கு முந்தியே உன்னை இழக்கறது எந்த வகைல சரி?"

"இல்லை... அவளுக்கு எந்த இழப்பும் ஏற்படாது. அவ்வளவுதான் இப்ப நான் சொல்வேன்."

"என்னடா பேசறே. இந்த கல்யாணமும் நின்னு போனா அவளுக்கு கல்யாணம்னே ஒண்ணு நடக்காதுடா. யார் அவ கழுத்துல தாலி கட்டுவாங்க சொல்லு பார்ப்போம்."

"ஏன், இவ்வளவு பேசற நீ தாலி கட்டலாமே."

"நானா? என்னடா உளர்றே!"

"ஏன், மாட்டியா?"

"டேய்... நான் ஒரு சாதாரண மெஷின் ஆப்பரேட்டர். அவ ஜமீன்தாரிணி. ஏணி வெச்சாலும் எட்டுமா?"

"லாஜிக் எல்லாம் விஞ்ஞான புத்திக்குதான். காலத்துக்கு அது சுத்தமா கிடையாது. காலம் நினைச்சா எது வேணா எப்ப வேணா நடக்கும். இப்ப நானில்ல, சராசரி வாழ்க்கை வாழ்ந்துகிட்டிருந்தேன். இப்ப பார். இந்த உலகைவிட ஏன் கடவுளுக்கு சமமானவனா, தப்பு... தப்பு... கடவுளாவே

அஷ்டமாசித்துவால நான் மாறப் போறேன். இதை நீ நினைச்சாவது பார்த்திருப்பியா? அடுத்த பிரதமர் ராஜீவ் காந்திதான்னு இந்தியா மட்டுமில்ல. உலகமே நம்பிச்சு... ஆனா என்னாச்சு... ஒரு சதைக்குவியலா அவரை கூடையில் அள்ளி எடுக்க வேண்டியதாப் போச்சு.

இளவரசி டயானாவை எடுத்துக்கோ. இப்ப நினை வாலயத்துல ஒரு தேவதையால்ல இருக்காங்க. வேர்ல்ட் டிரேட் சென்டரைத்தான் நினைச்சுப் பாரேன். விமானம் வந்து மோதி தரைமட்டமாகும்னு யாராவது சொன்னா ஒரு பர்சன்டாவது நம்பியிருப்போமா? சிரிச்சு கேலி செய்துருக்க மாட்டோம்?''

"இதை எல்லாம் எதுக்கு சொல்றே கருணா?''

"வாழ்க்கைல லாஜிக் பாக்காதே. லைஃப்ல லாஜிக்கே கிடையாது. ஒரு விஷயம் இப்படித்தான் நடக்க முடியும்னு நினைக்கறது நம்ம நம்பிக்கையா மட்டும்தான் இருக்க முடியும். ஆனா அதுக்கு எதிராவும் புதிராவும் எவ்வளவோ விஷயங்கள் நடந்துகிட்டுதான் இருக்கு. அங்கதான் நாம புரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்கு.''

"கருணா நீ பெரிய வேதாந்தி மாதிரி பேசறே. நீ காணாமபோய் இரண்டு நாள்கூட ஆகலை. அதுக்குள் ளையா இவ்வளவு மாற்றம் உன்கிட்ட!''

''என்னைப் பார்த்து வியக்காதே. உனக்கு இங்க இருக் கவோ, அஷ்டமாசித்து பத்தி தெரிஞ்சுக்கவோ, அதுக்கான விருப்பமோ மனநிலையோ சுத்தமா இல்லை. ஆகையால

நீ இங்க இருந்து கிளம்பு.''

"அப்ப நீ வரமாட்டியா?''

''சரி, இனி உனக்கு நேரா சொன்னா புரியாது. சிதம்பரம்!'' கருணாகரவர்மன் பதிலோடு ஒருவரை பெயர் சொல்லி அழைத்தான். அவரும் ஏதோ மிக அருகில் அமர்ந்திருந்த மாதிரி உடனே அவனருகில் வந்தார்.

"இவனை எங்க அரண்மனைல விட்டுட முடியுமா?"

"அதுக்கென்ன, விட்டுட்டா போச்சு. வாங்க தம்பி.''

அவர் அழைப்போடு அவன் கையைத் தொட்டார். திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்தான் குமரவேல். சட்டென்று ஏரிக்கரையில் ஒரு புதரில் அவனது ஹேண்ட் பேக்கை வைத்தது ஞாபகத்தில் தோன்றியது.

"ஐயா..என்னை முதல்ல கரைக்கு கூட்டிக்கிட்டுபோங்க. அங்க என்னோட பேக் இருக்கு. அதை எடுக்கணும்.

"அப்படியே ஆகட்டும்."அவர் கண்களைச் சிமிட்டியபடி சிரித்தார்.

"ஆமாம்.. நீங்களும் இந்த காட்டுக்கு வந்து காணாம போன நபர்தானா?''

"நீ எப்படி நினைக்கறியோ அப்படி.''

''யாரும் எந்த கேள்விக்கும் நேராவே பதில் சொல்ல மாட்டீங்களா?''

"இதுவும் ஒரு நேர் பதில்தான் நண்பா."

"அதை நான் சொல்லணும். பேச்சோடு சில அடிகள் தான் நடந்த மாதிரி இருந்தது. ஆனால் ஏரிக்கரையருகில் புதர் அருகே இருவரும் நின்றபடி இருந்தனர்.

"கரையில் இருக்கிறோம். நீ உன் பையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றாயே." அவர் கேட்டார்.

"அதுக்குள் கரைக்கு வந்துட்டோமா? இவ்வளவு வேக மாவா? நம்பவே முடியலியே."

"ஒரு சித்தன் உன்னோடு இருக்கும்போது உன்னாலும் எதையும் நம்பமுடியாது. நீ சொல்வதையும் யாரும் நம்ப மாட்டார்கள்."

அவர் பதிலைக் கேட்டபடி புதரைப் பார்த்தான். பேக் அப்படியே இருந்தது. உடனே அதை வெளியில் எடுத் தான். திறந்து உள்ளே பார்த்தான். பகீர் என்றது. உள்ளே அந்த பிரசன்னஜாலம் புத்தகத்தைக் காணவில்லை.

"என்ன நண்பா?"

"இதுல ஒரு பழையபுத்தகம் வெச்சுருந்தேன்.காணோம்."

"பிரசன்னஜாலமா."

"ஆமாம்... ஆமாம்.. அதேதான். உங்களுக்கு எப்படி தெரியும்?"

"அஷ்டமாசித்து பொய்கைக்கு ஒருவர் வருகிறார் என் றால் ஒன்று அவரை குருநாதர் அழைத்து வரவேண்டும். இல்லாவிட்டால் அந்த புத்தகம் வழி காட்ட வேண்டும். காகபுஜண்ட ஸ்வாமிக்கு எங்களை எல்லாம் மிக பிடிக்கும்.

அடிக்கடி எங்களைப் பார்க்க பொய்கைப் பக்கம் வருவாரே."

"அது சரி அதை எடுத்தது யார்னு தெரியலியே."

"வேறு யார், அந்த காக்காச்சாமியாதான் இருக்கும்."

"என்னமோ நேர்ல பார்த்த மாதிரி பேசறீங்களே."

"என்ன நடந்தது என்று பார்க்க வேண்டுமா?"

"நடந்ததைப் பார்க்கறதா? எப்படி, வீடியோ படம் எடுத் துருக்கா என்ன?"

"வீடியோ படம் காலத்தைச் சிறை பிடிக்கும். ஆனால் அஷ்டமாசித்து அந்த காலத்தைக் குடைந்து முன்னும் பின்னுமே போய்வர வழிகாட்டும்."

"முன்னும் பின்னும் போய்ட்டு வரதா, எப்படி?"

"என் அருகில் வா. என்னை கட்டிக் கொண்டு நில்."

அவர், அவனை அழைத்து கட்டிக் கொண்டு நின்றார்.

"இன்று சப்தமி திதியில் பனிரெண்டரை நாழிகை கழிந்த நிலையில் கால ஓட்டத்துடன் சென்றபடி இருக்கும் நாம், கால ஓட்டத்தின் வேகத்தைப் போல பல மடங்கு வேகத்தில் இப்பொழுது பின்னால் செல்லப் போகிறோம். அதாவது கிட்டத்தட்ட ஒரு சிலநாழிகை நேரங்கள் பின் னால் செல்லப் போகிறோம். அதாவது சப்தமி திதியில் பதினோராவது நாழிகைக்கும் பதினொண்ணரை நாழி கைக்கும் இடைப்பட்ட நேரத்தில். அப்பொழுதுதான் நீ இந்த ஏரிக்கு வந்து கரையில் இந்த பேக்கை ஒளித்து

வைத்திருக்க வேண்டும். சரிதானே?''

"ஆமாம். நீங்க நாழிகைன்னு சொல்றீங்க. நான் அதை ஒரு மணி நேரம் பின்னாலேன்னு சொல்வேன்.''

''சரி அந்த நேரத்துக்கு செல்வோமா?''

''கழிஞ்ச நேரத்துக்குள்ள செல்றதா?''

"ஏன் முடியாதா? சென்ற பிறகு சொல்..'' கேட்ட மறு வினாடி அவரைக் கட்டிக் கொண்டு நிற்கும் அவனுக்கு பரபரவென்று இருந்தது.

திடீரென்னு அவர் காணாமல் போய் தோளில் ஹேண்ட் பேக்குடன் குமரகுரு மட்டும் நின்று கொண்டிருந்தான் ஏரிக்கரையில், ஆனால் மனநிலையில் மட்டும் ஏகப்பட்ட மாறுதல். எப்படி, எப்படி நான் இங்கே வந்தேன் என்கிற கேள்வி. அதேசமயம் ஆமை முதுகுப்பாறை நோக்கி செல்ல வேண்டும். அதன் மீது ஏறி நின்று கொண்டு 'ஓம்'என்று சொல்ல வேண்டும் என்கிற ஆசை.

அதற்கு தயாரானது போல பேக்கை புதரில் கொண்டு சென்று வைக்க, அதிலிருந்து இரண்டு கீரிப்பிள்ளைகள் சீறிக் கொண்டு ஓடின.

குமரவேல் திரும்பி நடந்து ஏரியில் இறங்கினான். ஒவ்வொரு அடியாக நடந்து முழுவதுமாக மூழ்கிய நிலையில் நீந்தி ஆமை முதுகுப்பாறை நோக்கி நெருங்க ஆரம்பித்தான். பாறையினை நெருங்கி அதன் மேலும் தவ்வி ஏறி நின்றான்.

குளிர்காற்று உடம்பைப் பிடித்து ஆட்ட உதட்டால் ஊ.. ஊ.. என்று ஊதிக் கொண்டான். 'ஓம்' என்று சொல்ல விழையும் முன் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

கரையில் காக்காச்சாமி அவன் பேக்கை வெளியே எடுத்து குடைந்து கொண்டிருந்தது; பிறகு கச்சிதமாக அந்த புத்தகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பேக்கை திரும்ப புதரில் போட்டு விட்டு கிளம்பியும் சென்றது. பார்த்துக் கொண்டே நின்றவனுக்கு எதிர்த்து கத்தவோ பேசவோ துளியும் தோன்றவில்லை.

தொடர்ந்து உடம்பில் ஒரு பரபரப்பு. குமரவேல் அதே புதர் அருகில் சிதம்பரம் என்கிற அந்த சாமியுடன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன. அந்த காக்கைச்சாமி எடுத்ததை பார்த்தாயா?"

"பார்த்தேன். இப்ப கொஞ்சம் முந்தி நான் பார்த்தது முன்பு நடந்த சம்பவத்தையா?''

"அதுலயும் சந்தேகமா?''

"அது எப்படி ஒரு சம்பவம் இரண்டு முறை நடக்க முடியும்?"

"அது நடந்தது ஒரே ஒரு முறைதான். அந்த ஒரு முறை காலத்தில் பதிவாகிவிட்டது. அதைத்தான் நீ சினிமா படம் பார்ப்பது போல திரும்பிச் சென்று பார்த்தாய்.''

"காலத்தில் திரும்பிச் செல்வது என்பது எப்படி சாத்தியம்?"

"போய்விட்டு வந்து கேள்வி கேட்டால் எப்படி நண்பா?"

குழப்புறீங்க ஐயா. இப்படி பின்னையும் முன்னையும் போக முடியும்னா நான் என் அம்மா வயித்துல பிறக்கற துக்கு முந்தி எங்க இருந்தேன் எப்படி இருந்தேன்னுல்லாம் தெரிஞ்சுக்க முயற்சிப்பேனே.''

"தாராளமாக முயற்சி செய். எவ்வளவு ஆண்டு பின் னோக்கி வேகப்பயணம் செய்ய முடியுமோ செய். காலத்தை நேரத்தை புரிந்துகொள்.''

''காலத்தோடு பயணம் செய்யத்தான் முடியும். அதை எதிர்த்து முன்னும் பின்னும் எப்படி போக முடியும்?"

''நல்ல கேள்விதான். இப்படிக் கேட்டதால்தான் நான் விடையை கண்டுபிடித்து, சுலபமாக முன்னும் பின்னும் பயணிக்கிறேன். நீயும் கேள். விடை கிடைக்கும்.''

"விடை எல்லாம் கிடைக்காது. குழப்பம்தான் மிஞ்சும். ஒண்ணுமே புரியல. மீறி கேள்வி கேட்டா காலத்துக்கு லாஜிக் கிடையாது அது இதுன்னு எதையாவது சொல்லி என் வாயை அடைச்சுடுவீங்க."

''சரி.. சரி, நேரமாகிறது உன்னை அரண்மனையில் விட வேண்டுமல்லவா?''

"ஆமாம்... பெரிய கலெக்டர் நீங்க.. ஆயிரக்கணக்கான ஃபைலுங்கள்ல கையெழுத்துப் போடணும் பாரு.''

''என்ன நண்பா, கலெக்டர்தான் கால நேரத்தை பொன்னாக நினைக்க வேண்டுமா? நான் நினைக்க

கூடாதா.''

"இல்ல தெரியாமத்தான் கேக்கறேன். அந்த மலைக் குகைல அப்படி என்ன வேலை இருக்கு உங்களுக்கு?"

"அதைச் சொல்வது பெரிதில்லை. ஆனால் உனக்குத் தான் புரியாது."

"உண்மைதான். இவ்வளவு நேரம் எவ்வளவோ பேசினீங்க. எதுவும்தான் புரியலியே.''

"ஆச்சரியம்தான். பிரசன்னஜாலம் உன் கைக்கு வந்தும் அதைப் பயன்படுத்தத் தெரியாத ஒரு பேதையாகவே நீ இருந்து விட்டாய். நீ சராசரி மனிதனாய் வாழ்ந்து சுகதுக்கக் கர்மங்களை நிறைய கழிக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் உன்னதமானதெல்லாம் உனக்கு உன்னதமாய் தெரியவில்லை. அதை ஏதோ மாயாஜாலம் என்றும் முட்டாள்தனம் என்றும் சொல்லி தவிர்த்து விட்டாய்.''

''முதல்ல இந்த மாதிரி செயற்கையா தூயதமிழ்ல பேசறத விடுங்க... எனக்கு எரிச்சலா இருக்கு. சாதாரணமா பேசினா என்ன?''

"சரி... இனி நான் பேசவே இல்லை. போதுமா?''

"அதைச் செய்யுங்க... ஆமா இப்ப நாம எங்க போய் கிட்டு இருக்கோம்?"

''கருணாகரவர்மனின் ஜமீன் அரண்மனைக்குத் தான்.''

"அதுக்கு இப்படி நடந்துபோனா எப்ப போய் சேர்றது?''

"அதோ வந்து விட்டதே..."

அந்த மனிதர் கையை நீட்டிக் காட்ட எதிரில் ஜமீன் மாளிகையும் தெரிந்தது. அந்த மாளிகையின் பின்புறமுள்ள காட்டுக்குள் நின்று கொண்டிருப்பதே அப்பொழுதுதான் புரிந்தது.

"என்ன அதிசயம்! இரண்டு நிமிஷம்கூட நடந்த மாதிரி தெரியல. ஆனா அதுக்குள்ள ஜமீன் மாளிகைக்கு வந்து சேர்ந்துட்டோமே. எப்படி?"

"நான்தான் முன்பே சொன்னேனே. ஒரு சித்தன் உடன் இருந்தால் உன் வரையில் நம்ப முடியாததே நடக்கும். நீ சொல்வதையும் யாரும் நம்பமாட்டார்கள்."

"உண்மைதான். முதல்ல கோர்வையா நான் எல்லா விஷயத்தையும் சொல்வேனான்னே தெரியல. அவ்வளவு குழப்பமா இருக்கு. உங்க பேச்சும் விளக்கங்களும்."

"அதுதான் எங்களுக்கும் நல்லது. சரி நண்பா நான் வருகிறேன்."

"ஒரு நிமிஷம்."

"என்ன?"

"எப்படி என்னை இவ்வளவு சீக்கிரமா கூட்டிகிட்டு வந்தீங்க? ஏதோ ஒரு விமானத்துல ஏறி இறங்கினாகூட இந்த வேகம் சாத்தியமில்லையே!"

"எப்படி என்றால்..."

"தயவுசெய்து இந்த ஒரு விஷயத்தை மட்டுமாவது புரியும்படி சொல்லக்கூடாதா?"

"சொல்கிறேன். எனக்கு நேரிடையாக எப்படி சொல்வது என்றுதான் தெரியவில்லை.''

"இதுல நேரிடை,எதிரிடைன்னுல்லாம் இருக்கா என்ன?''

"சரி. எனக்கு தெரிந்த விதத்தில் சொல்கிறேன். புரிந்து கொள்ள முடிகிறதா என்று பார்.''

"சொல்லுங்க."

"இங்கேயும் சரி, கானகத்திலும் சரி, வேறு எங்கேயும் சரி, நிலப்பரப்பில்தான் தங்குதடைகள், மேடுபள்ளங்கள். ஆனால் ஆகாயம் எங்கும் ஒன்றேயல்லவா?"

"ஆமாம்.''

"அந்த ஆகாயத்தில் நாம் காற்றாய் மாறினால் தீர்ந்தது பிரச்சினை.''

"காற்றாய் நாம் மாறுவதா, எப்படி?''

"ஒன்றைத் தெரிந்து கொள் நண்பா. காற்றாய்த்தான் முன்பு இருந்தாய், ஒரு மனிதக்கருவில் நுழையப் போய் இந்த மனித உடம்பு உனக்கு கிடைத்தது. அப்படியும் காற்றால்தான் உயிர் வாழ்ந்தாய். காற்று ஒரு நாள் நின்று விட்டால் இறந்து விட்டதாக கூறுகிறோம். காற்றுதான் எல்லாம். காற்றுதான் நீரைத் தன்னுள் வைத்திருக்கிறது. காற்றுதான் நெருப்பைத் தன்னுள் வைத்திருக்கிறது. காற்று தான் அந்த நெருப்பையும் நீரையும் கொண்டு கல்லையும் மண்ணையும் உருவாக்கி அதை நிலமாக்கியது. கண்ணுக்கு தெரியாதபடி அது பரவிக் கிடக்கும் விதம்தான் ஆகாயம்.

காற்றுதான் எல்லாம்.''

அவரின் விளக்கம் கேட்டு குமரவேலுக்கு தலையைச் சுற்றியது.

''போதும், போதும். நான் உங்ககிட்ட கேட்டது தப்பு. என்னை விட்ருங்க. எப்படி வந்தோம்னா ஒரு வரில பறந்து வந்தோம்னோ,பாய்ஞ்சு வந்தோம்னோ சொன்னா தேவலை, அதை விட்டுட்டு காத்தா மாறின்னு ஆரம்பிச்சு. போதும் சாமி... போதும்.''

"சரி புரியும்படியாகவே சொல்கிறேன். காற்றாய் மாறி பறந்து வந்தோம்."

"எங்க, பறந்த மாதிரியே தெரியலயே!''

"அது தெரியாது. இந்த உடம்புக்கு அந்த வேகத்தை உணரும் சக்தி கிடையாது.''

"சரி போதும். ஆளை விடுங்க."

"நல்லது நண்பா, நான் வருகிறேன்."

"ஒரு நிமிஷம். நான் உங்களைப் பாக்க விரும்பினா எப்படி சந்திக்கிறது?''

"நீ விரும்பமாட்டாய்."

"இல்ல. விரும்பினேன்னு வையுங்க.''

"இல்லை நீ விரும்பமாட்டாய். உன்னால் விரும்பவும் முடியாது."

''ஒரு வேளை விரும்பினால்.''

"அப்பொழுது என் குருநாதரை நினைத்துக் கூப்பிடு. அவர் வந்து அழைத்துச் செல்வார்"

"அவரை கூப்பிட்றதா? எங்க நின்னு எப்படிக் கூப் பிட்றது கொஞ்சம் தெளிவா சொல்லுங்க."

"மனசுக்குள்ள நினைத்தால் போதும்."

"அது எப்படி?"

குமரவேல் தொட்டுத் தொட்டு கேள்வியாக கேட்க அது அந்த மனிதரை கோபப்படுத்தியிருக்க வேண்டும். அவனை உற்றுப் பார்த்தார்.

பார்வையா அது?

அவன் மனதை அப்படி ஊடுருவியது. அவனும் அப்படியே ஒடுங்கிப்போனான். பார்த்துக் கொண்டே சில வினாடிகள் நின்றான். அப்படியே மெல்ல மயங்கவும் செய் தான்.

"தூங்கு நண்பா, தூங்கு. ஆழ்ந்து தூங்கு. உலகைப் பற்றிய புதிர்கள் உன் வரையில் புரியாத புதிர்களாகவே இருக்கட்டும். நீ அனுபவித்து முடிக்க வேண்டிய கர்மங்கள் தீரும்போது தன்னால் ஞானஒளி உன்னுள் தோன்றும். அதன்பின் அது உனக்கு வழி காட்டும். அப்பொழுது இப்படி கேள்விகள் கேட்டு விடையை பெற வேண்டிய அவசியமே உனக்கு இருக்காது. எல்லா விடைகளும் தானாய்ப் புரியும். வாழ்க்கைப் புதிர்களுக்கு விடை, வெளியே ஒருவர் சொல்லும் பதிலில் இல்லை. அது

உன்னுள் ஒளிந்திருக்கிறது. அதுவாய் ஒரு நாள் மௌன மாய் வெளிப்படும். வெளிப்படும் வரை பொறுத்திரு.''

அவர் அவன் தூங்குவதைப் பார்த்தபடியே தனக்குள் ளான எண்ணங்களோடு விலகி நடந்தார். சில அடிகள் தான். அதன்பிறகு அப்படியே காற்றில் கரைந்து மறைந்தும் போனார்.

# 10

***அ****ஷ்டமாசித்தியின் இலஹிமா ஆற்றல் பலரிடம் வெளிப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்து அவர்களை கடவுளாக கருதி தொழும் ஒரு நிலை பின்னர் உருவானது.*

*கடல் நீர்மேல் இயேசுநாதர் நடந்து காட்டியது, இலஹிமா கைவரப் பெற்றதால்தான்.*

*பாற்கடல் மேல் பரந்தாமன் பாம்பின்மேல் பள்ளி கொண்டிருப்பதும் இலஹிமாவால்தான்.*

*ஒன்றுக்கு பலவாய் முகம் கொண்ட நாகங்கள் உதான வாயுவை உள்வாங்கி விடும் செயலாற்றலால் தான் கடல் நீரின் மேல் மிதக்கின்றன.*

*நாம் சுவாசிக்கும் காற்றில் உள்ள வாயுக் கலவையை பிரித்து அறிந்து, பின், அதில் உரியதை உள் அடக்கி, விடவேண்டியதை வெளியே விட்டு, செய்யப்படும் இந்த செயல் பயிற்சியால் மிகச் சுலபமாகி விடும்.*

*ஒரு சைக்கிளை ஓட்டுபவர் ஒரே சமயத்தில்*

***பேலன்ஸ் செய்து பெடலை மிதித்து, பிரேக்கைப் பிடித்து வேகத்தை கூட்டியும் குறைத்தும் பலவிதமாய் செயல் படுகிற மாதிரியான ஒரு விஷயமே இது.***

***அதே நபர் சைக்கின் ஓட்ட கற்றுக் கொள்ளும் போது ஒன்றைச் செய்யும் போது இன்னொன்று பிடிபடாமல் எத்தனை முறை கீழே விழுந்திருப்பார்!***

***இந்த வாயுப் பயிற்சியும் அப்படியே. இதற்கு உரிய குருநாதரிடம் முறையான விதத்தில் பயிற்சி பெற்று யோகங்களை கற்றுக் கொள்வதும் மிக முக்கியம்.***

குமரவேல் கண் திறந்து பார்த்தபோது ஜமீனுடைய கெஸ்ட் ஹவுசில் இருப்பது தெரிந்தது. அருகிலேயே ஹோல்டான் பேக்கும் இருந்தது.

எழுந்து வெளியில் வந்து பார்த்தான். நிசப்தமான சூழ் நிலையில் ஜமீன். தோட்டக்காரன் ஒருவன் களை கொத்தி யபடி இருந்தான். குமரவேல் பார்ப்பதைப் பார்த்தவனாய் களை கொத்தியை போட்டுவிட்டு அருகில் வந்தான்.

"நான் எப்படி இங்க?"

"இது நான் கேக்க வேண்டிய கேள்வி. ஆமா நீங்க மயங்கி விழ இந்த தோட்டம்தான் கிடைச்சுதா?"

"நான் மயங்கி விழுந்தேனா?"

"பின்ன... தூங்கிக்கிட்டு இருந்தீங்களோ?"

தோட்டக்காரன் ஒரு மாதிரி தொனியில் கேட்டான். குமரவேல் திரு திருவென்று முழித்தான்.

"நல்ல பாம்பும், சாரையும் பிரண்டுகிட்டு திரியற தோட்டம் இது. போகட்டும்னு தூக்கி கட்டடத்துக்குள்ள போட்டேன். எம்புட்டுதான் உசுப்பறது எழுந்திரிச்சா தானே. ஃபுல்லா தண்ணி அடிச்சாலே இப்படித்தான். பாரு கண்ணு முழிச்ச பிறகும் இன்னும் தெளியாததை."

அவன் பேசியதில் இருந்து ஒரு விஷயம் புரிந்தது. அவன் உதவி செய்திருக்கிறான். ஆனால் தான் எப்படி அங்கே கிடந்தோம் என்பது மட்டும் துளியும் ஞாபகத்திற்கு வராமல் ஒரு கும்மிருட்டுக்குள் நிற்கிற மாதிரியே இருந்தது.

"ஆமா, கல்யாணத்துக்கு வந்தீங்களோ?"

"இ... இ... இல்ல. அ... ஆமாம்."

"இன்னும் போதை தெளியலியா?"

"இல்ல. போதை எல்லாம் இல்ல."

"எந்த ஊரு?"

"ஊரு... ஊரு..."

"சரி சரி, இன்னும் நீ தெளியலேன்னு நல்லா தெரியுது. அப்படியே பொடி நடையா புறப்படு."

குமரவேலும் அதன் பிறகு பதில் பேசவில்லை. பேசவும் முடியவில்லை. நடக்க ஆரம்பித்தான்.

ஜமீன் தோட்டம் பெரிதாகத்தான் இருந்தது. பெரிய கிணறு ஒன்று பம்ப் செட் மோட்டார் ஓட்டத்துடன் தண்ணீரைக் கொட்டியபடி தெரிந்தது. குண்டுமல்லி, கனகாம்பரம்

என்று நிறைய பூச்செடிகள்.

குமரவேலுக்கு முகம் கழுவிக் கொண்டால் தேவலை என்று தோன்றியது. மெல்ல மோட்டார் தண்ணீரை இறைத்துத் தள்ளும் தொட்டி அருகே சென்றான்.

குபுகுபு என்கிற நீர்ப்பாய்ச்சல். கண்ணாடி உருண்டையாக குமிழ்கள்.

ஹோல்டான் பேக்கை ஒரு முனையில் வைத்து விட்டு தண்ணீர் ஓட்டத்தில் காலை வைத்து சிலீர் என்கிற உணர்விற்கு உள்ளாகி கைகளால் முகத்தில் தண்ணீரை வாரி அடித்துக் கொண்டான்.

புதியதாய் ஒரு தெம்பு உடம்பில் பிரண்டு நிமிர்கிற மாதிரி இருந்தது.

அப்படியே காட்டில் வன இலாகா ஜீப்பில் இருந்து இறங்கியதும் ஞாபகத்தில் கசிந்தது.அதன்பின்.. அதன் பின்.. யோசிக்க முடியவில்லை. தலையை வலித்தது. பேப்பரில் எழுதியதை ரப்பர் வைத்து அழித்தது போல அதன் பிறகு நடந்ததை நினைவுபடுத்திக் கொள்ளவே முடியவில்லை. துண்டுத் துண்டாய் ஏரிக்கரை, ஆமை முதுகுப்பாறை, குகைப்பிரவேசம்,கார்த்திகைப் பெண்கள் இருந்த பொய்கை, அங்கே கருணாகரவர்மனைப் பார்த்தது எல்லாம் வரிசையாய் மெல்ல நினைவில் படர்ந்தது. கூடவே அதெல்லாம் நிஜமாய் நடந்ததன் அனுபவமா, இல்லை உறக்கத்தில் தோன்றிய கனவா என்கிற கேள்வியும் சேர்ந்தே எழும்பியது.

தலையை சிலிப்பிக் கொண்டு குழப்பமான எண்ணங் களோடு அங்கிருந்து நடக்கப் போனவனை புதிதாய் ஒலிக்கத் தொடங்கிய, ஒரு வித கொலுசுச் சத்தம் தடுத்து நிறுத்தியது.

திரும்பிப் பார்த்தான். கிணற்றை நோக்கி ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள். நடுவில் பூச்செடிகள் பூதாகரமாய் வளர்ந்து குமரவேலை அவள் பார்த்து விடாதபடி மறைத் துக் கொண்டிருந்தன.

பார்க்க மிகுந்த அழகுடன் பளிச்சென்று பட்டுப் புடவை யுடன் தெரிந்த அவளை எங்கோ பார்த்தது போல் தெரிந்தது.

அவளோ மெல்ல நடந்து கிணற்று விளிம்பின் அருகே சென்று நின்றாள்.

எதற்கு அங்கு நிற்கிறாள் என்று குமரவேல் யோசித்து முடிப்பதற்குள் அவள் கிணற்றுக்குள் வேகமாய் குதித்தே விட்டாள்.

அடக்கடவுளே! தற்கொலையா?

குமரவேல் ஓடினான். சரேலென்று கிணற்றில் பாய்ந் தான். நல்ல வேளையாக அவள் அதிகம் மூச்சுத்திணறி மூழ்கும் முன் அவன் கையில் அகப்பட்டாள். வளைத்துக் கட்டி அப்படியே தூக்கினான். அவன் ஓரமாய் ஒதுங்கி இளைப்பாறினான். அவளோ அவன் பிடியில் இருந்து விடு படுவதற்காக திணறினாள்."

"சொன்னா கேள். என்ன இது பைத்தியக்காரத்தனம்? நல்லவேளை நான் பார்த்தேன். இல்லேன்னா என்ன ஆகி யிருக்கும் தெரியுமா?'' என்றபடியே அவளை அப்படியே இழுத்துக் கொண்டு வளைவான கல்படிகள் வழியாக மேலே வந்து சேர்த்தான். அவள் அவனை, சுட்டு விடுவது போல பார்த்தாள்.

''கோபமா, நீ நிலாங்கற நித்யமாலினிதானே?"

"நீங்க?"

"நான் கருணாகரவர்மன் கிளாஸ்மேட். அவன் காணாம போய்ட்டான். அதனால கல்யாணம் நின்னுடிச்சு. உன் வரையில் இரண்டாவதுகல்யாணம் இது. இதுவும் நின்னுட்ட வேதனைல இப்படி ஒரு முடிவு எடுத்தியா?''

"என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்?"

''அதான் கல்யாணப் பத்திரிகைல உன் போட்டோ போட்டிருந்ததே.''

"நல்ல ஞாபக சக்திதான். ஆனா என் வேதனையை புரிஞ்சுக்கற சக்திதான் யாருக்கும் இல்ல."

''என்ன வேதனை, கல்யாணம் தடைப்படறதுங்கறது ஒரு கஷ்டமான விஷயம்தான்.அதை நல்லதுக்குன்னு நினைச்சு எடுத்துக்கத் தெரியணும்.''

''உலகத்துல ரொம்ப சுலபமான வேலை என்ன தெரி யுமா?''

அவள் சம்பந்தமில்லாமல் பதில் கேள்வி கேட்டது போல

தோன்றியது குமரவேலுக்கு. என்ன என்கிற மாதிரி பார்த்தான்.

"இப்படி அட்வைஸ் பண்றதுதான்" என்றாள் அவள்.

அவனுக்கும் அது வாஸ்தவம்தான் என்று தோன்றியது.

"சரி இப்ப என்ன செய்யலாம்கறே.... சாகறதுதான் தீர்வா?"

"உயிரோடு இருந்து அதிர்ஷ்டக்கட்டை, ராசியில்லாத வங்கற ஏச்சு பேச்சை கேட்டு தினம் செத்து பிழைக்கறதை விட ஒரேடியா போயிட்றது நல்லதுதானே?"

"அப்படி யார் சொன்னாங்க?"

"என் அப்பா அம்மாவே அப்படி சொல்லிட்ட பிறகு நான் என்ன பண்ண முடியும்?"

"அவங்க கோபத்துல சொல்லியிருக்கலாம். வா போவோம். நானே அவங்ககிட்ட கேட்கறேன்."

"இல்ல, இனி அவங்க முகத்துல முழிக்கிறதில்லங்கற எண்ணத்தோடதான் வந்தேன். ஒண்ணு சாகணும் இல்லை வாழ்ந்து காட்டணும். வாழ்ந்துகாட்ட வழி இல்லாதப்ப சாகறதுதானே ஒரே வழி."

"ஆமா நான் தெரியாமதான் கேக்கறேன். கருணாகர வர்மன் இல்லேன்னா வேற ஆண்களே உலகத்துல இல்லையா?"

"ஆயிரம் ஆண்கள் இருக்காங்க. ஆனா என் கல்யாண ராசி தெரிஞ்சா போதும் தலைமறைவாயிட்றாங்க.

இன்னிக்குக்கூட வெச்ச முகூர்த்தத்துல எப்படியாவது என் கல்யாணத்தை நடத்த ராஜா நாராயணவர்மா எவ்வளவு முயற்சி செய்தார்! இந்த ஜமீன்ல வேலை பாக்கற ஒரு சாதாரண வேலைக்காரன்கூட தாலி கட்ட முன் வரலை.''

"ஓ! அதெல்லாம்தான் உன்னை இந்த கிணத்தை நோக்கி தள்ளிவிட்டுச்சா?''

அவள் மௌனமாக அவனைப் பார்த்தாள். அவனுக்கு மெல்ல பிரசன்ன விலாச வரிகள் ஞாபகத்தில் வந்தன.

*மேஷமதை மேவித் தொட்ட பாலகா*

*மோட்சகதி உற்றவரின் சினேகத்தால்*

*அஷ்டசித்தும் அடைந்திடுவாய்.*

*தொட்ட நொடி முதலே கிட்ட வரும் சித்து.*

*சித்துக்கு முன்பாக பத்துக்குள் ஒரு நாளில்*

*திருமணபந்தம் நீ கொள்வாய்.*

*வருபவளும் ஓர் அரசி.*

பாடல் வரிகளில் சொல்லப்பட்டது போல இன்னும் பத்து நாட்கள் ஆகவில்லை. ஆனால் அதற்குள் ஒரு பெண் எதிரில் வந்து நின்று வாழ்க்கை தருவார் இல்லை என்று அழுகிறாள் என்றால், இவளுக்கு வாழ்க்கை தருவதன் மூலம் அந்த வரிகள் மெய்யாகி விடுமோ?

அவன் நெற்றியை தேய்த்துக் கொண்டான்.

அவள் மெல்ல நழுவத் தொடங்கினாள்.

"நில்லு. எங்க கிளம்பிட்டே?''

"எங்கையோ போறேன். நீங்க யார் அதைக் கேட்க?"

"உன்னை கேள்வி கேட்க அப்ப எனக்கு ஒரு உறவு வேணும்னு சொல்றியா?''

அவள் மெல்ல அதிர்வுடன் அவனைப் பார்த்தாள்.

"எனக்கு இப்பதான் கால நேரம்னா என்னன்னு புரிய ஆரம்பிச்சிருக்கு. சில மணி நேரம் முந்திதான் ஒரு உப தேசம் கேட்டேன். காலநேரம் எப்படியும் திரும்பும்னு இப்ப அதை பார்க்கறேன்.

"என் வரைல நீ ஒரு அரசி. ஆனா அனாதை போல உன்னை உணர்ந்து பேசறே, அழறே... ஏதோ ஒண்ணு உன்னை இப்படி ஆக்கிடிச்சு. உண்மைல உன் அழகு, செல்வம் இதுக்கு முன்னால் நான் ஒரு தூசு. இருந்தும் உன் நிலையைப் பார்க்கும்போது நீ என்னை விட தூசா யிட்ட மாதிரி தெரியது. போகட்டும் விடு. நான் ஒண்ணு சொன்னா அதிர்ச்சியடையமாட்டியே?"

அவன் கேள்விமுன் அவள் தீர்க்கமான பார்வையை அவனுக்குள் ஊடுருவ விட்டாள்.

"நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன். நான் உன்னை காப்பாத்துவேன்னு நம்பினா நீ என் கூட வா. இல்லேன்னா..''

அவள் வெறித்தபடியே இருந்தாள்.

''என்ன, ஏதோ இந்த நிமிஷம் இங்க நடந்த சம்பவங் களால உந்தப்பட்டு பேசறதா நினைக்கறியா?"

அவள் வெறிப்பு தொடர்ந்தது.

"ஒரு வகைல அது உண்மைன்னாலும் வேறு சில காரணங்களும் இருக்கு. இப்படி ஒருசந்திப்பு பத்தி சூசகமா ஒரு தகவல் எனக்கு முன்னமே வந்தது. அது மட்டுமில்ல, கருணாகரன் இனி உன்னை கல்யாணம் செய்துக்க வாய்ப்பே இல்லைங்கறது எனக்கு மட்டும்தான் தெரியும். ஏன்னா அவன் இப்போ..."

குமரவேல், கருணாகரவர்மன் பற்றி சொல்ல வந்து பின் வேண்டாம் என்கிற முடிவுக்கு வந்தவனாக "ஐ ஆம் சாரி. நான் தேவையில்லாம ஏதேதோ பேசிக்கிட்டு இருக்கேன். உன்னை கல்யாணம் பண்ணிக்க எனக்கு எந்த ஆட்சே பனையுமில்லை. எனக்கு இந்த ராசி, அதிர்ஷ்டம் இதுல எல்லாம் கொஞ்சமும் நம்பிக்கை கிடையாது. அதனால சொல்றேன். அப்புறம் உன் இஷ்டம்."

அவன் சொல்லி முடித்தவனாய் கிணற்றில் குதித்ததில் நனைந்து சொட்டிக் கொண்டிருந்த தலையை ஒரு உதறு உதறிக் கொண்டான்.

அவள் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

"சரி இனி உன் இஷ்டம். நான் வரேன். திரும்ப கிணத்துல மட்டும் போய் குதிச்சுடாதே" என்றபடி அங் கிருந்து நடந்தான். அவள் நின்று அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

# 11

எடை மிக அதிகமாய் உள்ள ஒன்று மிதப்பது என்பது சாத்தியமில்லை என்றே முதலில் மனிதன் நினைத்தான்.

அதன்படி பார்த்தால் எடை அதிகம் உள்ள எதுவும் மிதக்க முடியாது, மூழ்கி விடும். இது பறப்பதற்கும் பொருந்தும்.

ஆனால் பின்னர் அவனே பல ஆயிரம் டன்னில் கப்பல் செய்து கடலில் மிதக்க விட்டான். விமானம் செய்து வானிலும் பறக்க விட்டான். ஒரு பொருள் திடமாய் இருப்பதாலேயே மூழ்கி விடும் என்றில்லை. அது மிதப்பதற்கு ஏதுவான வினைகளைச் செய்தால் தனது எடையை அது அந்த வினையின் போது இழக்கிறது. இது பறப்பதற்கும் பொருந்தும். எண் பேராற்றல் என்னும் அஷ்டமா சித்துவும் அதற்கான வழி முறைகளை கற்றுத் தருகிறது.

உலகின் மிக மேலான ஒரு கல்வி ஒன்று உண்டென்றால் அது அஷ்டமாசித்துதான்.

இதில் பேராசிரியராய் திகழ்பவன் அந்த பரமன் அவனது தட்சிணாமூர்த்தி கோலம் மௌனமாய் நமக்கு எண் பேராற்றலை உபதேசிக்கிறது.

பல சித்த புருஷர்களும் இந்த ஆற்றலில் சிறந்து இறவாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

வாசலிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜாத்தி. குமரவேல் ஆட்டோ ஒன்றில் வந்திறங்கவும் பெருமூச்சு விட்டு வரவேற்றாள்.

"என்னம்மா எனக்காகத்தான் வாசல்லையே நின்னு கிட்டு இருக்கீங்களா?"

"ஆமாம்ப்பா, அந்த சிவசாமி வந்திருந்தார். உன் ஃப்ரெண்ட் காணாம போய் கல்யாணம் நின்னு போய்டுச் சாமே?"

"ஆமாம்மா... நான் வரதுக்குள்ள உனக்கு சேதி வந்து டுச்சா!"

"எனக்கு பயமா போச்சு. நீ பாட்டுக்கு அவனை தேடிகிட்டு காட்டுப் பக்கம் போய்ட்டா என்ன பண்றது?"

"போனேம்மா, ஆனா." பட்டென்று நிஜம் நாவில் வந்து விட்டது. அப்படியே அது உள்ளே சுருண்டும் கொண்டது.

"போனியா! ஐய்யோ, உனக்கு ஒண்ணும் ஆகலையே?"

"அப்படி எதாவது ஆகியிருந்தா இப்ப உன் எதிர்க்க வந்துருப்பேனாம்மா?"

"அதானே, சரி தம்பி, இனி அந்த பேச்சே வேண்டாம். வா, டிபன் பண்ணியிருக்கேன். முதல்ல சாப்பிடு. அப்புறமா மத்தபேச்சு பேசலாம்." அவளும் மளுக்கென்று சப்ஜெக்டை மாற்றியவளாய் அவனை சாப்பிட அழைத்தாள்.

"ஆமா அப்பா எங்க?"

"மார்க்கெட்டுக்கு போயிருக்காரு. அது சரி இன்னிக்கு நீ ட்யூட்டிக்கு போகணும்ல?"

"ஆமாம்மா. லீவெல்லாம் நேத்தோட சரி.''

"உன்னை ஒண்ணு கேக்கணும். அந்த ஜோசிய புத்தகம் எங்கப்பா? நீ எடுத்துக்கிட்டு போய்ட்டியா?''

ராஜாத்தி பேச்சோடு பேச்சாக பிரசன்னஜாலம் புத்தகத் திடம் வந்து நின்றாள்.

"ஆமாம்மா.. அதேசமயம் அதை கொடுத்தவரே எடுத்து கிட்டும் போய்ட்டாரும்மா'' என்றான் படு வேகமாக.

அதிர்ச்சியோடு பதிலுக்குப் பார்த்தாள் ராஜாத்தி.

''என்னம்மா நம்ப முடியலையா?''

"இல்ல தம்பி... நம்பறேன். கொஞ்சம் முந்தி ஒரு பைத்தியக்காரன் வந்து, 'கொடுத்ததை எடுத்துக்கிட்டேன், உன் மகன் வந்தா சொல்லிடு'ன்னு சம்மந்தா சம்மந்தம் இல்லாம சொல்லிட்டு பேனான். எனக்கு அப்ப ஒண்ணும் புரியல. ஆனா இப்ப புரியது.''

"அப்படியா?''

"ஆமாம்ப்பா... போனது போகட்டும் விடு.. அதுதான் புத்தகம்கற பேர்ல இருக்கற ரிஷி ஆச்சே, ரிஷிகளுக்கு எது விருப்பமோ அப்படித்தானே நடந்துக்குவாங்க."

"அங்கதான்மா எனக்கு ஒரு சின்ன சந்தேகம்.''

''என்னாய்யா?''

"அதுல வந்த மாதிரி பத்து நாள்ல எனக்கு ஒரு அரசி பொண்டாட்டியா வரணும் இல்லையா?"

"அட ஆமால்ல. நீ கூட சொன்னியே."

"எங்கம்மா? இதோ இன்னிக்கு பத்தாவது நாள். இன் னிக்கு விட்டா மூணு மாசத்துக்கு முகூர்த்தமே இல்லை."

"விடு... ஜோசியம்னா ஒண்ணு நடக்கும். ஒண்ணு நடக் காம போகும். அது அப்படித்தான்."

"இல்லம்மா. அதை நம்பி ஒரு பொண்ணுகிட்ட பெரிய மாவீரன் மாதிரி பேசிட்டேன். நான் ஒரு கிறுக்கன்மா. ஒரு பக்கம் இதையெல்லாம் நம்பாம சந்தேகப் பட்டுகிட்டே இன்னொரு பக்கம் நம்பியிருக்கேன். என்னை என்னன்னு சொல்றது?"

அவன் தன்னையே நொந்து கொண்ட போது வாசலில் கார் ஒன்று தேங்கும் அரவம்.

அவனும் ராஜாத்தியும் திரும்பிப் பார்த்தனர்.

காரிலிருந்து காந்தமலை ஜமீன்தாரும் பாளையக் காரருமான நிலா என்கிற நித்யமாலினி யின் அப்பாவும் அம்மாவும் இறங்க, கூடவே நிலாவும் அவள் தங்கை சித்ராவும் சேர்ந்து இறங்கினர்.

பின்னாலேயே இன்னொரு கார். அதிலிருந்தும் தடபுட லாய் சிலர் இறங்கினர். ஒரு ஆச்சரியம் போல அவர் களிடையே குமரவேல் குடும்பத்துக்கு மிகப் பரிச்சயமான சிவசாமி இருந்தார்.

"இந்த வீடுதான் வாங்க'' என்று அவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார்.

''என்ன சார் இது? இவங்கள்லாம் எதுக்கு என் வீட்டுக்கு?'' குமரவேல் கேட்டபடியே நிலாவை பார்த்தான். அவள் தலை தாழ்ந்திருந்தது.

''என்ன தம்பி நீங்க, உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கறேன்னு அந்த பொண்ணுகிட்ட சொல்லிட்டு வந்துட்டீங்களே. பதிலுக்கு அவங்களும் முறைப்படி வந்து சம்மந்தம் பேசினாத்தானே மரியாதையா இருக்கும்?''

''சம்மந்தமா?''

"ஆமாம்... சம்மந்தம் பேசத்தான் வந்துருக்கோம். சிவசாமி, நீங்க நகருங்க. மிச்சத்த நான் சொல்றேன்.

நிலாவோட கல்யாணம் நின்னு போன நிலைல ரொம்ப மனசு உடைஞ்சு போனோம்.

அப்ப ஒரு பெரியவர் ஒரு புத்தகத்தை கொடுத்து இந்த புத்தகத்துல உங்களுக்கு விடை இருக்கு கவலைப் படாதீங்கன்னார்.

பிரிச்சுப் பார்த்தா அது ஒரு பழைய ஜோசிய புத்தகம். எனக்கு இந்த ஜோசியத்துல எல்லாம் நம்பிக்கை இல்லை.

ஆனா என் மனைவி நம்பிக்கையோட இதை எப்படி பார்க்கணுமோ அப்படிப் பாத்து பலன் தெரிஞ்சுகிட்டா.

அதன்படி என் மகள்கிட்ட கோபப்பட்டு பேசியிருக்கா, அதுல அப்படித்தான் குறிப்பு வந்துச்சாம்.

*"சினம் கொண்டு சீறிடவே - மணம்*
*கெட்ட மங்கையும் ஓடுவாள் தனிவழியே*
*தனி வழிச் சென்றவள் இனி என் கணவன்*
*இவனென்றே கனிவாய் திறப்பாள்*

*திரும்ப வந்து..."* -ன்னு அந்த பாட்டைகூட பாடிச் சொன்னா. அதன்படியே கோபப்பட்டு இவ பேச என் பொண்ணும் வருத்தப்பட்டுகிட்டு எங்களைவிட்டு யாருக்கும் தெரியாம எங்கையோ போய்ட்டா. அப்புறமா கொஞ்ச நேரம் கழிச்சு திரும்ப வந்து உங்களைப் பத்தி சொன்னா.

எங்களுக்கும் புரிஞ்சு போச்சு. ஆனா நீங்க யாரு என்ன ஏதுன்னு தெரியாதே. திரும்ப அந்த புத்தகத் துலையே விடை தேடுனோம். உங்க முகவரி வந்தது. தேடிகிட்டு வந்தோம்.

வழியில இதோ இவர்கிட்ட அட்ரஸ் காட்டி வீடு எங்கன்னு கேட்டோம். இவர் நேரா இங்கையே கூட்டிக் கிட்டு வந்துட்டாரு. இதுதான் சங்கதி''

ஜமீன்தார் மூச்சு விடாமல் பேசினார்.

குமரவேல் ஸ்தம்பித்திருந்தான்.

அதற்கு மேல் ராஜாத்தியும்.

''என்ன தம்பி, கேவலம் ஒரு ஜோசிய புத்தகத்தை நம்பி ஒரு மாஜி ஜமீன்தார் இவ்வளவு தூரம் வந்துருக்கானேன்னு பாக்கறிங்களா?''

அவரே திரும்பிக் கேட்டார்.

"ஐய்யய்யோ! அப்படி எல்லாம் ஒண்ணும் இல்ல. அதே சமயம் அது புத்தகம் இல்லீங்க. சாமி..''

"உண்மைதான். ஆனா சத்தம் போட்டு நாலு பேர்கிட்ட சொல்ல முடியாது. சொன்னா சிரிப்பாங்க."

"ஏன் சொல்லணும், எதுக்கு சொல்லணும்? சொல்ல வேண்டாம். சொல்லவும் கூடாது.''

''என்ன சொல்றீங்க? புரியல எனக்கு."

''புரியலையா... பரவால்ல போகப் போக தானா புரியும். இன்னும் நேரம் வரலை. அதான்."

"நேரம் வரலையா?''

"ஆமாம்.. நான் கேள்வி கேட்டப்போ எனக்கு இப்படித் தான் பதில் சொன்னாங்க. நான் இப்ப திருப்பிச் சொல் றேன். அவ்வளவுதான்.''

''என்னவோ சொல்றீங்க. சரி.. நாங்க இப்படி வந்ததுல உங்களுக்கு ஆட்சேபனையில்லையே?''

குமரவேல் பதிலுக்கு ராஜாத்தியை பார்த்தான். அவள் நிலாவை நெருங்கி திருஷ்டி கழித்தாள்.

''என்மகன் எவ்வளவு பெரியகாரியம் பண்ணியிருக்கான். இதுக்கு எதிரா பேச நாக்கு வருமா?'' என்றாள் அவளும்.

"அப்ப இன்னிக்கு மோதிரம் மாத்தி நிச்சயம் பண்ணிடு வோம். முகூர்த்தம் சித்திக்கும்போது கல்யாணத்த வெச்சுக் கலாமா?''

''வேண்டாம், இப்பவே இன்னிக்கே கல்யாணத்த முடி யுங்க. இந்த பொண்ணுக்கு இனியும் நல்ல விஷயம் தள்ளிப் போகக்கூடாது.''

ராஜாத்தி அழுத்தமாகச் சொன்னாள்.

ஆமோதிக்கற மாதிரி தோட்டத்தில் காக்கை ஒன்றின் கரையும் குரல்.

குமரவேல் அதைக் கேட்டு சிலிர்த்துப் போயிருந்தான். பொய்கைக் குகையில் கருணாகரவர்மன் பேசியது காதில் எதிரொலித்தது.

''வாழ்க்கையில் அதன் ஓட்டத்தில் லாஜிக் கிடையாது. அது எப்படி வேண்டுமானாலும் திரும்பும். அதில் எதுவும் நிகழும். நிகழும் போது அதை ஏற்பதைத் தவிர மனிதர் களுக்கு வேறு வழியும் கிடையாதா?

அப்படி ஒரு வாழ்க்கையை அதன் போக்கில் போகப் பிடிக்காமல்தான் வாழ்க்கையை தங்கள் வசப்படுத்த அவர்கள் சித்து, யோகம் என்று திசை திரும்பினார்களோ? மெல்ல... மிக மெல்ல குமரவேல் மனதுக்குள் ஒரு ஞான வெளிச்சம் பரவுகிறமாதிரி இருந்தது. ஆனால் அவனையே விழுங்கி விடுவதுபோல பார்த்துக் கொண்டிருந்தாள் அந்த ஜமீன் அரசி.

*முற்றும்*

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in